# புதிய ஜனநாயகம்

ஏப்ரல் 2015
ரூ.10.00





## முத்துக்குமாரசாமி தற்கொலை:

# ஏ-1 யார்?

# அம்மாவா? அக்ரியா?

# கல்விக் கொள்ளையர்களின் அம்மா!

**அரசுப் பள்ளிகளின் கட்டமைப்பை மேம்படுத்த மைய அரசு ஒதுக்கிய 4,400 கோடி ரூபாய் நிதியைப் பயன்படுத்தாமல் கரையான் தின்னவிட்டிருக்கிறது, அ.தி.மு.க. அரசு.**

தமிழக அரசுப் பள்ளிகளின் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு மைய அரசு ஒதுக்கியிருந்த 4,400 கோடி ரூபாயை - கவனியுங்கள்; ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் அல்ல - பயன்படுத்தாமல், அதனைக் கரையான் தின்ன விட்டிருக்கிறது, தமிழக அரசு. டெல்லியில் கடந்த பிப்ரவரி மாதம் நடந்த திட்ட ஒப்புதல் வாரியக் கூட்டத்தில் மனித வள மேம்பாட்டுத் துறையின் இடைநிலைக் கல்வித் துறை செயலர் பிருந்தா சரூப் இது குறித்து தனது கண்டனத்தைத் தமிழக அதிகாரிகளிடம் தெரிவித்திருக்கிறார். பா.ம.க. நிறுவனர் ராமதாசு தமிழக அரசின் இந்த அலட்சியப்போக்கைக் கண்டித்திருக்கிறார். பினாமி ஜெயா அரசோ எதற்கும் பதிலளிக்காமல் கல்லுளி மங்கனாக உட்கார்ந்திருக்கிறது.

“தேசிய இடைநிலைக் கல்வி இயக்கத்தின்படி 2009 முதல் 2012 வரையிலான மூன்றாண்டுகளில் தமிழகத்தில் 1,096 பள்ளிகள் புதிதாகக் கட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால், 2009-10 முதல் 2015 பிப்ரவரி வரையிலான ஆறாண்டுகளில் 125 பள்ளிகள் மட்டுமே புதிதாகக் கட்டப்பட்டுள்ளன. 75 பள்ளிகள் புதிதாகக் கட்டப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 896 பள்ளிகளைக் கட்டுவதற்கான ஆயத்த பணிகள்கூட இன்னும் தொடங்கப்படவில்லை. 2,033 பள்ளிகளைச் சீரமைப்பதற்காக நிதி ஒதுக்கப்பட்ட பிறகும் அதற்கான பணிகள் இன்னும் தொடங்கப்படவில்லை. மாணவிகளுக்கு 44 விடுதிகளைக் கட்ட நிதி ஒதுக்கப்பட்ட நிலையில் இதுவரை 18 விடுதிகள் மட்டுமே கட்டப்பட்டுள்ளன.”

“5,265 பள்ளிகளில் தகவல் மற்றும் தொலைத்தொடர்பு வசதியை ஏற்படுத்த அனுமதி அளிக்கப்பட்டிருந்த நிலையில், இதுவரை 920 பள்ளிகளில் மட்டுமே இந்த வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. மேலும், 1,616 அறிவியல் ஆய்வகங்கள், 1,504 கணினி அறைகள், 1,873 நூலகங்கள், 1,990 கலை/கைத்தொழில் அறைகள் கட்டுவதற்கு அனுமதி அளித்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் இதற்கான பணிகளைத் தமிழக அரசு இன்னும் தொடங்கவில்லை.”

- இவை அனைத்தும் 4,400 கோடி நிதியைப் பெற்றுவிட்டு, கிடப்பில் போடப்பட்டுள்ள பணிகள். அதிகார வர்க்க மெத்தனம், அலட்சியம் என்ற வழக்கமான கண்டனத்திற்குள் இதனை அடக்கிவிட முடியாது. மாறாக, இது அரசுப் பள்ளிகளை ஒழித்துக் கட்டும், தனியார்மயத்திற்கு ஆதரவான தீய நோக்கத்தைக் கொண்ட சதிச்செயல், கிரிமினல் குற்றமிது.

- மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகிலுள்ள எம்.புதுப்பட்டியில் அமைந்துள்ள அரசு கள்ளர் தொடக்கப்பள்ளியின் கைப்பிடிச் சுவர் இடிந்து விழுந்ததில் ஐந்து மாணவ, மாணவியர் படுகாயமடைந்தனர். விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் அருகில் உள்ள வடஅகரம் பஞ்சாயத்து யூனியன் பள்ளியின் அலங்கார வளைவுச் சுவர் இடிந்து விழுந்ததில் ஐந்தாம் வகுப்பு மாணவன் அகால மரணமடைந்தான்.

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்...

அரசுப்பள்ளியின் அவலம்.



புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 30 இதழ்: 6

ஏப்ரல் 2015

உள்நாடு

தனி இதழ்: ரூ.10.00

ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்

(வான் அஞ்சலில்)

ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: முகிலன்

தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561


### அரசு அதிகாரி டி.கே.ரவி மர்மச் சாவு

# இந்த 'வளர்ச்சி'ப் பாதையில் நேர்மைக்கு இடமில்லை!

கர்நாடகா, பெங்களூரு வணிகவரி (அமலாக்கத் துறை) கூடுதல் ஆணையர் ''டி.கே.ரவி-மமாதாரி ஐ.ஏ.எஸ். அதிகாரி'' என்ற 36 வயதேயான நேர்மையான, துணிச்சலான, மூத்த, இளம் அரசு நிர்வாகப் பணி அதிகாரி, புறநகர் கொரமங்களாவிலுள்ள அவரது அடுக்குமாடிக் குடியிருப்பில் கடந்த மார்ச்சு 16-ந் தேதி மர்மமானமுறையில் மாண்டுபோனார். அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்பதற்கான பல பின்னணி அடிப்படை ஆதாரங்கள் உள்ளன. என்றாலும், அவரது உடல்கூறு ஆய்வு செய்யும் முன்னரே, அவரது உடல் மண்ணில் புதைக்கப்படும் முன்னரே அவரது மரணம் குறித்த உண்மைகள் அவசர அவசரமாகப் புதைக்கப்பட்டுவிட்டன. அவரது உடல் மின்விசிறியில் தரைதட்டிய நிலையில் தொங்கிக் கொண் டிருந்தது என்பதைத் தவிர, வேறு எந்தத் தடய ஆதாரமுமின்றி, அடுத்த சில மணிகளில் சம்பவம் நிகழ்ந்த இடத்திற்கு விரைந்த பெங்களூரு நகரப் போலீசு ஆணையர் எம்.என். ரெட்டி ''இது தற்கொலைதான் என்று முதல் பார்வையிலேயே தெரிகிறது. வேறு தில்லுமுல்லுவையும் நாங்கள் காண வில்லை'' என்று உறுதிபட அறிவிக்கிறார். அங்கு வந்த மாநிலப் போலீசு மந்திரி ஜார்ஜ், ''நடந்தது தற்கொலைதான். எனக்குத் தெரிய இரகசிய உலக, நில அபகரிப்புக் குற்றக் கும்பல் மிரட்டல்கள் எதுவும் அவருக்குக் கிடையாது'' என்று பச்சையாகப் புளுகினார்.

ஆனால், கர்நாடகா மக்கள் அனைவரும் அறிந்த பின்வரும் உண்மையோ இரகசியமாக இருக்கவில்லை. சாதிய ஒடுக்கு முறைகளும் நில அபகரிப்பு களும் வீடு மற்றும் வீட்டுமனை மோசடிகளும் நிரம்பிவழியும் பெங் களூருவை அடுத்த கோலார் மாவட்டத்தின் துணை ஆணையராக 2013-2014 ஆண்டுகளில் 14 மாதங்கள் அரசு நிர்வாகப் பணியாற்றிய டி.கே.ரவி அந்த இர கசிய உலக, அரசியல் - கிரிமினல் குற்றக் கும்பல்களின் சமூகவிரோதச் செயல்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை எடுத்தார். அதனாலேயே இந்த எதிரிகளின் அரசியல் நிர்பந்தம் காரணமாக கடந்த ஆண்டு பெங்களூரு வணிகவரி (அமலாக்கத் துறை) கூடுதல் ஆணையராக டி.கே.ரவி மாற்ற பட்டபோது அதற்கு எதிராக கோலார் மாவட்ட மக்கள் தன்னெழுச்சியாகப் போராடினர். பெங்களூருவில் பணியாற்றிய சில மாதங்களில் 400 கோடி ரூபாய் அளவுக்கு வீடுகள்-சொசைட்டிகளின் மோசடிகளைக் கண்டுபிடித்து வசூலித்துள்ளார். இன்னும் பல பெரும் வணிகமுதலைகளின் வரி மோசடி களைக் கண்டுபிடித்து நடவடிக்கைகள் மேற்கொண்டார். இதனால், அம்மா நில மக்கள் ஆதரவைப் பெருமளவு பெற்றிருந்த ரவியின் மரணம் கொலை தான் என்று நம்புகின்றனர்; நீதி நிலைநாட்டப்படவேண்டுமெனப் போராடு கின்றனர்.

இதனால், சமூவிரோத, இரகசிய உலக, அரசியல்-கிரிமினல் குற்றக் கும் பல்களின் கைப்பாவையாகவுள்ள அரசோ ரவியின் மரணத்தில் உண்மையை மூடிமறைக்கவும் மக்கள் கவனத்தைத் திசைதிருப்பவும் பல்வேறு தகிடுதத் தங்களில் இறங்கியுள்ளது. போலீசு அதிகாரிகள் ரவியின் மரணத்தின் தடயங் களை அழிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ள அதேசமயம், போலீசு விசாரணைகள் நடக்கும்போதே அதன் விவரங்களில் சிலவற்றை மட்டும் தெரிந்தெடுத்து முதலமைச்சரும் போலீசு அமைச்சரும் சட்டமன்றத்திலும் பத்திரிக்கைகளிடமும் பரப்பும், விசாரணையைச் சீர்குலைக்கும் வேலைகளைச் செய்கிறார்கள். ரவியின் மரணம் குறித்து சி.பி.ஐ. விசாரணையை எதிர்த்தும் தாமதப்படுத்தியும் மாநிலக் குற்றப்பிரிவு, விசாரணை என்ற பெயரில் ரவி மரணமடைந்த தருணத்தில் அவரது குடி

யிருப்புக்கு வந்து சென்றவர்களின் பதிவையும் சி.சி.டி.வி. ஒளிப்பதிவையும் கைப்பற்றிக்கொண்டது. ரவியின் உடற்கூறு ஆய்வு நடக்கும்போதே அங்கு மாநில முதலமைச்சரும் போலீசு அமைச்சரும் போய் போலீசுக்கு அறிவுறுத்தல்கள் கொடுத்துள்ளனர். ரவி மரணம் குறித்து விசாரணையைத் தொடங்கிய பிறகு மாநிலக் குற்றப்பிரிவு தலைமைப் போலீசு அதிகாரி பிரனோப் மொகந்தி இடத்தில் பிரதாப் ரெட்டி என்பவர் நியமிக்கப்பட்டார்.

எல்லாவற்றுக்கும் மேலாக, குற்றங்களை மூடி மறைக்க வழக்கமாக அரசியல் - போலீசு கிரிமினல்கள் மேற்கொள்ளும் தந்திரமொன்றை கர்நாடகா அரசும் மேற்கொண்டது. பாலியல் வன்கொடுமைக் குற்றமிழைக்கும் அவர்கள், அதற்குப் பலியாகும் பெண்ணை விபச்சாரி என்று குற்றஞ்சுமத்தி தப்பித்துக் கொள்வார்கள். அவர்களின் குற்றங்களுக்குப் பலியானவர்கள் ஆண்களானால், காதல் தோல்வி அல்லது கள்ளத் தொடர்பு காரணமாகத் தற்கொலை என்று கதைகட்டித் தப்பித்துகொள்வார்கள். இதே தந்திரத்தைக் கையிலெடுத்த கர்நாடகா முதலமைச்சர், ''ரவி தற்கொலை செய்துகொண்ட அன்று அவரது சக அரசு நிர்வாகப்பணி பெண் அதிகாரியோடு ஒருமணி நேரத்தில் 44 தடவை அழைத்துப் பேசியுள்ளார். ஆகவே, அவரது தற்கொலைக்குத் தனிப்பட்ட சொந்தக் காரணம் தான் அடிப்படையாக உள்ளது'' என்று அழைப்பு பதிவேடுகளைக் காட்டிப் பத்திரிக்கைகளுக்குச் செய்தியளித்துள்ளார்.

டி.கே.ரவி தனது ரோஹிணி சிந்தூரி தாசரி என்ற சக அரசு நிர்வாகப் பணி பெண் அதிகாரியோடு ஒருதலைக் காதலில் இருந்ததாகவும், அவருக்குப் பாலியல் தொல்லை கொடுத்ததாகவும் மைசூரு விடுதியில் அவரோடு தங்கும்படி நிர்ப்பந்தித்ததாகவும் அவரது கணவரை விவாகரத்து செய்யாவிட்டால் தற்கொலை செய்து கொள்ளப்போவதாகவும் கர்நாடகா போலீசு அதிகாரிகள் கன்னட செய்தியாளர்களை அவசரமாக அழைத்து செய்தி வெளியிடும்படி வற்புறுத்தியுள்ளனர். இரண்டு மாதங்களுக்கு முன்பே ரோஹிணி சிந்தூரி தாசரி ஆந்திர முதல்வரின் நெருங்கிய ஆலோசகரிடம் புகார் செய்ததாகவும், அவரது ஆலோசனைப்படி அவர் கர்நாடகா மாநிலத் தலைமைச் செயலருக்குப் புகார்க் கடிதம் எழுதியதாகவும் காணாமல் போன அக்கடிதத்தைத் தேடிவருவதாகவும் போலீசார் கூறியுள்ளனர். டி.கே.ரவி மரணத்திற்குப் பிறகு கர்நாடகாத் தலைமைச் செயலரையும் குற்றப்பிரிவு போலீசையும் சந்தித்த சிந்தூரி, ரவி தனக்கு அனுப்பிய குறுஞ்செய்திகளையும் மின் கடிதங்களையும் அழைப்புகளையும் கையளித்ததாகக் கூறப்படுகிறது.

டி.கே.ரவி போன்ற ஒரு நேர்மையான அதிகாரி தவறான பாலியல் பண்புகளைக் கொண்டவராகவும் இருக்கலாம்; அல்லது அவரே மர்மமான முறையில் இறந்த பிறகு, சிந்தூரியேகூட தனது எதிர்காலம் கருதி வேறு சிக்கல்களில் சிக்கிக் கொள்வதைத் தவிர்க்க முயலலாம். நாடே ஒரு சமூக ஜனநாயக அடிப்படையைக் கொண்டதாக இல்லாமல், ஆணாதிக்க நிலவுடைமைச் சமூகத்தைக் கொண்டதாகவும் வெட்கக்கேடான, கீழ்த்தரமான அதன் பிற்போக்கு சமூக விழுமியங்களையும் கொண்டிருக்கிறது. இதை அடிப்படையாகப் பயன்படுத்திக் கொண்டு அரசியல் - கிரிமினல் குற்றக் கும்பல்கள் சமூகவிரோதச் செயல்களில் துணிச்சலாக ஈடுபட முடிகிறது என்று கருதவே இடமுள்ளது.




ஐ.ஏ.எஸ். அதிகாரி டி.கே.ரவியின் மர்மச் சாவு குறித்த விசாரணையை சி.பி.ஐ. அமைப்பிடம் ஒப்படைக்கக் கோரி பெங்களூருவில் நடந்த ஆர்ப்பாட்டம். (உள்படம்) டி.கே.ரவி.

ஆனால், டி.கே.ரவி போன்ற ஒரு நேர்மையான, துணிச்சலான அதிகாரிகளுக்கான இடம் விரைவாக அருகி வருகிறது. சமூகவிரோதத் தொழில் மற்றும் அரசியல் - கிரிமினல் குற்றக் கும்பல்களின் பேராசைகள் வெறியாக மாறிவிட்டன. அதன் காரணமாக, அவர்களின் சமூகவிரோதக் குற்றங்களுக்கு உடந்தையாகச் செயல்படும்படி அரசு நிர்வாகப் பணி அதிகாரிகள், போலீசு அதிகாரிகள் மீதான நெருக்குதல்கள் பன்மடங்கு அதிகரிக்கின்றன. இதன் விளைவாக, மக்களுக்கு எதிரான அவர்களின் பாய்ச்சல்கள் இன்னும் கடுமையாகி வருகின்றன. டி.கே.ரவிக்காக வாரக் கணக்கில் கொதித்துப்போகும் தேசிய ஊடகங்கள் முத்துக்குமாரசாமி, தியாகராஜன்களின் தற்கொலைகள் பற்றிக் கண்டுகொள்ளாதபோது, இந்நிலைமைகள் குறித்துத் தமிழக மக்களாகிய நாம் கூடுதலான அரசியல் அக்கறை கொள்ளவேண்டும். •

சகாயம்:

# அதிகார வர்க்க சட்டவாதப் போலி போர்வீரன்!

**கிரானைட் கொள்ளைகளுக்கு உடந்தையாக நிற்கும், பாதுகாக்கும் அரசு அதிகார அமைப்புக்குள்ளேயே நின்று கொண்டு அதனை வைத்தே குற்றவாளிகளைத் தண்டித்துவிட முடியும், அதிகார வர்க்க சட்டமுறைப்படி நடந்துகொண்டால் தன்னை ஒன்றும் செய்துவிட முடியாது என்று சகாயம் நம்புகிறார்.**

மதுரை மாவட்ட கிரானைட் முறை கேடுகள் எனப்படும் இலட்சக்கணக்கான கோடி ரூபாய்கள் மதிப்புடைய கிரானைட் கொள்ளையை விசாரித்து வரும் மதுரை முன்னாள் மாவட்ட ஆட்சியர் உ.சகாயத்துக்கு இரண்டாவது கொலை மிரட்டல் வந்துள்ளது. இதுவும் வழக்கம்போல ஒரு வழக்காகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. முதலாவது கொலை மிரட்டல் வழக்கு என்னவானது என்பது குறித்து யாருக்கும் அக்கறையில்லை. சகாயத்தைக் கிரானைட் கொள்ளைக் குற்ற வாளிகள் கொலை செய்ய முயலுவதாக திருச்சி சிறைக் கைதிகள் பேசிக்கொண்டதாக அவரது குடும்பத்திற்குத் தகவல் கிடைத்ததாகவும், முறைப்படி அரசிடம் அவருக்குப் பாதுகாப்புக் கோரியதாகவும் செய்திகள் வருகின்றன. இதற் கெல்லாம் அஞ்சாமல் அவர் துணிச்சலாகத் தனது கடமையில் கண்ணாகப் பணியாற்று வதைப் போன்ற தோற்றம் முதலாளிய ஊடகங் களால் ஏற்படுத்தப்படுகின்றன. ஆனால், சகாயமோ கத்திமேல் நடப்பவரைப்போல ''சர்க்கஸ்'' காட்டுகிறார். அவர் இப்படிச் செய்வது ''அஞ்சாத துணிச்சல்'' என்று சொல்வதா, இல்லை அதிகார வர்க்க சட்ட முறைப்படி நடந்துகொண்டால் தன்னை ஒன்றும் செய்துவிட முடியாது என்ற முட்டாள்தனமென்று சொல்வதா? விரை விலேயே தெரிந்துவிடும்!

இதையே வேறு கோணத்திலும் பார்க் கலாம். நெல்லையில் வேளாண்துறை அதிகாரி மற்றும் வட்டாட்சியர் ஆகிய இருவர் அடுத் தடுத்து ரயில் முன்பு பாய்ந்து தற்கொலை செய்துகொண்டுள்ளார்கள். கர்நாடகா, கோலாரில் அரசு நிர்வாகப் பணி அதிகாரி மர்ம மான முறையில் தூக்கில் தொங்கினார். கேரளாவில் இன்னொரு அதிகாரி இரு மகன்களோடு கொல்லப்பட்டார். பீகாரில் ஊழலுக்கு எதிராகப் போராடிய பொறியாளர்கள் மஞ்சுநாத் சண்முகம், சத்யேந்திரதுபே ஆகியோர் கொல்லப்பட் டனர். தமிழகத்தில் மணற்கொள்ளைக்கு எதிராகப் போராடிய சமூக ஆர்வலர்கள் சிலர் கொல்லப்பட்டுள்ளனர். குஜராத், ராஜஸ்தான், மராட்டியத்தில் தகவலறியும் சட்டத்தின் மூலம் உண்மைகளை வெளிக்கொண்டுவர முயன்ற சமூக ஆர்வலர்கள், அரசு அதிகாரிகள் சிலரும் கொடூரமாகக் கொல்லப்பட்டுள்ளனர். இவையெல்லாம் ஒருசில எடுத்துக் காட்டுகள்தாம். உ.பி., ம.பி., அரியானாவையும் ஆந்திராவையும் சேர்த்தால் இன்னும் பல கொலைகள், தற்கொலைகள் நடந் துள்ளன. எல்லாம் தொழிலதிபர்கள் மற்றும் அரசியல் கிரிமினல் குற்றக் கும்பல்களால் (மஃபியாக்களால்), கூலிப்படைகளை வைத்து நடத்தப்பட்டவை. தமிழ்நாடு இதற்கு விதிவிலக்கு அல்ல. பாலாறு, காவிரி, தாமிரபரணி மணற்பரப்புகளில் களப் பலியானவர்களைப் பார்த்தாலே இந்த உண்மை புரியும்.

சகாயம் எந்த முறைகேடுகள் மீது விசாரணை நடத்துகிறாரோ அவற்றைச் செய்தவர்கள், அவர்களின் அரசியல் கூட்டாளிகள், அவர்களின் கிரிமினல் குற்றப் பின்னணிகள் பற்றிய உண்மைகள் அரசியல் அறிந்த யாரும் அறியாத இரகசியங்கள் அல்ல. மதுரை மாவட்ட கிரானைட் முறைகேடுகள் மட்டுமல்ல; நாடு முழுவது முள்ள நிலம், கடல், ஆறு, காடுகள், மலைகளில் குவிந்துள்ள கனி மங்கள், தாதுப் பொருட்கள், எரிபொருட்கள் போன்ற பொதுமக் களுக்குச் சொந்தமான இயற்கை வளங்களைக் கொள்ளையடிக் கும் தொழிலதிபர்கள் மற்றும் அரசியல் கிரிமினல் குற்றக் கும்பல் களின் கட்டுப்பாட்டுக்குள், ஆதிக்கத்தின் கீழ் அரசு நிர்வாகம் முழுவதும் போய்விட்டது. இந்தக் கொள்ளைகளுக்குப் பாதுகாப் பாகவும் அவற்றை எதிர்த்துத் தன்னெழுச்சியாகப் போராடும் மக்களை ஒடுக்குவதாகவும் அரசுக் கட்டமைப்பு முழுவதும் மாறி விட்டது.

நாட்டின் இந்த உண்மை நிலைமைகளோடு, சகாயம் விசாரணையில் இருந்து தொகுக்கப்பட்டிருக்கும் பின்வரும் செய்திகளைப் பொருத்திப் பாருங்கள்:

''பி.ஆர்.பி. உள்ளிட்ட கிரானைட் நிறுவனங்களின் மோசடிக்கு மூல காரணமே அதிகாரிகள்தான் என மக்கள் பலரும் சகாயத்திடம் குற்றம் சாட்டினர். பணியில் இருக்கும் வருவாய்த் துறையினர் ஆவணங் களைத் திருத்தவும், கிரானைட் கற்களை வெட்டிப் பாதுகாக்கவும் துணை போகின்றனர். பணியிலிருந்து ஓய்வு பெற்றதும் வருவாய்த் துறை, டாமின் அதிகாரிகள் பி.ஆர்.பி. நிறுவனத்திலேயே வேலைக்குச்

சேர்ந்து விடுகின்றனர். எப்படியெல்லாம் அரசு நிலத்தை மோசடி செய்யலாம் என இவர்கள்தான் பி.ஆர்.பி.க்கே யோசனை கூறுகின்றனர். அரசு நிலத்தை வளைத்துப் போடுவது எப்படி, அரசுக்கு தெரியாமல் மோசடியாக கிரானைட் கற்களை வெட்டி எடுப்பது எப்படி என கிரானைட் கொள்ளைக்கு அனைத்து வழிகளிலும் இந்த அதிகாரிகள் தான் உதவியுள்ளனர். 2012-ஆம் ஆண்டுவரை இதை யாராலும் கட்டுப்படுத்த முடியவில்லை என்றனர்.

''கீழையூர் அருகே ரெங்கசாமிபுரம் என்ற கிராமத்தைத் தடம் தெரியாமல் அழித்துவிட்டு, அந்த இடத்தில் கிரானைட் கற்கள் வெட்டி எடுக்கப்பட்டதாக கிடைத்த புகாரின் பேரில் அங்கு சென்று சகாயம் ஆய்வு செய்தார். அங்கிருந்த பொது மக்கள் சகாயத்திடம் கூறும்போது, கிரானைட் நிறுவனங் களுக்கு நாங்கள் விரும்பி நிலங்களை கொடுக்கவில்லை. மிரட்டியதால் வழியின்றி கொடுத்துவிட்டோம். தர மறுத்த வர்களின் நிலங்களில் கற்களைக் கொட்டினர். குளங்களுக்கு நீர் செல்லும் வாய்க்கால், பாசனக் கிணறுகளிலும் மண்ணைப் போட்டு மூடிவிட்டனர். இதுபற்றி நாங்கள் அளித்த புகாரை காவல், வருவாய், பொதுப்பணித்துறை அதிகாரிகள் கண்டு கொள்ளவே இல்லை. இந்த அழிவுக்கு அரசு அதிகாரிகள் தான் முக்கிய காரணம். மேலூர் தாலுகா அலுவலகத்தில் பி.ஆர்.பி. குடும்பத்தினர் பெயரில் நிலப்பட்டா மாறி விட்டால், அதை முழுமையாகப் பாதுகாப்பது அதிகாரிகள் தான் என கிராமத்தினர் சரமாரியாக குற்றம் சாட்டியதை சகாயம் குறிப்பெடுத்துக் கொண்டார். இந்த பகுதியில் அரசு அதிகாரிகளாக இருந்தவர்கள் ஓய்வுக்குப் பின் கிரானைட் நிறுவனங்களில் வேலைக்கு சேர்ந்து விட்டனர். எனவே அதி காரிகள் மீதும் கட்டாயம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். நீதிமன்றத்தில் இது பற்றிய விவரங்களை சமர்ப்பிப்பதாக அவர்களிடம் சகாயம் உறுதியளித்தார்.

''கிரானைட் முறைகேடு குறித்த ஐ.ஏ.எஸ். அதிகாரி சகாயத்தின் விசாரணையை உளவுத்துறை போலீஸார் உன்னிப்பாக கவனித்து மேலிடத்துக்கு உடனுக்குடன் தகவல் அளித்து வருகின்றனர். மதுரையில் முதற்கட்ட விசாரணைக்கு வந்தபோது ரயிலில் அவசரப் பிரிவில் இருக்கை ஒதுக்கீடு பெற்றுத்தரவில்லை என்றும், மதுரையில் அவர் தங்கியிருந்த அறையில் ஒட்டுக்கேட்பு கருவி பொருத் தப்பட்டுள்ளதாகவும், குவாரி அதிபர்களின் ஏஜெண்டுகள் விசாரணையை கண்காணிப்பதாகவும் அடுத்தடுத்து குற்றச் சாட்டுகள் எழுந்தன.

''சகாயம் மதுரையில் இறங்குவது முதல் திரும்பிச் செல்வது வரை அவரின் நடவடிக்கைகளை உளவுத்துறை யினர் முழுமையாகக் கண்காணித்தனர். புகார் விவரம், அதை அளிப்பவர்களின் பின்னணி, சகாயத்தை சந்திப்பவர்கள், விசாரணைக்கு வந்து செல்லும் அதிகாரிகள், விசாரணையில் தெரிவிக்கும் தகவல்கள், அரசியல் கட்சியினர் சந்திப்பு உள்பட அனைத்து விவரங்களையும் உளவுத்துறையினர் சேகரிக்கின்றனர். இதற்காக 2 முதல் 4 உளவுப்பிரிவு போலீஸார் நியமிக்கப்பட்டனர். குவாரிக்கு சகாயம் நேரடி ஆய்வு செய்யச் சென்ற இடங்களில் எல்லாம் உளவுத்துறை யினர் கண்காணித்தனர். இவர்கள் சேகரிக்கும் தகவல்களை உடனுக்குடன் மேலிட அதிகாரிகளுக்குத் தெரிவித்தபடி இருந்தனர். இத்துடன் வருவாய்த் துறை, பொதுப்பணி, தொல்லியல், சுரங்கம் என பல்வேறு துறை அலுவலர்களும் சகாயம் விசாரணை குறித்த தகவல்களைத் தங்கள் உயரதிகாரி களுக்குப் புள்ளி விவரங்களுடன் தெரிவித்து வருகின்றனர். அந்தந்த துறை மாவட்ட அதிகாரிகள் மூலம் துறையின் தலைமையிடத்து அதிகாரிகளுக்குத் தகவல் அளிக்கப்படு கிறது.

''சகாயத்திடம் பொதுமக்கள் புகார் சொல்லிக் கொண் டிருந்த சமயத்தில், பி.ஆர்.பி. தரப்பில் இருந்து வேவு பார்த்த சூப்பர்வைசர் கண்ணன், பொதுமக்களிடமும் சகாயத் திடமும் சண்டைக்கு வந்தார். குரலை உயர்த்திப் பொது மக்கள் சொல்லும் குறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆரம்பத்தில் இருந்தே பிரச்சினை செய்து வந்தவரை சகாயம், ''உங்களிடம் நான் எதுவும் பேசவில்லை. நீங்கள் எதுவாக இருந்தாலும் முறைப்படி புகாராக எழுதி உங்கள் தரப்பு விவரத்தைச் சொல்லுங்க'' என்று சொல்லியும் அவர் கேட்கவே இல்லை.

''சகாயம் சார்கிட்ட புகார் கொடுத்துட்டு வந்திருக்கேன். நிச்சயம் நல்லது நடக்கும் என்ற நம்பிக்கை வந்திருக்கு'' என்று புகார் கொடுத்தவர்களில் ஒருவர் சொன்னார். ''இது வெறும் மலைகள் இல்லை. நாம் வாழ்ந்த வரலாற்றின் ஆவணம். அதை எப்படி அழிக்க மனசு வரும்'' என்று வருத்தப் பட்டு சகாயம் பேசினார். அந்த நேரத்தில் மழைத் தூறல் ஆரம்பிக்க சகாயம் அதைப் பற்றிக் கவலைப்ப டாமல் பணியைத் தொடர்ந்தார். சகாயத்தின் நட வடிக்கைகளைக் கண்காணிக்கும் கிரானைட் மாஃபி யாக்கள், அதை முடக்கக் காத்திருக்கின்றனர். நீதி மன்றமும், மக்கள் மன்றமும் துணை நிற்கும் என்ற நம்பிக்கையில் சகாயத்தின் பயணம் தொடர்கிறது!''

கிரானைட் கொள்ளை குறித்து கிராம மக்களிடம் விசாரணை நடத்தும் சகாயம்.



*சகாயம் விசாரணையிலிருந்து தொகுக்கப் பட்ட இந்த செய்திகளை நாட்டின் நிலைமை களோடு பொருத்திப் பார்க்கும்போது ஒரு உண்மை தெளிவாகத் தெரிகிறது. சகாயம் கத்தி மேல் நடப்பவரைப்போல ''சர்க்கஸ்'' தான் காட்டுகிறார்; அவர் இப்படிச் செய்வது ''அஞ்சாத துணிச்சல்'' என்று சொல்லமுடியாது; அதிகார வர்க்க சட்டமுறைப்படி நடந்துகொண்டால்*

தன்னை ஒன்றும் செய்துவிட முடியாது என்று நம்பும் ‘‘அவரது முயற்சிகள் முட்டாள்தனம்’’ என்றுதான் இப்போதைக்குச் சொல்லமுடியும்.

● கிரானைட் நிறுவனங்களின் மோசடிகளுக்கு மூல காரணமே அதிகாரிகளும் போலீசும்தான்.

● சகாயத்தின் கண் முன்பாகவே புகார் கொடுக்க வந்தவர்களை கிரானைட் நிறுவன சூப்பர்வைசர் மிரட்டுகிறார்; சுதந்திரமாகவும் பயமின்றியும் புகார்கள் பெறவும் விசாரணை அதிகாரி முயல வில்லை. குற்றவாளிகளின் அடியாளிடம் மென்மையாகப் பேசுகிறார்.

● சகாயத்தின் விசாரணையை உளவுத்துறை போலீசார், வருவாய்த் துறை, பொதுப்பணி, தொல் லியல், சுரங்கம் - எனப் பல்வேறு துறை அலுவலர் களும் குவாரி அதிபர்களின் ஏஜெண்டுகளும் சகாயம் விசாரணை குறித்த தகவல்களைத் திரட்டித் தமது மேலிடங் களுக்கு அனுப்புகின்றனர்.




சகாயம் குறித்தும், அவரது விசாரணை குறித்தும் உருவாக்கப்படும் பிரேமைகள்.

● மேலும், சகாயம் தனது விசாரணையை மட்டுமின்றி, குற்றவாளிகளைத் தண்டிப்பதையும் இந்த அதிகார வர்க்கத்தையும் நீதிமன்றத்தையும் கொண்டு செய்துவிட முடியும் என்ற நம்பிக்கையை உருவாக்குகிறார்.

— இதன் மூலம் அதிகார வர்க்க சட்டவாதத்துடன் நின்றுகொண்டு இன்னொரு போலிப் போர்வீரன் என்று தன்னை வெளிப்படுத்திக் கொள்வார் என்பதற்கான அறி குறிகளும் தெரிகின்றன. கனிமவளக் கொள்ளை களுக்குத் துணைநிற்கும், பாதுகாக்கும் அரசு அதிகார அமைப்புக்குள்ளேயே நின்று கொண்டு அதனை வைத்தே குற்றவாளிகளைத் தண்டிக்க முடியும் என்று சகாயம் நம்புகிறார். அந்த முயற்சியில் தன்னோடு ஒத்துழைக்காத அதிகாரிகளைப் பார்த்து, ‘‘ஒழுங்காக நடந்து கொள்ளுங்கள், இல்லாவிட்டால் ஆசிரியரிடம் பெயரெழுதிக்கொடுத்து விடுவேன்’’ எச்சரிக்கை விடுக்கும் தோரணையில் ‘‘நீதிமன்றத்திடம் அறிக்கை கொடுத்து விடுவேன்’’ என்று பணிவோடு மிரட்டுகிறார்.

ஆனால், சகாயம் போன்ற இன்னொரு சட்டவாதப் போர்வீரனாகப் பணியாற்றி ஓய்வுபெற்ற நீதியரசர் சந்துரு சகாயத்துக்குச் (தமிழ் தி இந்து நாளிதழில்) சில கேள்விகள் எழுப்பியுள்ளார். அதில், முக்கியமாக நீதி மன்றங்களின் ஒத்துழைப்போடுதான் கிரானைட் கொள்ளைகளே நடந்திருக்கின்றன; அதையும் சகாயம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்கிறார். சகாயமோ இதைக் கவனத்தில் கொண்டுள்ளதாகத் தெரியவில்லை. சொத்துக் குவிப்பு வழக்கில் தண்டனை பெற்ற குற்றவாளியிடம் காலில் விழாத குறையாக அதி காரிகளும் நீதிபதிகளும் நடந்து கொள்கிறார்கள். அந்தக் குற்றவாளிஅரசின் எல்லா முறைகேடுகளையும் கண்டும் காணாமல் இருப்பதோடு, அவற்றுக்கு எதிராக நியாயம் கோரிப் போடப்படும் வழக்குகளைக் அடியில் போட்டு உட்கார்ந்து கொள்ளும் இந்த நீதிமன்றங் களிடமே நீதி-நியாயம் கிடைக்கும் என்று நம்பச் சொல்லுகிறார்.

‘‘வேறென்ன செய்ய முடியும்? வேறு மாற்று ஒன்றுமே இல்லாதபோது, சகாயம் - ஏதோ அத்திபூத்தாற் போன்று ஒரு நேர்மையான, துணிச்சலான அரசு நிர்வாகப் பணி அதிகாரி வாய்த்திருக்கிறார். முறைகேடு களை எதிர்த்துப் போராடும் அவரது நற்பணிக்கு ஆதரவு தெரிவிக்காவிட்டாலும், எல்லோரையும் எல்லா வற்றையும் குறைசொல்லுவதைப் போல சகாயத்தையும் விமர்சிக்கலாமா?’’ என்ற கேள்வியை நாடு கொள்ளைபோகும் அரசியல், பொருளாதார சிக்கலைப் புரிந்துகொள்ளாத அரசிலற்றவர்கள் எழுப்பு கிறார்கள். அவர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். பிரச்சினை சகாயம் போன்ற தனிநபர்களின் தனிப்பட்ட நேர்மை, துணிச்சல் அல்ல. சகாயம் ஒரு சராசரி நடுத்தர வர்க்கத்தவர் அல்ல. அரசு நிர்வாகப் பணி தேர்வில் வெற்றிபெற்று, அதற்கான முறையில் பயிற்று விக்கப்பட்டவர். அரசு நிர்வாகப் பணியின் சூட்சுமங் களையும் அதன் இன்றைய போக்குகளையும் கற்றுத் தேர்ந்தவர். தற்போதைய அரசு அதிகார, கட்டமைப்புக் குள்ளேயே நாடு கொள்ளைபோகும் அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது என்பதை அவரது சொந்த அனுபவங்களே உணர்த்தியிருக்கும். இருந்தாலும் அவ்வாறானதொரு நம்பிக்கையைக் கொண்டிருக்கிறார் என்றுதான் விமர்சிக்கிறோம்.

நாடு கொள்ளைபோகும் அரசியல், பொருளாதாரப் பிரச்சினைக்கு எதிராக தமது சொந்த பலத்தால், மாபெரும் மக்கள் எழுச்சியும் புரட்சியுமில்லாமல் தற் போதைய அரசு அதிகார, கட்டமைப்புக்குள்ளேயே தீர்வு காண முடியாது. ஆனால், அவ்வாறான மாற்றுப் பாதையை கையிலெடுக்கும் நேர்மையும் துணிவு மில்லாத பல குட்டி முதலாளிய அரசியல் குழுக்களும், அறிவுஜீவிகளும், அரசுசாரா தொண்டு நிறுவனங்களும் அவ்வப்போது சகாயம், உதயகுமாரன், கேஜரிவால் போன்ற தலைமையை முன்னிறுத்தி தற்போதைய அரசு அதிகார, கட்டமைப்புக்குள்ளேயே தீர்வுகாணும் வழி முறையின் மீது மீண்டும் மீண்டும் நம்பிக்கை வைக்கச் சொல்லுகிறார்கள். அவசியமான, சரியான பாதையை யும் தீர்வையும் நோக்கிச் சொந்த முயற்சியில் மக்களைத் திரட்டுவதற்குத் துணிவு கொள்வதற்குப் பதிலாக, ஒன்று மில்லாததற்கு இதையாவது ஆதரிப்போம் என்ற மாயையில் மக்களை ஆழ்த்துகிறார்கள்.

● ஆர்.கே.

## முத்துக்குமாரசாமி தற்கொலை:

# ஏ-1 யார்? அம்மாவா? அக்ரியா?

**அக்ரி கிருஷ்ணமூர்த்தி வசூலித்திருக்கும் ஒவ்வொரு காசும் அம்மாவுக்குப் போய்ச்சேரும் பணம் என்பதால், அம்மாவை விட்டுவிட்டு அவருடைய விசுவாச பி.ஏ. அக்ரியை மட்டும் குற்றவாளியாக்குவது சரியா?**

விபச்சாரக் கும்பலிடம் சிக்கிய பெண்ணின் நிலையில் இருக்கிறது தமிழகம். தம்மளவில் நேர்மையாக வாழ விரும்புகிறவர்களுக்குக்கூட, அதற்கான வாய்ப்போ, உரிமையோ கிடையாது என்ற நிலை ஏற்பட்டு விட்டது. திருநெல்வேலி கோட்டத்தில் வேளாண்மைத் துறையில் உதவி செயற் பொறியாளராகப் பணியாற்றிவந்த முத்துக்குமாரசாமி, தச்சநல்லூர் அருகே ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்ட கோரச் சம்பவம் இதைத்தான் காட்டுகிறது. முத்துக்குமாரசாமி ஊழலைத் தடுக்க முயற்சிக்கவில்லை, ஊழல் பேர்வழிகளைத் தண்டிக்க முயற்சிக்கவில்லை, வாங்கும் சம்பளத்துக்கு யோக்கியமாக நடந்து கொள்ள முயற்சித்தார். அதற்கு அவர் கொடுத்த விலை மரணம்.

வேளாண் துறையில் தற்காலிக ஓட்டுநர் பணியிடம் ஒன்றுக்கு மக்கள் முதல்வர் ஜெ.வின் அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி நிர்ணயித்திருக்கும் விலை ரூ.3 லட்சம். 7 பணியிடங்களை ரூ.21 லட்சத்துக்கு விற்றுவிட்டு, தான் சொன்ன ஆட்களை நியமனம் செய்யுமாறு முத்துக்குமாரசாமியை அக்ரியின் கையாட்கள் நிர்ப்பந்தித்துள்ளனர். அவரோ அரசு விதிப்படி, வேலை வாய்ப்பு அலுவலக பதிவு மூப்பு அடிப்படையில் 7 பேரை நியமனம் செய்திருக்கிறார். அப்படியானால் 21 லட்சம் ரூபாய் பணத்தைக் கொடு, இல்லையேல் ஊழல் வழக்கில் உள்ளே தள்ளுவோம் என்று மிரட்டியிருக்கிறார்கள் அமைச்சர் அக்ரியின் ஆட்கள். வாழ்க்கை முழுவதும் நேர்மையாக வாழ்ந்துவிட்டு இறுதியில் ஊழல் வழக்கில் சிக்கி சிறை சென்று மானமிழந்து சாவதைவிடத் தற்கொலை செய்து கொள்வதே மேல் என்று ரயில் முன் பாய்ந்திருக்கிறார் முத்துக்குமாரசாமி.

அக்ரி கிருஷ்ணமூர்த்தியின் பெயர் அம்பலமாகிவிட்டதால், முதலில் அவரைக் கட்சியிலிருந்து நீக்குவதாக நாடகம் நடந்தது. பிறகு வேறுவழியின்றி அமைச்சர் பதவியும் பறிக்கப்பட்டது. இருப்பினும், அக்ரி கிருஷ்ணமூர்த்தியின் அலுவலக பி.ஏ. என்று சொல்லிக் கொள்ளும் பூவைய்யா விடம், முத்துக்குமாரசாமியை மிரட்டியது நான்தான், அமைச்சருக்கோ மற்றவர்களுக்கோ இதில் தொடர்பில்லை என்று வாக்குமூலம் பெற்று அக்ரியைத் தப்புவிக்கும் நடவடிக்கைகள் வேகமாக நடந்து வருகின்றன.

அமைச்சரின் பி.ஏ. என்பவர், எல்லா விதமான திருட்டுத்தனங்களையும் சட்டவிரோத முறைகேடுகளையும் செய்து கொடுக்கும் நம்பகமான கையாள் என்பது நாடறிந்த ரகசியம். அக்ரியின் பி.ஏ. பூவய்யா என்றால், அமைச்சராவதற்கு முன்புவரை அம்மாவின் பி.ஏ. அக்ரி கிருஷ்ணமூர்த்தி என்பதும், அந்த விசுவாசமான அடிமைச் சேவகத்துக்குக் கிடைத்த பரிசுதான் அமைச்சர் பதவி என்பதும் அனைவரும் அறிந்த ரகசியம்.

பழைய தமிழ் வார இதழ்களை எடுத்துப் புரட்டிப் பாருங்கள். போயஸ் தோட்டத்தின் கேட் கீப்பரும், அம்மாவின் கணக்குப் பிள்ளையும், கங்காணியும் அக்ரி கிருஷ்ணமூர்த்திதான் என்பது தெரியும். ஒவ்வொரு துறை அமைச்சரும், உயர் அதிகாரிகளும் என்னென்ன வழிகளில் எப்படி எப்படி கொள்ளையடிக்கிறார்கள் என்று கண்காணித்து, அவர்கள் முழுக்கொள்ளைக்கும் அம்மாவிடம் நேர்மையாக கணக்கையும் பணத்தையும் ஒப்படைக்கிறார்களா, அல்லது அம்மாவையே ஏமாற்றுகிறார்களா என்று உளவுத் துறையை வைத்து மோப்பம் பிடிப்பது, அம்மாவிடம் போட்டுக்கொடுப்பது - ஆகியவைதான் அக்ரி ஆற்றிவந்த பணிகள்.

நேர்மையாக வாழ்ந்துவிட்டு, இறுதியில் ஊழல் வழக்கில் சிக்கி மானமிழப்பதைவிட சாவதே மேல் என்று தற்கொலை செய்து கொண்ட முத்துக்குமாரசாமி.



அந்த வகையில் அக்ரி வசூலித்திருக்கும் ஒவ்வொரு காசும் அம்மாவுக்குப் போய்ச் சேரும் பணம்தான். ஆகவே அக்ரியை விட்டுவிட்டு அவருடைய பி.ஏ. பூவய்யாவைப் குற்றவாளியாக்குவதா என்பதல்ல கேள்வி. அம்மாவை விட்டுவிட்டு அவருடைய பி.ஏ. அக்ரியைக்

குற்றவாளியாக்குவதா என்பது தான் கேள்வி.



போயஸ் தோட்டத்து கேட் கீப்பரும், அம்மாவின் கணக்குப்பிள்ளையும் கங்காணியுமான அக்ரி கிருஷ்ணமூர்த்தி.

அக்ரி மீது நடவடிக்கை என்பதற்கு சாட்டையைச் சுழற்றுகிறார் ஜெயலலிதா என்று தலைப்பிடுகின்றனர். ஊழல் குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டிக்கப்பட்ட ஒரு கிரிமினலை நீதி தேவதையாகச் சித்தரிக்கும் இழிநிலையை வேறெங்கு காண முடியும்? ஜெயலலிதா ஏதோ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, விதிவசத்தால் தண்டனை பெற்று முடங்கிக் கிடப்பதைப் போலவும், இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஊழல் அதிகாரிகளும் அமைச்சர்களும் பகற்கொள்ளையில் ஈடுபடுவது கண்டு மனம் புழுங்கித் தவிப்பது போலவும், சொத்துக் குவிப்பு வழக்கை அப்பீலில் முறியடித்து, மீண்டும் பதவியில் அமர்ந்து நல்லாட்சியைத் தருவது எப்படி என்று ஜெயலலிதா துடித்துக் கொண்டிருப்பது போலவும் ஒரு தோற்றத்தைக் கூச்சமே இல்லாமல் பார்ப்பன ஊடகங்கள் உருவாக்கி வருகின்றன.

*1991-96* காலத்திலும் இதையேதான் செய்தார்கள். சசிகலா கும்பல் போயஸ் தோட்டத்தில் ஊடுருவி, ஜெ.வுக்குத் தெரியாமல் கொள்ளயடித்து வருவது போலவும், தன்னைச் சுற்றி இருப்பவர்களின் உண்மைச் சொரூபம் தெரியாமல் ஜெயலலிதா ஏமாந்து விட்டதைப் போலவும் கதையளந்தார்கள். ஆனால், இந்தப் பித்தலாட்டங்கள், அனைத்துக்கும் ஆப்பறைந்து, முதல் சதிகாரி, முதல் குற்றவாளி, அதாவது அக்யூஸ்டு நம்பர் 1 ஜெயலலிதாதான் என்று சட்டபூர்வமாகவே நிலைநாட்டியது குன்ஹாவின் தீர்ப்பு.

ஜெயலலிதா தலைமையிலான கும்பல் ஒரு அரசாங்கம் என்று அழைக்கப்படுவதற்கு அணுவளவும் தகுதியற்றது. அது ஒரு கொள்ளைக்கூட்டம். பதவியைப் பயன்படுத்திக் கொண்டு சாத்தியமான அத்தனை வழிகளிலும் நாட்டைக் கொள்ளையிடுவது, எந்தத் திட்டத்தில் எவ்வளவு கொள்ளையடிக்க முடியும் என்பதைக் கணக்கிட்டு, அதன் அடிப்படையில் திட்டங்களை வகுப்பது, அமைச்சர்கள் முதல் எம்.எல்.ஏ.க்கள் வரையிலான அனைவரும் தங்களது கொள்ளைப் பணத்தில் உரிய கப்பத்தைக் கட்டுகிறார்களா என்று சோதித்தறிவது, ஏமாற்றுபவர்களை அடிப்பது, பதவியைப் பறிப்பது, உள்ளே வைப்பது என்பதுதான் போயஸ் தோட்டத்தில் ஜெயலலிதா நடத்தி வந்த நிர்வாகம்.

எந்தெந்தத் துறைகளில் எத்தனை கோடி தேறும் என்று கணக்கு போட்டுக் கொடுப்பது தான் அம்மாவின் அருள் பெற்ற ஆலோசகர்களின் வேலை. அதை முறைப்படி வசூலித்து கொடுப்பதுதான் அமைச்சர்களின் கடமை. அவர்கள் இட்ட பணிகளை நிறைவேற்றிக் கொடுப்பதுதான் ஊழல் அதிகாரிகளின் அன்றாடப் பணி. ஜெ கும்பலால் நிர்வகிக்கப்படும் ஆட்சியானது, தாவூத் இப்ராகீம் மாஃபியாவைப் போல, ஒரு கொள்ளைக் கம்பெனியாகத்தான் இயங்கி வருகிறது.

காசில்லாதவன் கடவுளேயானாலும் கதவைச் சாத்தடி என்பதுதான் போயஸ் தோட்டத்தின் கொள்கை. மலையாள மாந்திரீகர்களையும், சூனியக்காரர்களையும் தவிர, வேறு யாரும் சூட்கேசு இல்லாமல் போயஸ் தோட்டத்திற்குள் நுழைந்ததில்லை. அம்மாவுக்குரிய கப்பத்தைக் கட்டாதவன் அடி வாங்காமல் வெளியேறியதும் இல்லை. வளர்ப்பு மகன் மீதான கஞ்சா கேசாகட்டும், நடராசன் மீதான வழக்குகளாகட்டும், மன்னார்குடி குடும்பமே சிறை வைக்கப்பட்ட கதையாகட்டும், சசிகலாவின் வெளியேற்றமாகட்டும் அனைத்தும் இதற்கான ஆதாரங்கள்.

ஒரு ஓட்டுனர் பதவியின் விலை என்ன என்பது போயஸ் தோட்டத்துக்குத் தெரியும். அதில் தோட்டத்துக்குச் சேர வேண்டிய தொகை சேரவில்லையென்றால் நடக்கக்கூடிய விபரீதம் என்னவென்பது மற்றெல்லோரையும் விட முன்னாள் கணக்குப்பிள்ளை அக்ரிக்கு நன்றாகத் தெரியும். அதன் விளைவுதான் முத்துக்குமாரசாமியின் மரணம்.

தென் மாவட்டங்களில் சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளில் ஆசிரியர்களைப் பணி

முத்துக்குமாரசாமியைத் தற்கொலைக்குத் தள்ளிய குற்றவாளிகளைக் கைது செய்ய சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடக் கோரி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தினர் நடத்திய ஆர்ப்பாட்டம்.



நியமனம் செய்துவிட்டு, மாவட்டக் கல்வி அலுவலரிடம் ஒப்புதல் பெற்றிட வேண்டும் என்பது நடைமுறையாக உள்ளது. கடந்த 2013-14ஆம் கல்வியாண்டில் இவ்வாறு நியமனம் செய்யப்பட்ட 62 ஆசிரியர்களுக்கு பல மாதங்களாகியும் ஒப்புதல் வழங்கப்படாததோடு, சம்பளமும் தரப்படாமல் உள்ளது. பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் கே.சி.வீரமணிக்கு ஒவ்வொருவரும் ரூ.3.5 லட்சம் வீதம் முழுத் தொகையையும் ஒரே தவணையில் கப்பம் கட்டினால்தான் ஒப்புதல் வழங்கப்படும் என்று மாவட்டக் கல்வி அலுவலர்கள் அமைச்சரின் புரோக்கர்களாகச் செயல்படுகின்றனர். கப்பம் கேட்டு இந்த அதிகாரிகள் பலரோடு பேசிய உரையாடல்கள் இப்போது ''வாட்ஸ் அப்'' மூலம் ஊடகங்களில் சந்தி சிரிக்கிறது. ஜெ கும்பலின் ஆட்சியில் ஆசிரியர் பணியிட மாற்றம் என்பது ஆண்டுதோறும் நடக்கும் மிகப்பெரிய 'லஞ்சமேளா'வாகிவிட்டது. இதில் முதல் குற்றவாளி யார்? வீரமணியா, ஜெயலலிதாவா?

ஆவின் பால் கலப்பட கொள்ளை அம்பலமானதும், -பால்வளத்துறை அமைச்சராக இருந்த மாதவரம் மூர்த்தியை அமைச்சர் பொறுப்பிலிருந்து நீக்குவதாக அறிவித்து ஜெ கும்பல் அவரைப் பாதுகாத்தது. ஜெ கும்பலுக்கு முறையாகக் கப்பம் கட்டிவந்த மாதவரம் மூர்த்தியின் பினாமியாகச் செயல்பட்ட ஆவின் பால் கலப்படக் கொள்ளையன் வைத்திக்காக உச்ச நீதிமன்றம் வரை சென்று அவனுக்குப் பிணை வாங்கிக் கொடுத்து தப்பிக்க வைத்திருக்கிறாரே ஜெயலலிதா, ஆவின் கொள்ளையில் முதல் குற்றவாளி வைத்தியா? ஜெயாவா?

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில், டிரைவர், கண்டக்டர், எழுத்தர், இளநிலைப் பொறியாளர், உதவியாளர் பணி நியமனங்களுக்கு ஒவ்வொன்றுக்கும் இவ்வளவு ரேட் என்று அமைச்சர் செந்தில் பாலாஜியின் எடுபிடிகள், ஆம்னி பஸ்ஸுக்கு டிக்கெட் ஏற்றும் புரோக்கர்கள் போலக் கூவிக்கூவிக் கூப்பிடுவதை பத்திரிகைகள் நாறடிக்கின்றனவே, இது ஜெ.வுக்குத் தெரியாமல் நடக்கும் கொள்ளையா?

திட்டத்தில் ஊழல் என்பது அம்மாவின் ஆட்சியில் கிடையாது. வருமானம் எவ்வளவு என்று நிர்ணயிக்கப்பட்ட பின்னர்தான், திட்டமோ டெண்டரோ அறிவிக்கப்பட்டு விலை நிர்ணயம் செய்யப்படும். முட்டையின் வெளிச்சந்தை விலை ரூ.3.18 ஆக இருக்கும்போது, அதனை ரூ.4.50 வீதம் கொள்முதல் செய்ய, கோழிப் பண்ணையே வைத்திராத ஒரு நிறுவனத்துடன் ஜெ.அரசு ஒப்பந்தம் போட்டுள்ளதே, இதனைக் கொள்ளைக் கூட்டத் தலைவி ஜெயாவின் துணிச்சல் என்பீர்களா, அமைச்சர் வளர்மதியின் துணிச்சல் என்பீர்களா?



உச்ச நீதிமன்றம் வரை சென்று பிணை வாங்கிக் கொடுத்து ஜெ.கும்பலால் தப்பிக்க வைக்கப்பட்டுள்ள ஆவின் பால் கலப்படக் கொள்ளையன் வைத்தி.

கடுமையான மின்வெட்டு நிலவும் சூழலைப் பயன்படுத்திக் கொண்டு தனியார் மின்நிறுவனங்களிடம் அடாத விலைக்கு மின்சாரம் கொள்முதல் செய்து, அதில் காசு பார்த்ததை அறிவீர்கள். ஆனால், தமிழக மின்வாரியமும் மைய அரசு நிறுவனமான பாரத மிகுமின் நிறுவனமும் இணைந்து துவங்கவிருந்த உடன்குடி திட்டத்தை நிறுத்தியது ஏன், அதனை ஒரு சீன நிறுவனத்துக்குத் தரப்போவதாக கூறியது ஏன், அதன் பின்னர் கடந்த 6 மாதங்களாக ஒப்பந்தத்தை இறுதியாக்காமல் இழுத்தடித்து, இப்போது இன்னொரு தரகு முதலாளி கூடுதல் ரேட்டு பேசியவுடன் புதிதாக ஒப்பந்தம் போடத் துடிக்கிறதே ஜெ அரசு, இவ்வளவு கேடு கெட்ட களவாணிக் கும்பலை ஒரு அரசாங்கம் என்று அழைப்பது அயோக்கியத்தனமில்லையா?

தமிழகத்தில் கடந்த மூன்று மாதங்களாக ரேசன் கடைகளில் பருப்பு தட்டுப்பாடு நிலவுவதற்குக் காரணமே, கடந்த ஜனவரி முதலாக பருப்பு கொள்முதலுக்கான ஒப்பந்தப் புள்ளி இறுதியாக்கப்படாததுதான். கோடிக்கணக்கிலான பேரம் படியாததால் அம்மாவின் ஆணைப்படி தமிழக உணவுத்துறை அமைச்சர் காமராஜ் இன்னமும் இதை இழுத்தடித்துக் கொண்டிருக்கிறார் என்ற விவகாரம் சந்தி சிரிக்கிறதே, இதில் குற்றவாளி யார்? அமைச்சர் காமராஜா?

அக்ரி கிருஷ்ணமூர்த்தி அமைச்சராக இருந்தபோது, 'நலிந்தோர் நல நிதி' என்ற பெயரில் விவசாய அதிகாரிகளுக்கு ஒரு ரேட், டெபுடி டைரக்டர்களுக்கு ஒரு ரேட் என்று வசூல் வேட்டை நடத்தப்பட்டதும், கொடுக்க மறுத்த அதிகாரிகளுக்கு டிரான்ஸ்ஃபர் மிரட்டல் கொடுக்கப்பட்டதும் சந்தி சிரித்தன.

கனிமவளக் கொள்ளை, ஆற்றுமணல் கொள்ளை, தாதுமணல் கொள்ளை, சவுடு மணல் கொள்ளை என்று எங்கு திரும்பினாலும் கொள்ளை நடக்கிறது. மக்கள் போராட்டங்களை விலைபேசியோ, கொலை செய்தோ இந்தக் கொள்ளைகளை நடத்தும் துணிச்சல் யாருக்கு இருக்கிறதோ, அவர்களுக்குத்தான் போயஸ் தோட்டத்தின் கதவுகள் திறக்கின்றன.

பெங்களூரு நீதிமன்றத்தில் வாதாடும் வக்கீல்களின் சாப்பாடு, தங்குமிடத்துக்கு மணல் கொள்ளையன் படிக்காசு பொறுப்பு, வக்கீல் செலவுக்கு இன்னொரு கொள்ளையன், கோயில்களில் பரிகாரங்களைச் செய்வதற்கு ஒரு கொள்ளைக்கூட்டம், இந்தக் கொள்ளைக்கு ஆலோசனையும் பாதுகாப்பும் அளிக்கும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகளுக்கு பதவி நீட்டிப்பு - என்பவையெல்லாம் நாடே அறிந்த உண்மைகள். அவ்வாறிருக்க, ஜெயலலிதாவைத் தவிர வேறொருவரை முதல் குற்றவாளி என்று கூறினால், அதைவிடப் பெரிய பொய் வேறொன்று இருக்க முடியுமா?

● சூரியன்

## மாட்டுக்கறி தடைச் சட்டம்:

# வலக்கரத்தில் கோமியம், இடக்கரத்தில் ஹாம்பர்கர்!

**மாட்டிறைச்சியை முசுலீம்களுக்கு எதிரான அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்துவதுதான் ஆர்.எஸ்.எஸ்.-இன் நோக்கம். எனினும், இச்சட்டம் முசுலீம்களைக் காட்டிலும் விவசாயிகளையும், ஏழைகளையும், தாழ்த்தப்பட்டோரையும்தான் அதிகம் பாதிக்கிறது.**

பசுவதைத் தடுப்பு என்ற பெயரில் மாட்டிறைச்சித் தடைச் சட்டத்தை நிறைவேற்றுவதிலும் தண்டனையைக் கடுமையாக்குவதிலும் பா.ஜ.க. மாநில அரசுகள் ஒன்றோடொன்று போட்டி போடுகின்றன. மாட்டை வெட்டினால் மகாராட்டிரத்தில் 5ஆண்டு சிறை, மத்திய பிரதேசத்தில் 7ஆண்டுகள், அரியானாவில் 10 ஆண்டு வரை கடுங்காவல் தண்டனை. மாட்டை விற்கும் விவசாயி தொடங்கி, வாங்குபவர், லாரி டிரைவர், வெட்டுபவர், சமைப்பவர், சாப்பிடுபவர் உள்ளிட்ட அனைவரும் இச்சட்டங்களின்படி தண்டனைக்குரிய குற்றவாளிகள். மாட்டுக்கறி வைத்திருப்பதாகவோ, சாப்பிடுவதாகவோ சந்தேகப்பட்டால் ஒரு போலீசு ஏட்டுகூட வீடு புகுந்து சோதனை செய்யலாம்.

குற்றவியல் நடைமுறைச் சட்டப்படி கொலைக்குற்றமாக இருந்தாலும் ஒருவர் குற்றவாளி என்று போலீசு தான் நிரூபிக்க வேண்டும். ஆனால், மாட்டைக் கொன்றதாகவோ தின்றதாகவோ நீங்கள் கைது செய்யப்பட்டால், நிரபராதி என்று நிரூபித்துக் கொள்ளாத வரை நீங்கள் குற்றவாளிதான் என்கின்றன, ம.பி, மகாராட்டிரா, டில்லி மாநில சட்டங்கள்.

மாட்டிறைச்சியை முஸ்லிம்களுக்கு எதிரான அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்துவதுதான் ஆர்.எஸ்.எஸ். இன் நோக்கம். எனவேதான் அம்மக்களை அச்சுறுத்திப் பணிய வைக்கும் நோக்கத்துடன் இச்சட்டம் இன்னொரு பொடா சட்டமாகவே வடிவமைக்கப்பட்டிருக்கிறது. ஒரு புறம், இந்து மதத்தினர் பசுவைப் புனிதமாக கருதுவது குறித்துப் பல புனைகதைகளை சங்கப் பரிவாரம் பரப்பிவந்த போதிலும், மத உணர்வைப் புண்படுத்துவதால் மாடு வெட்டுவதைத் தடை செய்வதாக இச்சட்டம் கூறவில்லை. கால் நடைச் செல்வத்தைப் பாதுகாப்பது நாட்டின் பொருளாதாரத்துக்கு அவசியம் என்று மதச்சார்பற்ற மொழியில் தந்திரமாகப் பேசுகின்ற, அரசியல் சட்டத்தின் வழிகாட்டும் கோட்பாடு பிரிவு 48-இன் கீழ்தான் இச்சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. இது பார்ப்பனியத்தின் கபட வேடத்துக்கு இன்னொரு சான்று.

இசுலாமியர் ஆட்சிக் காலத்துக்குப் பின்னர்தான் மாட்டுக்கறி தின்னும் பழக்கமே இந்துக்கள் மத்தியில் பரவியது என்பது சங்கப் பரிவாரம் பரப்பி வரும் முக்கியமான கட்டுக்கதை. கிறித்தவமும் இசுலாமும் தோன்றுவதற்கு 1500 ஆண்டுகள் முன்னதாகவே, மாடுகளை யாகத்தில் பலியிடுவதும் புரோகிதப் பார்ப்பனர்கள் அவற்றை உண்டு கொழுப்பதும் எல்லை மீறிய அளவில் நடந்துள்ளன. ரிக் வேதத்தில் தொடங்கி இராமாயணம் வரையிலான பலவற்றிலும் பார்ப்பனர்கள் பசு மாமிசம் தின்றது பலவிதமாக விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதனை அம்பேத்கர், டி.டி.கோசாம்பி, டி.என்.ஜா முதலான ஆய்வாளர்கள் ஆதாரங்களுடன் அம்பலமாக்கியிருக்கின்றனர். விவேகானந்தரும் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

சொல்லப்போனால், அன்றைய விவசாய சமூகத்தின் மக்கள், பலியிடுதலை நிராகரித்த பவுத்தத்தையும், கொல்லாமையை வலியுறுத்திய சமணத்தையும் தழுவுவதற்கு, பார்ப்பனர்களின்

‘‘குடும்பத்திற்கே சோறு போட முடியாத நிலையில், நாங்கள் பசுக்களை எப்படி பராமரிக்க முடியும்?’’ எனக் கேள்வி எழுப்பும் மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த இந்து விவசாயி சதீஷ் சோலங்கி.



மாடு தின்னும் வெறியும் முக்கிய காரணமாக இருந்திருக்கிறது. பவுத்தத்தையும் சமணத்தையும் வீழ்த்தி, தங்களுடைய சமூக மேலாதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ள வேண்டுமானால், மாட்டுக் கறியைத் தியாகம் செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில்தான் கவிச்சியை வெறுத்தார்கள் பார்ப்பனர்கள் என்பது வரலாறு.

இவையெல்லாம் நாம் கூறும் வரலாற்று விளக்கங்கள் மட்டுமல்ல, வேள்விகளில் பசுமாடுகளைப் பலியிடுவதும் சாப்பிடுவதும் சாத்திரப்படியும் சம்பிரதாயப்படியும் அவசியமானது என்று வலியுறுத்தி, செத்துப்போன சங்கராச்சாரி வழங்கியுள்ள அருளுரைகளை 1993-இல் ஆனந்த விகடன் நூல் தொகுப்பாகவே வெளியிட்டிருக்கிறது. எனவே, கோமாதாவைக் கொல்வது இந்து மதத்தின் வழிபாட்டுரிமை.

பா.ஜ.க.வின் பசு வதைத் தடைச் சட்டங்களால், இந்திய அரசியல் சட்டத்தின் பிரிவு 25, பார்ப்பனர்களுக்கு வழங்கியிருக்கும் மாடு வெட்டும் உரிமையைப் பறிக்க முடியாது என்பதே உண்மை. இந்தச் சட்டத்தினால், கறிக்கடை பாயையும், கறி தின்னும் சூத்திர, தலித், பழங்குடி மக்களையும்தான் கைது செய்ய முடியும். இதில் யாருக்காவது சந்தேகமிருந்தால், கருவறைத் தீண்டாமை பார்ப்பனர்களின் மத உரிமை என்று உச்சநீதி மன்றத்தில் வாதாடிவரும் மூத்த வழக்குரைஞர் பராசரனிடம் விளக்கம் கேட்டுக் கொள்ளலாம்.

> **கோயில் வழிபாட்டை ஆக்கிரமித்துக் கொண்டதாக இருக்கட்டும், புலால் உணவைத் துறந்ததாக இருக்கட்டும், குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் எவற்றையெல்லாம் தனது மேலாதிக்க நோக்கத்துக்குப் பார்ப்பனியம் பயன்படுத்திக் கொண்டதோ, அவற்றையெல்லாம் சமூகத்தின் இலட்சியப் பண்பாடாக அது சித்தரித்து வந்திருக்கிறது.**

பசுவின் புனிதம் என்பது வடிகட்டிய பொய். இது குறித்த கருத்து பார்ப்பன மதத்திலேயே சுமார் 8-ஆம் நூற்றாண்டு வாக்கில்தான் தோன்றியிருக்க வேண்டும் என்று வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். ஆவுரித்துத் தின்னும் புலையர் என்று கூறித் தீண்டாமையை நிலைநாட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட இந்தக் கருத்து, பிற்காலத்தில் விடுதலைப் போராட்டத்தை பார்ப்பன இந்து தேசியமாகத் திரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. அந்த வகையில் திலகர் அறிமுகப்படுத்திய விநாயகர் ஊர்வலத்தைப் போலவே இதுவும் இந்துத்துவத்தின் இன்னொரு அரசியல் துருப்புச்சீட்டு. அவ்வளவே.

கலவரத்தைத் தூண்டும் கருவியாக அயோத்திப் பிரச்சினை அரங்கிற்கு வருவதற்கு முன்பு வரையில் இராமன் இருந்த இடத்தில், மாடுதான் இருந்து வந்தது. கோயில் வாசலில் கோமாதாவை வெட்டி விட்டார்கள் முஸ்லிம்கள் என்ற வதந்தியைப் பரப்பித்தான், நூற்றுக்கணக்கில் கலவரம் நடத்தி அப்பாவி முஸ்லிம்களை வெட்டியிருக்கிறார்கள் ஆர்.எஸ்.எஸ். காலிகள்.

கோயில் வழிபாட்டை ஆக்கிரமித்துக் கொண்டதாக இருக்கட்டும், புலால் உணவைத் துறந்ததாக இருக்கட்டும், குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் எவற்றையெல்லாம் தனது மேலாதிக்க நோக்கத்துக்குப் பார்ப்பனியம் பயன்படுத்திக் கொண்டதோ, அவற்றையெல்லாம், சமூகத்தின் இலட்சியப் பண்பாடாக அது சித்தரித்து வந்திருக்கிறது. அந்த வகையில் புலால் உணவை மறுக்கின்ற பார்ப்பன-பனியா பண்பாட்டை இந்துக்கள் அனைவரின் பொதுப் பண்பாடாக காட்ட தற்போது முனைந்திருக்கிறது. 2003-இல் ஜெயலலிதா கொண்டுவந்த கிடா வெட்டு தடைச்சட்டமும் இந்த வகையைச் சேர்ந்ததுதான்.

இருப்பினும், ஆகப் பெரும்பான்மையான மக்கள் புலால் உண்பவர்கள் என்பது மறுக்கவியலாத உண்மை. மாட்டுக்கறியோ ஏழைகளின் மலிவான மாமிச உணவு. இந்தியாவின் புலால் உற்பத்தி ஆண்டுக்கு 63 லட்சம் டன். இதில் 40 இலட்சம் டன் மாட்டுக் கறிதான். 22 லட்சம் டன் இந்தியாவில் உண்ணப்படுகிறது. 18 லட்சம் டன் ஏற்றுமதி செய்யப்படுகிறது.




மாட்டுக் கறி தடைச் சட்டத்திற்கு எதிராக முசுலீம்கள், தாழ்த்தப்பட்டோர், ஏழைகள் உள்ளிட்ட பல பிரிவினரும் இணைந்து மகாராஷ்டிரா மாநிலத் தலைநகர் மும்பயில் நடத்திய ஆர்ப்பாட்டம்.

வட கிழக்கிந்திய மாநிலங்களில் மாட்டுக்கறிக்கு எவ்வித தடையும் கிடையாது. கேரளா, தமிழ்நாடு, மே.வங்கம் ஆகிய மாநிலங்களில் பயன்படாதவை என்று சான்றளிக்கப்பட்ட பசுக்களை வெட்டலாம். ஆந்திரா, பீகார், ஒரிசா, கோவா, கர்நாடகா மாநிலங்களில் காளைகளை வெட்டலாம். இப்படி பலவிதமாக சட்டம் இருக்க காரணமே, சிறுபான்மை மதத்தினர் மட்டுமின்றி, தலித் மக்கள், பழங்குடியினர், பல மாநிலங்களில் சாதி இந்துக்கள் உள்ளிட்டோர் மாட்டுக்கறி உண்பதுதான்.



மதன் அபோத் என்ற இந்து முதலாளி டெல்லியில் நடத்திவரும் மாட்டுக் கறி ஏற்றுமதி நிறுவனம் - எம்.கே.ஆர். ஃப்ரோசன் ஃபுட்ஸ் எக்ஸ்போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்.

இருந்த போதிலும், இந்த தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களில் கணிசமானவர்கள் இசுலாமியர்கள் என்பதால் அச்சமூகத்தைப் பொருளாதார ரீதியில் சீர்குலைக்க வேண்டும் என்ற ஆர்.எஸ்.எஸ். இன் வக்கிர நோக்கம் இச்சட்டத்தைக் கொண்டுவருவதில் முக்கியப் பங்காற்றியிருக்கிறது. ஆனால், இச்சட்டம் முஸ்லிம்களைப் பாதிப்பதைக் காட்டிலும் அதிகமாக விவசாயிகளையும் தலித் மக்களையும் ஏழைகளையும்தான் பாதிக்கிறது.

‘‘பெண்டாட்டி பிள்ளைக்கே சோறு போட முடியாமல் தவிக்கும் நாங்கள் பால் சுரக்காத, உழவுக்குப் பயன்படாத மாட்டைப் பராமரிக்க நாளொன்றுக்கு 200 ரூபாய் எப்படி செலவு செய்வோம்? பயன்படாத மாட்டை விற்றால்தான் புதிய மாடு வாங்க முடியும். விற்பது குற்றம் என்றால், இனி மாடே வேண்டாம் என்று தலை முழுகிவிட வேண்டியதுதான்’’ என்று குமுறுகிறார்கள் மகாராட்டிரா விவசாயிகள்.

பா.ஜ.க. கும்பல் புளுகுவதைப் போல மாட்டுக்கறி விற்பனையின் காரணமாக மாடுகளின் எண்ணிக்கை குறையவில்லை. 2012-ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, 2007-இல் இருந்ததைக் காட்டிலும் மாடுகளின் எண்ணிக்கை 7.16% அதிகரித்திருக்கிறது. இந்த தடைச் சட்டத்தின் காரணமாக, பால் மாடுகளையும் உழவு மாடுகளையும் வைத்திருக்கும் கோடிக்கணக்கான விவசாயிகள் இனி மாடு வளர்ப்பது கட்டுப்படியாகாது என்று முடிவு செய்தால், அதன் விளைவுதான் மோசமாக இருக்கப்போகிறது. பயன்பாடில்லாமல் போன குதிரைகள் காலப்போக்கில் அருகிப் போனதைப் போல, பல்வேறு ரகங்களைச் சேர்ந்த நாட்டு மாடுகள் நிரந்தரமாக அழிந்துவிடும்.

இன்று பால் உற்பத்தியில் உலகில் முதலிடம் வகிக்கிறது இந்தியா. கூட்டுறவு பால் உற்பத்தி அமைப்பான அமுல் நிறுவனத்தை குஜராத்தில் உருவாக்கிய குரியனுக்கு இதில் முக்கியப் பங்குண்டு. பசுவதைத் தடைச்சட்டம் பால்மாடு வைத்திருக்கும் விவசாயிகளை அழித்துவிடும் என்று சங்கராச்சாரியிடமே சென்று வாதாடியவர் குரியன். விளைநிலத்திலிருந்து விவசாயியை விரட்டி விட்டு, கார்ப்பரேட் விவசாயத்துக்கு கால்கோள் இடுவதைப் போல, பால் உற்பத்தியிலிருந்தும் விவசாயியை விரட்டுவது, இந்த சட்டத்தின் பின்புலத்தில் மோடி போட்டிருக்கும் திட்டமாக இருக்கக் கூடும்

உலகில் மாட்டுக்கறி (எருமை மாடு) ஏற்றுமதியில் பிரேசிலுக்கு அடுத்த இடத்தில் இந்தியா இருக்கிறது. இந்தியாவின் முன்னணி மாட்டுக்கறி ஏற்றுமதி நிறுவனங்கள் ஆறில் நான்கின் முதலாளிகள் இந்துக்கள். அவற்றில் மும்பையை தலைமையிடமாக கொண்ட இரண்டு நிறுவனங்கள், அல் கபீர், அரேபியன் எக்ஸ்போர்ட் என்று இசுலாமியப் பெயர்களைச் சூட்டிக் கொண்டிருப்பதை முஸ்லிம் மிர்ரர் இணையதளம் அம்பலப்படுத்தியிருக்கிறது. நிறவெறி பிடித்த பார்ப்பனியம், பசு மாமிச ஏற்றுமதிக்குத்தான் தடை விதித்திருக்கிறது. எருமைக்கறி ஏற்றுமதியை அனுமதித்திருக்கிறது. இதனைப் பயன்படுத்திக் கொண்டு கோமாமிசத்தையும் எருமைக்கறி என்று லேபில் ஒட்டி ஏற்றுமதி செய்கிறார்கள் மேற்படி ஹிந்து ஏற்றுமதியாளர்கள். பத்திரிகையாளர் வீர் சங்வி இதனை அம்பலப்படுத்தியிருக்கிறார்.

அதேபோல, மாட்டுக்கறி ஏற்றுமதியில் முன்னிலை வகிக்கும் மாநிலம் குஜராத். மாட்டுக்கறி தடை செய்யப்பட்ட பா.ஜ.க. ஆளும் மாநிலங்களிலோ பாக்கெட்டில் அடைக்கப்பட்ட மாட்டுக்கறிக்கு நட்சத்திர விடுதிகளில் தடை இல்லையாம். ஏனென்றால், அது இறக்குமதி செய்யப்பட்ட கோமாமிசமாம். ஏற்றுமதிக்கும் தடை இல்லை, இறக்குமதிக்கும் தடை இல்லை. உள்நாட்டு உபயோகத்துக்குத்தான் தடை!

காலனியாதிக்க எதிர்ப்புப் போராட்டத்தைப் பிளவுபடுத்த பசுவதையைப் பயன்படுத்திக் கொண்ட பார்ப்பனியம், இன்று மறுகாலனியாக்கத்துக்கு ஏற்ப எடுத்திருக்கும் புதுப்பிறவி இது. வலக்கரத்தில் கோமியம், இடக்கரத்தில் ஹாம்பர்கர்! கேலிக்கூத்துதான். ஆனால், இதனை வீழ்த்தத் தவறினால் குஜராத்தைப் போன்றதொரு ஊழிக்கூத்தை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

● மருதையன்

## உ.பி.மாநிலம்

# பார்ப்பன - பனியா அக்கிரகாரம்!

**உ.பி.மக்கள் தொகையில் 21% மட்டுமே உள்ள ஆதிக்க சாதிகளைச் சேர்ந்தவர்கள் 75% அரசு மற்றும் தனியார்துறை பதவிகளைக் கைப்பற்றியிருக்கிறார்கள்.**

சாதி என்பது புனிதம் - தீட்டு குறித்த நம்பிக்கை மட்டுமல்ல, இத்தகைய நம்பிக்கைகளின் துணை கொண்டு சமூக மேலாதிக்கத்தை நியாயப்படுத்திக் கொள்ளும் ஒரு ஏற்பாடு. அந்த ஏற்பாட்டின் மூலமாக சமூகத்தின் மீது கட்டாயமாக வேலைப் பிரிவினையைத் திணிக்கும் ஒரு விதி. அந்த விதியின் பெயரில் உற்பத்தி சாதனங்கள் மீதான உடைமையையும், அரசியல் அதிகாரத்தையும் தம் வசம் வைத்துக் கொள்வதற்கு ஆளும் வர்க்கங்களால் உருவாக்கப்பட்ட ஒரு நிறுவனம்.

தேர்தல் ஜனநாயகத்தின் மூலமும் தொழில்மயமாக்கம் மற்றும் நகரமயமாக்கத்தின் மூலமும் சாதி என்ற நிறுவனத்தின் ஆதிக்கத்தை ஒழித்துவிட முடியும் என்பது இந்த முதலாளித்துவ ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டோரின் கருத்து. இட ஒதுக்கீடு மற்றும் தேர்தல் வெற்றிகளின் மூலம் சாதி ஆதிக்கத்தை ஒழித்துவிட முடியும் என்பன போன்ற பல நம்பிக்கைகள் இதிலிருந்ததுதான் வளர்கின்றன.

இதனை ஜனநாயக அரசமைப்பு என்று நம்பிக் கொண்டிருப்பவர்களும் கூட, இந்த ஜனநாயக அரசு இந்திய சமூகத்தை ஜனநாயகப்படுத்தி விடவில்லை என்பதையும், சாதி உள்ளிட்ட ஜனநாயக விரோத நிறுவனங்களைப் புதுப்புது வடிவங்களில் வலுப்பெறவே செய்திருக்கிறது என்பதையும் ஒப்புக் கொள்ளவே செய்கிறார்கள். வேடிக்கை என்னவென்றால், இவ்வாறு ஒப்புக் கொள்பவர்கள் அனைவரும் ஒத்த கருத்துள்ளவர்களோ, ஒரே முகாமைச் சேர்ந்தவர்களோ அல்ல.

தாழ்த்தப்பட்ட மக்களைப் பொருத்த வரை, தமக்கெதிரான சாதி ஆதிக்க வன்கொடுமைகள் காரணமாகவும், மதச் சிறுபான்மையினர் தமக்கெதிரான இந்து வெறித் தாக்குதல்கள் காரணமாகவும் இந்த ஜனநாயகத்தின் மீது நியாயமாகவே நம்பிக்கை இழந்திருக்கிறார்கள்.

பார்ப்பன, பனியா, ஆதிக்க சாதியினரோ இட ஒதுக்கீட்டின் காரணமாகத் தமக்கு சம வாய்ப்பு மறுக்கப்படுவதாகவும், பிறப்பின் அடிப்படையில் சலுகை வழங்கப்படும் இந்த நாட்டில் தகுதி-திறமைக்கு மதிப்பில்லை என்றும், சாதி அரசியலின் மூலம் தங்களது ஜனநாயக உரிமை மறுக்கப்படுவதாகவும் புலம்புகிறார்கள். இதன் காரணமாகத்தான் தங்களைப் போன்ற திறமைசாலிகள் அமெரிக்காவுக்கு ஓடவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியிருப்பதாகவும் கூறிக் கொள்கிறார்கள்.

பிறப்பின் அடிப்படையில் சொத்துடைமை, கல்வி, சமூக அதிகாரம் உள்ளிட்ட பலவற்றையும் வாரிசுரிமையாகப் பெற்று அனுபவித்துக் கொண்டே, சாதி என்ற நிறுவனத்தின் பயனைத் எள்ளளவும் அனுபவிக்காதவர்கள் போலவும், சாதி அடையாளத்தைத் துறந்தவர்கள் போலவும் இவர்கள் பாவனை செய்கிறார்கள். இவர்களது முகவிலாசத்தை அம்பலப்படுத்தும் வகையிலான விவரங்களை, அண்மையில் எகனாமிக் அண்டு பொலிடிகல் வீக்லி இதழில் வெளியாகியுள்ள ஒரு கட்டுரை தருகிறது. (Caste and Power Elite in Allahabad, Ankita Aggarwal, Jean Dreze, Aashish Gupta, EPW, Feb,7, 2015)

இந்தக் கட்டுரை உத்தரப் பிரதேச மாநிலம் அலகாபாத்தில் அதிகாரமும் செல்வாக்கும் மிக்க பதவிகளில் உள்ள 1852 நபர்களுடைய பெயர்களைத் திரட்டி, அவர்கள் எந்தெந்த சாதிகளைச் சேர்ந்தவர்கள் என்று ஆய்வு செய்திருக்கிறது. அலகாபாத் பல்கலைக்கழகம், ஐ.ஐ.டி., மாவட்ட நிர்வாகம், மாநகராட்சி, நீதிமன்றங்கள், தொழிற்சங்கங்கள், தன்னார்வக் குழுக்கள் உள்ளிட்ட பல நிறுவனங்களிலும் பதவியிலிருப்பவர்கள் யார் யார் என்பதை இக்கட்டுரை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டிருக்கிறது.

உ.பி. மக்கள் தொகையில் 21% மட்டுமே உள்ள முன்னேறிய சாதிகளைச் சேர்ந்த ஆண்கள்தான் 75% பதவிகளைக் கைப்பற்றியிருக்கிறார்கள் என்கிறது இந்த ஆய்வு. இந்த 21% க்குள்ளும், வெறும் 12% மட்டுமே உள்ள பார்ப்பன, காயஸ்தா சாதியினர்தான் 50% பதவிகளில் அமர்ந்திருக்கிறார்கள்.

அரசுப் பதவிகளில் மட்டுமல்ல, அலகாபாத் நகரில் உள்ள தன்னார்வக் குழுக்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் தலைமைப் பொறுப்புகளில் 80%, பார் அசோசியேசனின் தலைமையில் 90% பேர் முன்னேறிய சாதியினர்தான் இருக்கின்றனர். பிரஸ் கிளப்பின்

நிர்வாகிகளோ 100% பார்ப்பன மற்றும் காயஸ்தா சாதியினர் என்கிறது இந்த ஆய்வு. விளம்பர நிறுவன உரிமையாளர்கள் 55%, மருத்துவர்கள் 39%, மாணவர் சங்கத் தலைவர்கள் 54%, போலீசு அதிகாரிகள் 58%, ஐ.ஐ.டி. ஆசிரியர்கள் 56%, உயர்நீதிமன்ற நீதிபதிகள் 75%, உயர்நீதிமன்ற வழக்குரைஞர்கள் 58% என்று நீள்கிறது இந்தப் பட்டியல்.

உயர் பதவிகளில் மட்டுமல்ல, வேலைவாய்ப்பு உத்திரவாதமும், நல்ல சம்பளமும் உள்ள பொதுத்துறை நிறுவனங்களில் கடைநிலை ஊழியர், செக்யூரிட்டி போன்ற அதிகத் திறமை தேவைப்படாத பணிகளிலும் முன்னேறிய சாதியினர் 36% இருக்கின்றனர் என்றும், அதேநேரத்தில், கடைநிலை ஊழியர்களிலேயே கடுமையான உடலுழைப்பைக் கோருகின்ற வேலைகளில் இவர்களைக் காண முடிவதில்லை என்றும் கூறுகிறது இந்த ஆய்வு.



''நான் பிறவி அறிவாளி. எனது வாழ்க்கையை இட ஒதுக்கீடு சீர்குலைத்துவிட்டது'' என்ற ஆதிக்க சாதி திமிர் பிடித்த பதாகைகளோடு இட ஒதுக்கீட்டிற்கு எதிராக டெல்லியில் நடந்த ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)

உத்தரப் பிரதேசத்தைப் பொருத்தவரை அங்கே தம் பெயருக்குப் பின்னால் சாதிப் பட்டதைப் பயன்படுத்தாதவர்கள் தாழ்த்தப்பட்ட சாதியினர் மட்டும்தான். மற்ற ஆதிக்க சாதியினர் அனைவரும் தங்களுடைய பெயருக்குப் பின்னால் சாதிப் பட்டத்தை மிகவும் இயல்பாகப் பயன்படுத்துகின்றனர். எனவே, சாதிப் பட்டத்தை பயன்படுத்தாதவர் என்றாலே, அவர் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவராக இருக்கக் கூடும் என்று கருதும் நிலையே சமூகத்தில் நிலவுகிறது.

ஆனால், உத்தர பிரதேசமாக இருக்கட்டும் அல்லது பெரியார் இயக்கத்தின் காரணமாக சாதி வால் துண்டிக்கப்பட்ட தமிழகமாக இருக்கட்டும்; முன்னேறிய சாதியினரைப் பொருத்தவரை அவர்களெல்லோரும் தம்மைச் சாதி பாராட்டாதவர்கள் என்றே கூறிக் கொள்கிறார்கள். இட ஒதுக்கீட்டுக்கு எதிராக வெறுப்பைக் கக்கும் இவர்கள், சாதியைச் சொல்லி சலுகை பெற விரும்பாதவர்களாகவும் தங்களை சித்தரித்துக் கொள்கிறார்கள். அதே நேரத்தில் அதிகாரமும் செல்வாக்கும் மிக்க பதவிகளையும் பெருமளவில் கைப்பற்றிக் கொள்கிறார்கள். இது எப்படி சாத்தியமாகிறது?

மற்ற சாதிகளில் தகுதியான நபர்கள் குறைவாக இருப்பதுதான் இதற்கு காரணம் என்று அவர்கள் உடனே இதற்கு விளக்கமளிப்பார்கள். உண்மை அப்படியில்லை. உ.பி. மாநிலத்தின் பட்டதாரிகளில் 50% பேர் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதியினர் மற்றும் முஸ்லிம்கள். இருந்த போதிலும் வேலைவாய்ப்பில் அவர்களுக்குரிய பிரதிநிதித்துவம் கிடைப்பதில்லை. இதற்குக் காரணம், அவர்களுடைய பின்தங்கிய சமூகப் பின்புலமோ, தகுதிக் குறைவோ அல்ல. மாறாக, அவர்களை உள்ளே நுழைய விடாமல் மவுனமான முறையில் முன்னேறிய சாதியினர் காட்டும் எதிர்ப்பு.


ஏற்கெனவே அதிகாரமிக்க பதவிகளில் நிரம்பியிருக்கும் முன்னேறிய சாதியினர், ஒடுக்கப்பட்ட சாதியினரைத் தங்கள் உலகத்துக்குள் அவ்வளவு சுலபமாக அனுமதித்து விடுவதில்லை. தாழ்த்தப்பட்ட-பிற்படுத்தப்பட்ட சாதியினரின் வேலைவாய்ப்புகளைப் பறிக்கிறார்கள் என்று மட்டும் இதனை நாம் புரிந்து கொள்ளக் கூடாது. தங்களது ஆதிக்கம் தொடருவதை உத்திரவாதம் செய்து கொள்வதன் வழியாக, இந்தப் படிநிலைச் சாதி அமைப்பு குலைந்து விடாமல் பாதுகாக்கிறார்கள்.

இதனைச் சாதிப்பது முன்னேறிய சாதியினரின் சாதி ரீதியான வலைப்பின்னல். இத்தகைய சாதி அபிமானம் என்பது முன்னேறிய சாதியினருக்கு மட்டும் உரியதல்ல என்பது உண்மைதான். எனினும், ஏற்கெனவே சமூக ஆதிக்கத்தில் இருக்கும் சாதிகள் என்ற முறையில், தமது ஆதிக்கத்தைத் தக்க வைத்துக் கொள்வதில் இவர்கள் தீவிரமாக இருக்கிறார்கள். இந்த வலைப்பின்னல் நவீன சமுதாயத்துக்கு ஏற்ற வடிவில், சாதிச் சங்கம், கூட்டுறவு, வங்கிகள், டிரஸ்டுகள் போன்ற வடிவங்களில் இருக்கிறது.

பல சந்தர்ப்பங்களில் இது அமைப்பு என்ற ஒன்றே தனியாகத் தேவைப்படாத சுயசாதி அபிமான உள்ளுணர்வாக இருப்பதால், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதியினருக்கான இட ஒதுக்கீட்டைப் போல இதனை வெளிப்படையாக அடையாளம் காண முடியாது.

இந்த வலைப்பின்னலின் மூலம் முன்னேறிய சாதியினர் தங்களுடைய ஆட்களுக்கு வழங்கிக் கொள்ளும் இட ஒதுக்கீடு, ஒருவகை சங்கேத மொழியினால் ஆனது. சட்டபூர்வமான இட ஒதுக்கீட்டு ஏற்பாடு எதுவுமின்றி, தாங்கள் வகிக்கின்ற பதவி மற்றும் அதிகாரத்தின் துணையைக் கொண்டே தமது சாதியின் ஆதிக்கத்தை இவர்கள் தக்க வைத்துக் கொள்கிறார்கள். மற்றவர்களை உள்ளே நுழைய விடாமல் தடுப்பதற்கேற்ற, பல சட்டபூர்வமான மற்றும் சட்டவிரோதமான வழிமுறைகளை இவர்கள் ஒரு கலையாகவே உருவாக்கி வைத்திருக்கிறார்கள்.

மார்ச் 2011-இல் மைய அரசு வெளியிட்டுள்ள விவரப்படி, மைய அரசின் துறைச் செயலாளர்கள் 149 பேரில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் ஒருவர்கூடக் கிடையாது. பழங்குடியினத்தவர் 2 பேர். கூடுதல் செயலர்கள் 108 பேரில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடி இனத்தவர் தலா 2 பேர் மட்டும்தான்.




நாடு முழுவதும் உள்ள மையப் பல்கலைக்கழகங்களில் தாழ்த்தப்பட்டோருக்கு ஒதுக்கப்பட்ட ஆசிரியர் பணியிடங்களில் 43.5% நிரப்பப்படவில்லை. சட்டப்படி இட ஒதுக்கீட்டைக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கும் அரசு வேலைவாய்ப்புகளிலேயே இதனை அவர்களால் சாதிக்க முடிகிறது என்றால், தனியார் துறையைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை.

தனியார் நிறுவனங்களில் பதவியிலிருக்கும் முன்னேறிய சாதியினர், வேலைக்கான விண்ணப்பப் படிவங்களிலிருந்தே விண்ணப்பிக்கும் நபரின் சாதியைத் தெரிந்து கொள்ள முடிவதால், மற்றவர்களுக்கு அங்கேயே கதவு மூடப்பட்டு விடுகிறது. தனியார் நிறுவனங்களில் கடைநிலை ஊழியர் அல்லாத மற்ற வேலைகளுக்கு தலித் மற்றும் முஸ்லிம்கள் விண்ணப்பித்தால் அதற்குப் பதிலே வருவதில்லை என்று கூறுகிறது இந்த ஆய்வு. உ.பி.யில் மட்டுமல்ல, ஏறத்தாழ நாடு முழுவதுமே இதுதான் நிலைமை.

உ.பி.யை விட்டுத் தள்ளுவோம். இந்தியாவின் 40 பெரிய ஊடக நிறுவனங்கள் ஒன்றில்கூட, குறிப்பிட்டு சொல்லத்தக்க பதவி எதிலும் ஒரு தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் கூடக் கிடையாது. 71% பதவிகளில் இருப்பவர்கள் பார்ப்பனர் உள்ளிட்ட முன்னேறிய சாதியினர்தான் என்கிறது 2006-இல் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வு.

ஆனால், உ.பி. அரசுப் பணிகளிலேயே துப்புரவுத் தொழிலாளிகளில் 40% தாழ்த்தப்பட்டவர்கள். மலம் அள்ளுவோர் 100% தாழ்த்தப்பட்டவர்கள். அலகாபாத் நகரின் ரிக்சா ஓட்டிகளில் 50% தாழ்த்தப்பட்டவர்கள். மாநகராட்சியில் இறந்து போன விலங்குகளை அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருப்போர் 100% பேர் ''டோம்'' என்று அழைக்கப்படும் தாழ்த்தப்பட்ட சாதியினர். டோம் என்பது சாதியின் பெயராக மட்டுமின்றி, அந்தப் பணியாளர்களுக்குரிய பெயராகவே அங்கே புழங்கப்படுகிறது.

அதாவது, செத்த மாட்டைத் தூக்குதல் என்பது ஒரு குறிப்பிட்ட சாதியினர் மட்டுமே செய்யவேண்டிய தொழில் என்று மிகவும் இயல்பாக இந்த ஜனநாயக சமூகத்தால் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

போலோ விளையாட்டை ராஜ்புத் சாதிக்காரர்களைத் தவிர, பிறர் விளையாடக்கூடாது என்று அந்தச் சாதியைச் சேர்ந்த தனது பள்ளி நண்பர்கள் இயல்பாகவே கருதிக் கொண்டிருந்தனர் என்றும், தன்னை விளையாட அனுமதிக்கவில்லை என்றும் ராஜஸ்தானில் தான் பெற்ற அனுபவத்தைப் பதிவு செய்திருக்கிறார் ஒரு பத்திரிகையாளர். 2008-ஆம் ஆண்டில் இந்திய கிரிக்கெட் அணியின் 11 உறுப்பினர்களில் 7 பேர் பார்ப்பனர்களாக இருப்பது ஏன் என்று கேள்வி எழுப்பிய போது, அது தற்செயலானது என்று அலட்சியமாகப் பதிலளித்தார் தேசிய கிரிக்கெட் அகாதமியின் தலைவர். அவரும் ஒரு பார்ப்பனர் என்பது இன்னொரு தற்செயல் நிகழ்வு.

இயல்பானவை அல்லது தற்செயலானவை என்று கருதப்படுவனவற்றின் பட்டியல் இதோடு முடியவில்லை. 2012-ஆம் ஆண்டில் வெளிவந்துள்ள புள்ளி விவரங்களின்படி, இந்தியாவின் முதல் 46 கோடீசுவர தொழிலதிபர்களில், 28 பேர் பனியா, மார்வாரி சாதிகளைச் சேர்ந்தவர்கள். மற்றவர்கள் பார்சி, சிந்தி, பார்ப்பனர்கள். ஒரு சிலர் மட்டுமே பிற்படுத்தப்பட்ட சாதிகளை சேர்ந்தவர்கள். முஸ்லிம் ஒருவர். தாழ்த்தப்பட்டோர் யாரும் இல்லை. இந்தியாவின் முதல் பத்து கோடீசுவரர்களில் 8 பேர் பனியாக்கள்.

தனியார்துறை, பொதுத்துறை ஆகிய இரண்டையும் சேர்ந்த முதல் 1000 இந்திய கார்ப்பரேட் நிறுவனங்களுடைய மொத்த இயக்குநர்களின் (போர்டு உறுப்பினர்களின்) எண்ணிக்கை 9052. இவர்களில் பார்ப்பனர்கள் 4037, வைசியர்கள் 4167, சத்திரியர்கள் 43, பிறர் 137, பிற்படுத்தப்பட்டோர் 346, தாழ்த்தப்பட்டோர் 319 பேர். அதாவது 93% பேர் முன்னேறிய சாதியினர்.

கார்ப்பரேட் நிறுவனங்களை நிர்வாகம் செய்வதற்கு நியமிக்கப்படும் தொழில்முறை இயக்குநர்களிலும் ஆகப் பெரும்பான்மையினர் பார்ப்பனர்களாகவும் பனியாக்களாகவும் இருப்பதை வாரிசுரிமை, தற்செயல், திறமை என்பன போன்ற பல சொற்கள் மூலம் அவர்கள் நியாயப்படுத்துகிறார்கள். ஆனால், சாதியை ஒரு மூடுண்ட வர்க்கமாக அவர்கள் பேணுகிறார்கள் என்பதே உண்மை.

தரகு முதலாளிகளாகவும், அதிகார வர்க்கமாகவும் தங்கள் சாதிக்காரர்களே தொடர்ந்து நீடிக்கும்போது மட்டும்தான், தமது வர்க்க நலனையும் ஆதிக்கத்தையும், (அதாவது தேசிய நலனை) பாதுகாத்துக் கொள்ள முடியும் என்று அவர்களுடைய உள்ளுணர்ச்சியே அவர்களுக்குச் சொல்கிறது. அர்ச்சகனாகப் பார்ப்பான் மட்டுமே இருக்க வேண்டும் என்பது தங்களுடைய நலனுக்காக செய்யப்பட்ட ஏற்பாடல்ல, கோயிலின் நலன் கருதியும் சமூகத்தின் நலன் கருதியும் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடு என்று பார்ப்பனர்கள் கூறும் விளக்கத்தைப் போன்றதுதான் இது.

இது புரிந்து கொள்ளக் கடினமான விடயமல்ல. தாங்கள் வாடகைக்குக் குடியிருக்கும் அடுக்கு மாடிக் குடியிருப்பில், ஒரு தாழ்த்தப்பட்டவரோ முஸ்லிமோ குடியமர்ந்து விடக்கூடாது என்று எண்ணும் ஆதிக்க சாதி மனோபாவம், தனது அலுவலகத்தில் தனக்குச் சமமான ஒரு பதவியில் அவர்கள் அமர்வதை சகித்துக் கொள்ளுமா? தன்னுடைய தொழிலில் ஒரு பங்கு தாரராகவோ, இயக்குநர் குழுமத்தில் ஒரு இயக்குநராகவோ அவர்களைச் சேர்த்துக் கொள்ளுமா?

இந்தச் சாதிய மனோபாவம் பழமைவாதக் கட்டுப் பெட்டித்தனமல்ல. தமது வர்க்க நலனைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு பார்ப்பன, பனியா ஆதிக்க சக்திகள் நடத்தும் அழுகுணி ஆட்டம். இட ஒதுக்கீட்டுக் கொள்கை தவறு என்றும், தகுதி - திறமை - போட்டி அடிப்படையிலான சந்தைப் பொருளாதாரம்தான் வேலை வாய்ப்புகளைத் தீர்மானிக்க வேண்டும் என்றும் சமூகத்துக்கு உபதேசம் செய்யும் இந்த யோக்கியர்கள், எல்லா இடங்களிலும் புழக்கடை வழியாகத் தம் சாதிக்காரனை நுழைத்து போட்டியையும் திறமையையும் முறியடிக்கிறார்கள்.

சமத்துவம் கிடையாது, சமூகம் முழுமைக்கும் பொதுவான ஒரு நீதியோ விதியோ கிடையாது - என்பதுதான் சாதியமைப்பின் விதி. ஜனநாயக விழுமியங்களின்படி இது ஒரு முறைகேடு, ஊழல். அந்த வகையில் தொழில் துறை, அதிகார வர்க்கம், ஊடகங்கள் உள்ளிட்ட அரசியல் பொருளாதார சமூக நிறுவனங்கள் அனைத்தையும் ஆதிக்க சாதியினர் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதென்பதுதான் இந்த சமூக அமைப்பின் முதற் பெரும் ஊழல்.

சவுதாலாவுக்கு ஒரு நீதி, ஜெயலலிதாவுக்கு ஒரு நீதி என்ற அயோக்கியத்தனமும், குஜராத் கொலையாளிகள் விடுவிக்கப்படுவதும், மோடிக்கும் ஜெயலலிதாவுக்கும் ஊடகங்கள் காவடி எடுப்பதும், உச்சநீதி மன்றம் முதல் ஊடகங்கள் வரை சுப்பிரமணிய சாமி என்ற பார்ப்பனத் தரகன் செல்வாக்கு செலுத்துவதும், இந்த நாட்டையே அம்பானி, அதானி தேசமாக மாற்றியமைக்கும் நடவடிக்கைகள் எதிர்ப்பின்றி நிறைவேறுவதற்கும் அடிப்படையாக அமையும் ஊழல் இதுதான்.

• அஜித்

# ஆர்.எஸ்.எஸ்.இன் சோதனைக் கூடமாகிறதா தமிழகம்?

புதிய தலைமுறை தொலைக்காட்சியில் உலக மகளிர் தினத்தையொட்டி, ‘‘தாலி பெண்களைப் பெருமைப்படுத்துகின்றதா? சிறுமைப்படுத்துகின்றதா?’’ என்ற விவாத நிகழ்ச்சியை ஒளிபரப்பக்கூடாதென்று வெறிக்கூச்சலிட்ட இந்து மதவெறிக் காலிகள், அத்தொலைக்காட்சி நிறுவனத்தின் ஊழியர்களைத் தாக்கி, அவ்வலுவலகத்தின் மீது டிபன் பாக்ஸ் வெடிகுண்டுகளை வீசினார்கள். ‘‘இப்போ போட்டது பட்டாசுதான், அடுத்தமுறை வெடிகுண்டே போடுவேன்’’ என்று திமிராகப் பேட்டியும் கொடுத்தான், இந்து இளைஞர் சேனா என்ற அமைப்பின் தலைவன் ஜெயம் பாண்டியன்.

மாதொருபாகன் பிரச்சினையில் எழுத்தாளர் பெருமாள் முருகனைத் தாக்கினார்கள். அதன் தொடர்ச்சியாக, இன்று தொலைக்காட்சி நிலையத்தின் மீது தாக்குதலை தொடுத்திருக்கிறார்கள்.




இதனை பத்திரிகை சுதந்திரத்தின் மீதான தாக்குதல் என்ற அளவில் மட்டும் வெட்டிச் சுருக்கிவிட முடியாது. இது இந்துமதவெறி பாசிஸ்டுகள் நாடு முழுவதும் நடத்தி வரும் வெறியாட்டத்தின் ஒரு அங்கம்.

அதிலும் குறிப்பாக, தமிழ்நாட்டிலிருந்து பகுத்தறிவு, சுயமரியாதையுணர்வு, தமிழ் உணர்வு ஆகிய அனைத்தையும் துடைத்து ஒழிக்க வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டு இந்து வெறி பாசிஸ்டு அமைப்புகள் வேலை செய்து வருகின்றன என்பதற்கான துலக்கமான எடுத்துகாட்டுதான் இந்த வெடிகுண்டு வீச்சு.

இவ்வுண்மைகளை எடுத்துரைத்தும், இந்த பார்ப்பன இந்து மத வெறி நச்சுப் பாம்புகளை அடித்து விரட்ட வேண்டிய அவசியத்தை மக்களுக்கு உணர்த்தும் வகையிலும், மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, பெண்கள் விடுதலை முன்னணி ஆகிய அமைப்புகள் இணைந்து, மக்கள் மத்தியிலும் அனைத்து ஊடக நிறுவனங்களிலும் பணியாற்றும் ஊழியர்களைச் சந்தித்தும் விரிவான அளவில் பிரச்சாரத்தை நடத்தினர். இதனைத் தொடர்ந்து கடந்த மார்ச்-19 அன்று சென்னை-வள்ளுவர் கோட்டம் அருகே கண்டன ஆர்ப்பாட்டத்தையும் நடத்தினர். •

## ஹாசிம்புரா படுகொலை தீர்ப்பு:

# முதுகில் குத்திய துரோகம்!

**அப்பாவி முசுலீம்களைக் கடத்தி சென்று, படுகொலை செய்த இந்து மதவெறி போலீசு கிரிமினல்களை விடுவிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடே வழக்கும் நடத்தப்பட்டு, தீர்ப்பும் அளிக்கப்பட்டுள்ளது.**


தமக்கு இழைக்கப்பட்ட கொடூரமான அநீதிக்கு நீதி கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் 28 ஆண்டுகளாகக் காத்திருந்து, அதற்காகப் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு, அதற்காகப் போராடி வந்தவர்களை எள்ளிநகையாடும் விதத்தில் இன்னொரு அநீதி இழைக்கப்படும்பொழுது, அத்துயரத்தை எந்தவொரு வார்த்தையாலும் எடுத்துச் சொல்ல முடியாது. 1987-இல் நடந்த ஹாசிம்புரா முசுலீம் படுகொலை வழக்கில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருந்த இந்து மதவெறி பிடித்த போலீசு மிருகங்கள் அனைவரையும் விடுதலை செய்து டெல்லி நீதிமன்றம் அளித்திருக்கும் தீர்ப்பு அநீதியானது மட்டுமல்ல, நீதிமன்றங்கள் உள்ளிட்டு அரசு இயந்திரத்தின் அனைத்துக் கூறுகளும் ஆர்.எஸ்.எஸ். இந்து மதவெறி பாசிசத்தின் கைக்கூலியாகச் செயல்படுவதன் அடையாளமும் ஆகும்.

உ.பி. மாநிலம் மீரட் நகரில் உள்ள ஹாசிம்புராவில் நடந்த முசுலீம் படுகொலையை மோடியின் குஜராத்தில் நடந்த முசுலீம் பெருந்திரள் படுகொலையின் முன்னோடி எனலாம். போலீசு, இராணுவம் உள்ளிட்ட மொத்த அரசு இயந்திரமும் ஆர்.எஸ்.எஸ்ஸாக மாறி நடத்திய படுகொலை இது. இப்படுகொலையின் தொடக்கப்புள்ளியாக இரண்டு சம்பவங்கள் அமைந்தன.

மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த ஷா பானு என்ற வயதான, கணவனால் விவாகரத்து செய்யப்பட்ட தாய், ஜீவனாம்சம் தரக்கோரி தொடுத்த வழக்கில் உச்சநீதி மன்றம் அவருக்குச் சாதகமான தீர்ப்பை ஏப்ரல் 1985-இல் அளித்தது. இத்தீர்ப்பைத் தமது மதக் கோட்பாடுகளின் மீதான தாக்குலாக முசுலீம் அடிப்படைவாத சக்திகள் ஊதிப் பெருக்கவே, அப்பொழுது ராஜீவ் காந்தி தலைமையில் இருந்த காங்கிரசு அரசு, உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பை ரத்து செய்யும் விதத்திலான சட்டமொன்றை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றத் தயாரானது. இச்சட்டம் 1986 மே மாதத்தில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்கு முன்னதாகவே, பாபர் மசூதி வளாகத்தில் வைக்கப்பட்டிருந்த ராமர் சிலையை அவ்வளாகத்தினுள் சென்று வழிபடுவதற்கு இந்துக்களை அனுமதிக்குமாறு உத்தரவிட்ட பைசலாபாத் நீதிமன்றத் தீர்ப்பை ஏற்று, 1986 பிப்ரவரியில் பாபர் மசூதி வளாகம் திறந்துவிடப்பட்டது.

இந்த இரண்டு நிகழ்வுகளும் இந்து, முசுலீம் மதவெறி அரசியல் செழித்து வளர்வதற்கான வாய்ப்புகளைத் திறந்து விட்டன. குறிப்பாக, வெகுகாலமாகப் பூட்டப்பட்டுக் கிடந்த பாபர் மசூதி வளாகத்தை ராமர் வழிபாட்டுக்காகத் திறந்துவிட்ட நிகழ்வு, ஆர்.எஸ்.எஸ். இந்து மதவெறிக் கும்பலுக்குத் தமது நிகழ்ச்சிநிரலை மேலும் வன்மத்தோடு எடுத்துச் செல்வதற்கு

படுகொலைக்கு முன்பு: ஹாசிம்புராவைச் சேர்ந்த முசுலீம்கள், தமது வீடுகளிலிலிருந்து இராணுவச் சிப்பாய்களால் துப்பாக்கி முனையில் இழுத்து வரப்பட்டு, சாலையில் கைகளைத் தூக்கியவாறு உட்கார வைக்கப்பட்டுள்ள பயங்கர காட்சிகள்.





(கோப்புப் படம்)

உந்து விசையாகப் பயன்பட்டது. அக் கும்பல் இந்தி பேசும் வடமாநிலங்களில், ''அறம் காப்போம், ஆலயம் காப்போம்'' என்ற முழக்கத்தை முன்வைத்து, ஊர் வலங்களையும், ரத யாத்திரைகளையும் நடத்தி, எந்நேரத்திலும் இந்து-முசுலீம் கலவரம் வெடிக்கலாம் என்ற முறுகல் நிலையை ஏற்படுத்தி வந்தது.



இந்து மதவெறி கொண்ட பிரதேச ஆயுதப் படை போலீசாரால் படுகொலை செய்யப்பட்ட தமது அன்புக்குரியவர்களின் புகைப்படங்களுடன் முசுலீம் தாய்மார்கள். (கோப்புப் படம்)

இச்சூழ்நிலையில்தான் உ.பி. மாநிலத் திலுள்ள மீரட் நகரில் 1987 ஏப்ரல், மே மாதங்களில் இந்து-முசுலீம்களிடையே அடுத்தடுத்து மோதல்களும், கலவரங் களும் நடந்தன. அதில் இரு தரப்பிலும் சொத்துக்களுக்கும், தொழில்களுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டதோடு, கணிச மான உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டன. உ.பி.யை ஆண்டு வந்த காங்கிரசு அரசு ஒரு புறம் இம்மோதலில் குளிர்காய்ந்துகொண்டே, இன்னொருபுறம் இந்து மதவெறிக்குச் சார்பாக ஒருதலைப்பட்சமாக நடந்து கொண்டது. அச்சமயத்தில் மீரட் நகரையும் உள்ளடக்கிய காசியா பாத் மாவட்ட போலீசு கண்காணிப்பாளராக இருந்த விபூதி நாரா யண் ராய் இப்படுகொலை பற்றி நினைவுகூர்கையில், ''போலீசு மற்றும் பிரதேச ஆயுதப்படையைச் சேர்ந்த காவலர்களுள் பெரும் பாலோர் இந்துக்களாக இருந்ததோடு, அவர்கள் அனைவரும் கல வரத்திற்குக் காரணம் முசுலீம்கள்தான் என்று நம்பினர். மீரட் மினி பாகிஸ்தானாக மாறிவிட்டதென்றும், முசுலீம்களுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டியது அவசியமானது என்றும் அவர்கள் கருதி வந் ததாக''க் குறிப்பிட்டிருக்கிறார். பிரதேச ஆயுதப்படை போலீசு ஹாசிம்புராவைச் சேர்ந்த 42 முசுலீம்களைச் சுட்டுப் படுகொலை செய்ததற்கு அடிப்படையாக இருந்தது இந்து மதவெறிதான் என் பதற்கு விபூதி நாராயணின் இந்த வாக்குமூலத்திற்கு அப்பால் வேறு சான்றுகள் தேவையில்லை.

1987, மே 22 அன்று மீரட் நகரில் முசுலீம்கள் நெருக்கமாக வாழ்ந்துவந்த ஹாசிம்புரா பகுதியைச் சுற்றிவளைத்த பிரதேச ஆயுதப் படையைச் சேர்ந்த 41 ஆவது பாட்டாலியன் பிரிவு, முசுலீம்கள் அனைவரையும் வீட்டைவிட்டு வெளியேறுமாறும், தவறினால் சுட்டுக் கொல்லப்படுவார்கள் என்றும் உத்தரவிட்டது. வீட்டைவிட்டு வெளியேறிய ஆண், பெண், குழந்தைகள், முதியவர்கள் அனைவரும் நடுத் தெருவில் துப்பாக்கி முனையில் நிறுத்தப்பட் டனர். காலியாக இருந்த வீடுகளினுள் புகுந்து தேடுதல் வேட்டை நடத்திய ஆயுதப் படை போலீசார் வீட்டினுள் இருந்த உடமைகளைச் சேதப்படுத்தியதோடு, பணம், நகைகளைக் கொள்ளையடித்தனர். துப்பாக்கி முனையில் நிறுத்தப்பட்ட முசுலீம்களுள் குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் தனியாகவும் இளவயது முசுலீம்கள் தனியாகவும் பிரிக்கப் பட்டனர். இளவயது முசுலீம்களுள் 42 பேர் பிர தேச ஆயுதப் படை போலீசாரால் வலுக்கட் டாயமாக வேனில் ஏற்றப்பட்டுக் கடத்திச் செல்லப்பட்டனர். இன்னுமொரு 324 பேர் அருகிலுள்ள போலீசு நிலையத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டனர்.

டெல்லியில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் குண்டடிபட்ட தடயத்தைக் காட்டும் முகம்மது உஸ்மான்.



சட்டவிரோதமாகக் கைது செய்யப் பட்டு, கடத்திச் செல்லப்பட்ட 42 பேரில் ஒரு பகுதியினர் முராத் நகரில் உள்ள மேல் கங்கை கால்வாய் பகுதியில் நிற்க வைத்து ஒருவர் பின் ஒருவராகச் சுட்டுக் கொல்லப் பட்டு, அவர்களின் சடலங்கள் அக்கால் வாயில் வீசியெறியப்பட்டன. மற்றொரு பகுதியினர் மகான்பூர் பகுதியில் உள்ள ஹிண்டன் கால்வாய் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்டு வீசியெறியப்பட்டனர். இதே சமயத்தில் போலீசு நிலையத்திற்கு இழுத்துச்செல்லப்பட்ட 324 பேரும் மிகக் கொடூரமாகத் தாக்கப்பட்டு, மீரட் மற்றும் ஃபதேகர் சிறைகளில் அடைக்கப்பட் டனர். அங்கும் அவர்கள்தாக்கப்பட்டதில் ஐந்து முசுலீம்கள் ஃபதேகர் சிறை



அரசு பயங்கரவாதக் குற்றவாளிகளை விடுதலை செய்த தீர்ப்பைக் கண்டித்துத் தன்னார்வ அமைப்புகள் டெல்லியில் நடத்திய ஆர்ப்பாட்டம்.

யிலேயே மரணமடைந்தனர். மேலும், மலியானா என்ற கிராமத்தில் பிரதேச ஆயுதப் படை நடத்திய கண்மூடித் தனமான துப்பாக்கிச் சூட்டில் இருபதுக்கும் மேற்பட்ட முசுலீம்கள் கொல்லப்பட்டனர்.

முராத் நகர் மேல்கங்கை கால்வாய் கரையிலும் ஹிண்டன் கால்வாய் கரையிலும் சுட்டுக் கொல்லப் பட்ட 42 பேரில் ஆறு பேர் நல்வாய்ப்பாக உயிர் பிழைத் தனர். இவர்களுள் நால்வர் முராத் நகர் போலீசு நிலையத் திலும், இருவர் இணைப்புச் சாலை போலீசு நிலையத் திலும் கொடுத்த புகாரையடுத்துதான் இப்படுகொலை சம்பவம் அம்பலத்திற்கு வந்தது. எனினும், படுகொலை நடந்த சமயத்தில் ஆட்சியிலிருந்த காங்கிரசு அரசும், அதற்குப் பின் வந்த சமாஜ்வாதி, பகுஜன் சமாஜ் கட்சி அரசுகளும் 36 அப்பாவி முசுலீம்களை பச்சைப் படு கொலை செய்த போலீசாரைத் தண்டனையிலிருந்து காப்பாற்றுவதில்தான் குறியாக நடந்துகொண்டன.

இப்படுகொலை நடந்த இரண்டாவது நாளே உ.பி. மாநில அரசின் சி.பி.சி.ஐ.டி. பிரிவு விசாரணையைத் தொடங்கிவிட்டாலும், ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு தான் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. பிரதேச ஆயுதப் படையைச் சேர்ந்த அதிகாரிகள் உள்ளிட்டு 60 பேரை சி.பி.சி.ஐ.டி. போலீசார் தமது விசாரணையில் குற்றவாளிகளாக அடையாளம் காட்டி யிருந்தாலும், உ.பி. மாநில அரசு 19 கீழ்நிலை போலீசார் மீது மட்டுமே வழக்கு தொடர அனுமதியளித்தது. இவர் களுள் 16 பேர் மீதுதான் கொலைக்குற்றம் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குகள் தொடரப்பட்டன. எனினும், இந்த 19 பேரும் பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்படவில்லை. மாறாக, அவர்களுக்குப் பதவி உயர்வுகள் தடையின்றி வழங்கப்பட்டன.

1996-இல் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு உ.பி. மாநில காசியாபாத் நீதிமன்றத்தில் வழக்கு தொடங்கியபோதும், இக்குற்றவாளிகளுள் ஒருவர்கூட அந்நீதிமன்றத்தில் விசாரணைக்கு ஆஜராகவில்லை. அவர்கள் தலைமறைவாகிவிட்டதாக நீதிமன்றத்தில் புளுகியது, உ.பி மாநில அரசு. மேலும், இப்படுகொலை குறித்த தடயங்கள் ஒவ்வொன்றும் - படு கொலை செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கிகள் தொடங்கி, முதல் தகவல் அறிக்கைகள் உள்ளிட்டு அனைத்தும் அழிக் கப்பட்டன அல்லது காணாமல் போகச் செய்யப்பட்டன.

இந்நிலையில்தான் பாதிக்கப்பட்ட வர்களுக்காகப் போராடிவந்த ஹாசிம்புரா பாதுகாப்பு கமிட்டி, ''இந்த வழக்கு காசியா பாத்தில் நடந்தால் நீதி கிடைக்காது; எனவே, வழக்கை வேறு மாநிலத்திற்கு மாற்ற வேண்டும்'' என்று கோரி உச்சநீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்ததை யடுத்து, இவ்வழக்கு டெல்லிக்கு மாற்றப்பட்டது. 2002-இல் வழக்கு மாற்றப்பட்ட சமயத்தில் முக்கிய சாட் சியங்களுள் பெரும்பாலோர் இறந்துவிட்டிருந்தனர். முக்கிய தடயங்களும் அழிக்கப்பட்டிருந்தன. டெல்லி நீதிமன்றத்திலும் பதின்மூன்று ஆண்டுகளாக வழக்கு இழுத்தடிக்கப்பட்டு, இறுதியில், ''சந்தேகத்தின் பல னைக் குற்றவாளிகளுக்கு அளித்து அவர்கள் அனைவரை யும் விடுதலை செய்து'' தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

''ஹாசிம்புராவைச் சேர்ந்த 42 முசுலீம்கள் பிரதேச ஆயுதப் படை வேனில் கடத்திச் செல்லப்பட்டது உண்மை. அம்முசுலீம்களுள் 36 பேர் ஆயுதப் படை போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டதும் உண்மை'' என ஒப்புக்கொண்டுள்ள நீதிமன்றம், ''குற்றவாளிகளாக நிறுத்தப்பட்டவர்கள்தான் அந்தப் படுகொலையைச் செய்தார்கள் என்பதை அரசு தரப்பும் சாட்சியங்களும் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை'' எனக் கூறி குற்றவாளிகளை விடுதலை செய்திருக்கிறது.

படுகொலையைச் செய்தது பிரதேச ஆயுதப் படை தான் என்பதை ஏற்றுக்கொண்டுள்ள நீதிமன்றம், ''அப் படையைச் சேர்ந்த வேறு யார் இப்படுகொலையைச் செய்தது? உண்மையான குற்றவாளிகளை நீதிமன்றத் தில் நிறுத்தாமல் அரசு அவர்களைப் பாதுகாப்பது ஏன்?'' என்ற கேள்விகளை எழுப்ப வாய்ப்பிருந்தும் அவற்றை உள்நோக்கத்தோடு புறக்கணித்துவிட்டது. மாறாக, தப்பிப் பிழைத்தவர்கள் அளித்த சாட்சியங்களில் காணப் படும் குறைபாடுகளைப் பூதக்கண்ணாடி கொண்டு ஆராய்ந்து, அவற்றை வஞ்சகமாக ஒதுக்கித் தள்ளி விட்டது.

பிரதேச ஆயுதப் படை போலீசார், தமது அடை யாளத்தை மறைக்கும்படி தலைக்கவசம் அணிந்து கொண்டுதான் இப்படுகொலையைச் செய்துள்ளனர். இப்படுகொலையில் தப்பிப் பிழைத்து சாட்சியம் அளித் தவர்கள், தாம் துப்பாக்கியின் முன் நிறுத்தப்பட்ட பொழுது உயிர் பயத்திலும் பதற்றத்திலும் போலீசாரின் அடையாளத்தை கவனித்திருக்க மாட்டார்கள். அப்படியே கவனித்திருந்தாலும், படுகொலை நடந்து இருபது ஆண்டுகள் கழித்து குற்றவாளிகளை அச்சுப்பிச காமல் அடையாளம் காட்டுவது அசாத்தியமானது. மேலும், வழக்கின் முக்கியமான தடயங்கள் அனைத்தும்

அரசால் திட்டமிட்டு அழிக்கப்பட்டிருந்தன. இப்படிப்பட்ட நிலையில் நீதிமன்றம் சந்தர்ப்ப சாட்சியங்களைக் கொண்டு குற்றவாளிகளைத் தண்டித்திருக்க முடியும். ஆனால், முக்கிய தடயங்கள் அழிக்கப்பட்டது, சாட்சியங்கள் குற்றவாளிகளைச் சந்தேகத்திற்கிடமின்றி அடையாளம் காட்டத் தவறியது - என ஒவ்வொன்றையும் குற்றவாளிகளுக்குச் சாதகமாக்கித் தீர்ப்பு அளித்திருக்கிறது, டெல்லி நீதிமன்றம்.

நாடாளுமன்றத் தாக்குதல் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட அப்சல் குருவைத் தண்டிப்பதற்குப் போதிய ஆதாரங்கள் இல்லாதபோதும், சமூகத்தின் கூட்டு மன சாட்சியைத் திருப்திபடுத்துவதற்காக அவருக்குத் தூக்கு தண்டனையை உறுதி செய்தது, உச்சநீதி மன்றம். இந்த வழக்கிலோ பாதிக்கப்பட்ட முசுலீம்களின், 28 ஆண்டுகளாக நீதிமன்றத்தை நம்பியிருந்தவர்களின் மன உணர்வுகளை நீதிமன்றம் ஒரு பொருட்டாகவே கருதவில்லை. பாதிக்கப்பட்ட முசுலீம்களுக்கு ஒரு நியாயமான தீர்ப்பை வழங்க வேண்டும் என்ற நியாய உணர்வுக்கு பதிலாக, குற்றவாளிகளைத் தப்ப வைக்க வேண்டும் என்ற காவி உணர்வோடு நீதிமன்றமும் செயல்பட்டிருப்பதை இத்தீர்ப்பு எடுத்துக்காட்டுகிறது.

கடந்த இருபது, இருபத்தைந்து ஆண்டுகளில் நாடெங்கும் நூற்றுக்கணக்கான முசுலீம்கள் போலீசாரால் எவ்வித ஆதாரமுமின்றித் தீவிரவாதிகள் என முத்திரை குத்தப்பட்டு, போலி மோதல்களில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இக்கொலை வழக்குகளுள் ஒருசில, நீதிமன்றத்தின் விசாரணையில் இருந்து வருகின்றன. இந்த நிலையில் ஹாசிம்புரா குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டிருப்பது போலீசார் இந்து மத வெறியோடு நடத்திவரும் படுகொலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள ஆசிர்வாதமேயாகும்.

● செல்வம்

# “சர்வதேச மகளிர் தினத்தைக் கொச்சைப்படுத்தாதே!”

## - பெண்கள் விடுதலை முன்னணியின் அறைகூவல்

நண்டு பிராண்டு லுங்கிக்கும், ஆக்ஸ்பிரே சென்ட்டுக்கும் மயங்குவதாக பெண்களைக் காட்டும் ஆபாச வக்கிர விளம்பரங்கள்; வீடு தொடங்கி, அலுவலகம் வரையில் பெண்கள் மீது ஏவப்படும் ஆணாதிக்கத் தாக்குதல்கள்; பொது இடங்களிலும் பணியிடங்களிலும் அன்றாடம் சந்தித்துவரும் பாலியல் சீண்டல்கள்; பதின்பருவ சிறுமி தொடங்கி வயதான மூதாட்டி வரையில் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்படும் கொடுமை; காதலை மறுத்தால் பெண்கள் மேல் ஆசிட் வீச்சுக்குள்ளாவது; காதலித்த குற்றத்திற்காக குடும்ப உறுப்பினர்களாலே படுகொலை செய்யப்படுவது; அரசே முன்னின்று நடத்தும் குடிகெடுக்கும் சாராயக்கடையால் தாலியறுக்கப்பட்ட இளம் விதவைகளின் துயரக்கதைகள்; குடிகார கணவன்களால் அன்றாடம் துன்புறுத்தலுக்குள்ளாக்கப்படும் குடும்பப் பெண்கள்; நூற்பாலைகளிலும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களிலும் கசக்கிப் பிழியப்படும் பெண்களுக்கு எதிரான உழைப்புச் சுரண்டல் - என அன்றாடம் பெண்கள் சந்தித்துவரும் இன்னல்கள் வார்த்தைகளுக்குள் அடங்காதவை.



இத்தகையப் பிரச்சினைகளையெல்லாம் மூடி மறைத்து, மார்ச் - 8 அனைத்துலக மகளிர் தினம் கொண்டாட்ட தினமாக மடைமாற்றப்பட்டிருக்கிறது. விழா நடத்தி கொண்டாடுவது, பெண்களை ஜாலியாக வெளியே அழைத்து செல்வது - என்று மகளிர் குழு சுயஉதவி குழுக்கள் வரையில் இந்தப் பண்பாடு வேரூன்றியிருக்கிறது.

இந்நிலையில், மார்ச் 8 மகளிர் தினம் என்பது கொண்டாட்டத்திற்கான தினமல்ல; பெண்களின் உரிமைகளுக்கான தன்னலமற்ற போராட்டங்களாலும், உயிர்த் தியாகங்களாலும் மலர்ந்த நாள் இது. ஏற்கனவே சமூகத்தில் நிலவிக் கொண்டிருக்கும் ஆணாதிக்கச் சிந்தனைக்கும் இப்போது மக்களை சுரண்டும் மறுகாலனியாக்க கொள்கைகளுக்கும் நெருப்பு வைக்க சிந்திக்க வேண்டியதே மார்ச் 8 மகளிர் தினத்தில் ஆற்ற வேண்டிய கடமை என்ற அறைகூவலோடு, ‘‘உலகப் பெண்கள் தினத்தை உழைக்கும் பெண்கள் தினமாக வளர்த்தெடுப்போம்’’ என்ற முழக்கத்துடன் மார்ச்-8 அன்று திருச்சி, சென்னை, வேலூர், மதுரை, தருமபுரி, பென்னாகரம் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அரங்குக் கூட்டங்களையும் தெருமுனைக் கூட்டங்களையும் நடத்தியது பெண்கள் விடுதலை முன்னணி.

‘‘ஆபாச இணையதளங்களைத் தடை செய்! சாராய ஆலைகளை, டாஸ்மாக்கை இழுத்து மூடு! போதைப் பொருட்களைத் தடை செய்!’’ என்ற முழக்கங்களுடன் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியினர் திருவாரூரில் பேரணி - ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். ●

### பட்ஜெட்:

# இந்தியாவைக் கொள்ளையடிப்போம்!

**அடிக்கட்டுமான வளர்ச்சி என்ற போர்வையில் வரிப்பணத்தையும், மக்களின் சேமிப்புகளையும், நாட்டின் வளங்களையும் கார்ப்பரேட் முதலாளிகளின் காலடியில் கொட்டுகிறார்,மோடி.**

**மோ**டி அரசின் 2015-16 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை, ‘‘எட்டு சதவீத வளர்ச்சியைச் சாதிக்கக்கூடிய புத்திசாலித்தனமான, புதுமையான, ஆக்கபூர்வமான பட்ஜெட்’’ என இந்தியத் தரகு முதலாளிகளும், ஊடகங்களும் புல்லரித்துப் போய் புகழ்ந்துள்ளன. ‘‘இந்தியாவில் அபரித வளமாக உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டுமென்றால், தொழிற்சாலைகள் வர வேண்டும். தொழிற்சாலைகள் வர வேண்டுமென்றால் சாலை, ரயில் போக்குவரத்து, விமான சேவைகள், மின் நிலையங்கள் அடங்கிய அடிக்கட்டுமானத் துறையில் காணப்படும் தேக்கத்தை உடைக்க வேண்டும்’’ என்ற உபாயத்தோடு மோடி அரசு தமது பட்ஜெட்டைத் தயாரித்திருப்பதாகத் தரகு முதலாளிகளும் ஊடகங்களும் பட்ஜெட்டைப் பிரித்து மேய்ந்து, அதில் புதைந்துள்ள வளர்ச்சியின் இரகசியத்தைக் கண்டுபிடித்துக் கூறி வருகின்றனர்.

‘‘இதென்னடா, கொக்கு தலையில் வெண்ணெயை வைத்துப் பிடிக்கும் கதையாக மோடியின் உபாயம் இருக்கிறது’’ என வாசகர்கள் கருதலாம். அப்படி ‘‘சீப்பாக’’ மோடியின் புத்திசாலித்தனத்தை யாரும் எடை போட்டு விடக் கூடாது என்பதற்காகவே, ‘‘இந்த பட்ஜெட்டைப் புரிந்து கொள்வதற்கு கொஞ்சம் பொருளாதார ஞானம் இருக்க வேண்டும்’’ என தினமணி ஆசிரியர் வைத்தியநாத அய்யர்வாள் ‘‘சீரியசாக’’ தலையங்கம் தீட்டி, சாதாரண வாசகர்களைத் திகிலடைய வைக்கிறார். அய்யர்வாள் குறிப்பிடும் இந்தப் பொருளாதார ஞானம் எப்படிபட்டது தெரியுமா?

‘‘கார்ப்பரேட் நிறுவனங்கள் மீது விதிக்கப்படும் வருமான வரியை அடுத்த நான்கு ஆண்டுகளில் படிப்படியாக 30 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாகக் குறைக்கப் போவதாக பட்ஜெட்டில் அறிவித்திருப்பதை, கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட அதீதமான சலுகை என வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்ற கணக்கில் விமர்சிக்கிறார்கள். ஆனால், இது சலுகை யல்ல’’ எனக் குறிப்பிடும் வைத்தியநாத அய்யர் உள்ளிட்ட பொருளாதார புலிகள், ‘‘ஆசிய நாடுகளிலேயே இந்தியாவில்தான் கார்ப்பரேட் நிறுவனங்கள் மீது விதிக்கப்படும் வருமான வரி அதிகமாக இருக்கிறது. வரி அதிகமாக இருப்பதால்தான் வரி ஏய்ப்பும் அதிகமாக நடைபெறுகிறது. வரியைக் குறைத்து விட்டால் வரி ஏய்ப்பும் குறைந்துவிடும் எனக் கணக்கு போட்டு எடுக்கப்பட்ட நடவடிக்கை இது. மேலும், வரி குறைவாக இருந்தால்தான், முதலீடு அதிகமாக வந்து வேலைவாய்ப்பும் பெருகும்’’ என வாதிட்டு ‘ஞானசூன்யங்களுக்கு’ விளக்கியுள்ளனர்.

வரியே இல்லாவிட்டால் வரி ஏய்ப்பே இருக்காது என்பதை இந்தப் புலிகள் அடுத்த முறை நமக்கு விளங்க வைக்கக்கூடும். அதனால்தான் என்னவோ, கார்ப்பரேட் நிறுவனங்களும் பன்னாட்டு ஏகபோக குழுமங்களும் வரி ஏய்ப்பில் ஈடுபடுவதைக் கொஞ்சத்துக்குக் கொஞ்சமாவது தடுப்பதற்காக முந்தைய காங்கிரசு ஆட்சியில் தயாரிக்கப்பட்ட பொது வரிஏய்ப்பு தடுப்புச் சட்டத்தை (General Anti Avoidance Rules) இந்த பட்ஜெட்டிலும் அமலுக்குக் கொண்டுவராமல், அதனை நடைமுறைப்படுத்துவதை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒத்திப் போட்டிருப்பதாக அறிவித்துவிட்டது, மோடி அரசு.

பொதுப் பணத்தை, நிலம் உள்ளிட்ட இயற்கை வளங்களை, பொதுச் சொத்துக்களை கார்ப்பரேட் முதலாளிகளுக்குப் படையல் போடுவதன் வழியாக ‘வளர்ச்சியை’க் கொண்டுவருவதுதான் குஜராத் மாடல். இதனை இந்த பட்ஜெட் வழியாக நாடு முழுவதும் காங்கிரசை விஞ்சிய வெறியோடு நடைமுறைப்படுத்தத் துணிந்திருக்கிறார், மோடி. இந்த பட்ஜெட், அடிக்கட்டுமானத் துறை வளர்ச்சி எனத் திரும்ப திரும்ப பேசுவதை நாட்டின் பொதுச் சொத்துக்களுக்கு நேரவுள்ள கேடு என்றுதான் நாம் பொருள் கொள்ள வேண்டும்.

மோடி அரசு கடந்த ஆண்டு பட்ஜெட்டில் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அளித்த வருமான வரிச் சலுகையின் மதிப்பு மட்டும் 62,399 கோடி ரூபாய். இதோடு, சுங்க வரி மற்றும் கலால் வரிகளில் அளிக்கப்பட்ட சலுகைகளையும் சேர்த்துக் கணக்கிட்டால், கடந்த ஆண்டு மைய அரசுக்கு ஏற்பட்ட வரி இழப்பு 5,48,451 கோடி ரூபாய். அரசுக்குச் சேர்ந்திருக்க வேண்டிய இந்தப்

பிரம்மாண்டமான தொகையில் பெரும்பகுதியைச் சுருட்டிக் கொண்டவர்கள் இந்தியத் தரகு முதலாளிகள், பன்னாட்டு ஏக போக முதலாளிகள் மற்றும் புதுப் பணக்காரர்கள்தான். 5,48,451 கோடி ரூபாய் பெறுமான இவ்வரிச் சலுகைகள் இந்த பட்ஜெட்டிலும் தொடர்கின்றன. ஆனாலும், இந்தியத் தரகு முதலாளிகளும், பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களும் அடிக்கட்டுமானத் துறையில் முதலீடு செய்வதற்குத் தமது பணப் பெட்டியைத் திறந்து வைக்கவில்லை. அந்தப் பொறுப்பையும் மோடி அரசே தனது கையில் எடுத்துக் கொண்டுள்ளது. இந்த பட்ஜெட்டில் மட்டும் மக்களின் வரிப் பணத்திலிருந்து 70,000 கோடி ரூபாய் அடிக்கட்டுமானத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டங்களில் அரசின் கூட்டாளியாக பங்கேற்கும் தனியார் முதலாளிகளுக்கு குறைந்த வட்டியில் நீண்ட கால கடன்களை அளிப்பதற்காக 20,000 கோடி ரூபாய் முதலீட்டில் தேசிய முதலீட்டு நிதியமொன்றை உருவாக்கப் போவதாகவும் பட்ஜெட்டில் வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கிறது.

அடிக்கட்டுமான திட்டங்கள் அனைத்தையும் அரசு - தனியார் கூட்டின் (Public - Private Partnership) வழியாகத்தான் நிறைவேற்ற வேண்டும்; அதன் வழியாகத்தான் வளர்ச்சியைச் சாதிக்க முடியும் என்ற கொள்கையில் மன்மோகன் சிங்குக்கும் மோடிக்கும் இடையே கடுகளவுகூட வேறுபாடு கிடையாது. எனினும், இத்திட்டங்களுக்கான தேவையான நிதியை, கடனை ஏற்பாடு செய்து கொடுப்பதோடு அரசு ஒதுங்கிக் கொள்ளக்கூடாது. இத்திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்படும் இடர்ப்பாடுகள், சவால்கள் அனைத்தையும் அரசுதான் பொறுப்பேற்றுச் சமாளிக்க வேண்டும் என பட்ஜெட்டில் அறிவித்து, காங்கிரசையும் விஞ்சி நிற்கிறார் மோடி.




இந்தப் பொறுப்பினை நிறைவேற்றும் நோக்கில்தான், விவசாயிகளின் சம்மதமின்றி அவர்களின் நிலங்களை அபகரித்துக் கொள்ள வசதியாக நிலம் கையகப்படுத்தும் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவந்துள்ளது மோடி அரசு. இதனின் தொடர்ச்சியாக காண்டிராக்டு சட்டத்திலும் திருத்தங்களைச் செய்யப் போவதாக அறிவித்திருக்கிறது. மேலும், அடிக்கட்டுமானத் திட்டங்களை விரைந்து நிறைவேற்றுவது என்ற போர்வையில் அதில் பங்கேற்கும் கார்ப்பரேட் நிறுவனங்கள் அரசின் அனுமதிகளைப் பெறுவதற்குக் காத்திருக்கத் தேவையில்லை என்ற விதத்தில் அரசு -தனியார் கூட்டுத் திட்டங்களில் புதிய நடைமுறையைப் புகுத்தப் போவதாகவும் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது.

''இந்தியாவில் தயாரிப்போம்'' (மேக் இன் இந்தியா) திட்டம் மூலம் இந்தியாவை உலகின் உற்பத்தி மற்றும் தொழில் கேந்திரமாக மாற்றப் போவதாகச் சவால் அடித்து வருகிறார், நரேந்திர மோடி. ஆனால், அவரது பட்ஜெட்டோ, தொழிலே தொடங்காமல், பெரிய முதலீடும் செய்யாமல், நிலம், நிலக்கரி உள்ளிட்ட இந்தியாவின் வளங்களைக் கேட்பாரற்றுக் கொள்ளையடிக்கும் வாய்ப்பை கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. அதாவது, ''மேக் இன் இந்தியா'' என்ற முகமூடி கிழிந்து, ''லூட் இந்தியா'' ( Loot India - இந்தியாவைக் கொள்ளையடிப்போம்) என்ற உண்மை அம்பலத்திற்கு வந்துவிட்டது.

இந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள ஒரு இலட்சம் கி.மீ. தூரத்திற்கு நெடுஞ்சாலைகள் அமைப்பது, ஒரு இலட்சம் கோடி ரூபாய் பெறுமான ரயில்வே திட்டங்களை நிறைவேற்றுவது, ஒரு இலட்சம் கோடி ரூபாய் முதலீட்டில் ஐந்து மெகா மின் திட்டங்களை அமைப்பது, நகர்ப்புறங்களில் 2 கோடி வீடுகளும், கிராமப்புறங்களில் நான்கு கோடி வீடுகளும் கட்டிக் கொடுப்பது என்பவை யாவும் பி.பி.பி. வழியாகத்தான் நிறைவேற்றப்படும் என்பதால், பொதுப் பணத்தில் கார்ப்பரேட் முதலாளிகளுக்குப் பெரும் கறி விருந்து படைக்க மோடி அரசு தயாராகி விட்டது என்றே கூறலாம்.

● திப்பு

# மோடி – அருண் ஜெட்லி:

# திருடர்கள் ஜாக்கிரதை!

**“மக்களிடமிருந்து தினுசு தினுசாக எப்படிக் கொள்ளையடிக்கலாம் என ரூம் போட்டு யோசிப்பாய்ங்களோ” – எனக் கேட்குமளவிற்கு இந்த பட்ஜெட்டில் மக்கள் மீது சுமைகள் ஏற்றப்பட்டுள்ளன.**


பட்ஜெட் வெளியான ஒரு சில நாட்களிலேயே, ரயில் நிலைய நடைமேடை கட்டணத்தை ஐந்து ரூபாயிலிருந்து பத்து ரூபாயாக உயர்த்தப் போவதாக அறிவித்தது, மோடி அரசு. மேலும், ரயில் நிலையங்களில் கூட்டம் அதிகமாகச் சேரும் திருவிழா நேரங்களில் இக்கட்டணத்தை அதிகாரிகள் தமது மனம்போன படி ஏற்றிக் கொள்ளவும் அனுமதி வழங்கப் பட்டுள்ளது. சினிமா தியேட்டர்களில் கூட்டம் அதிகமாகவுள்ள நாட்களில் நடக்கும் கள்ள டிக்கெட் வியாபாரத்தை, மோடி அரசு ரயில் நிலையங்களுக்கு இறக்குமதி செய்திருக்கிறது.

இப்படியுமா பொதுமக்களைக் கொள்ளையடிக்கத் துணிவார்கள் என நீங்கள் எண்ணினால், மோடியோ அதற்கும் மேலேயும் போய் இந்திய மக்களை அதிர வைக்கிறார். ஆட்சியில் அமர்ந்தவுடன் அவரது அரசு அறிவித்த பிரீமியம் ரயில் திட்டத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இதன்படி, பிரீமியம் ரயில் கிளம்புவதற்கான நேரம் நெருங்க நெருங்க, அதற்கு டிக்கெட் கேட்கும் பயணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அந்த ரயில்களின் கட்டணம் பன்மடங்கு உயர்ந்து கொண்டே போகும். திருவிழா காலங்களில் ஆம்னி பஸ் முதலாளிகள் அடிக்கும் சட்ட விரோதக் கொள்ளைகூட இந்தளவிற்கு வக்கிரமாக இருப்பதில்லை.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை சரிந்தபோதெல்லாம் மோடி அரசு அதன் மீது விதிக்கப்படும் கலால் வரியை அடுத்தடுத்து உயர்த்திக் கொண்டே போனது. இதனால் ஒரு லிட்டர் பெட்ரோலையும் டீசலையும் அவற்றின் அடக்கவிலையை விடப் பத்து ரூபாய் அதிகமாகக் கொடுத்து வாங்கித் தீர வேண்டிய கட்டாயத்திற்குப் பொதுமக்கள் தள்ளப்பட்டார்கள். இந்த கலால் வரி உயர்வின் மூலம் மட்டும் பட்ஜெட்டிற்கு முன்பாகவே பொதுமக்களிடமிருந்து மோடி அரசு கொள்ளையடித்த தொகை ஏறத்தாழ 20,000 கோடி ரூபாய்.

பட்ஜெட்டிலோ ஒரு லிட்டர் பெட்ரோல், டீசல் மீது நான்கு ரூபாய் அளவிற்குச் சாலை மேம்பாட்டு வரி விதிக்கப்பட்டிருக்கிறது. பட்ஜெட் வெளியான அன்றிரவே ஒரு லிட்டர் பெட்ரோல், டீசல் விலை அதிரடியாக மூன்று ரூபாய் உயர்த்தப் பட்டது. பெட்ரோல், டீசல் கட்டண உயர்வு, வரி உயர்வு இவற்றின் மூலம் மட்டுமே இந்த ஆண்டு மைய அரசிற்குக் கிடைக்கவுள்ள கூடுதல் வருவாய் 50,000 கோடி ரூபாய். இதற்கு அப்பால் கடந்த ஆண்டில் சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய் உள்ளிட்ட எரிபொருட்களுக்கு வழங்கப்பட்ட மானியம் 60,000 கோடி ரூபாயில் 30,000 கோடி ரூபாயை ஒரே சொடுக்கில் இந்த பட்ஜெட்டில் வெட்டி, அச்சுமையையும் மக்களின் மீது ஏற்றிவைத்து விட்டது.

வரிக்கு மேல் வரி விதித்து விவசாயிகளையும் பொதுமக்களையும் கசக்கிப் பிழிவதில் வரலாற்றில் இழிபுகழ் பெற்ற சக்கரவர்த்திகளையும் மன்னர்களையும் பாளையக்காரர்களையும் விஞ்சி நிற்கிறது, மோடி அரசு. ஊரறிந்த, உலகறிந்த கார்ப்பரேட் விசுவாசியான ப.சிதம்பரம்கூட இக்கொள்ளையைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், ‘‘இது ஏழைகளின் நலனைக் கருத்தில் கொள்ளாத, பெரு நிறுவனங்களுக்கும் வரி செலுத்துபவர்களுக்கும் சாதகமான பட்ஜெட்’’ என விமர்சித்திருக்கிறார். இந்த



பட்ஜெட் ஏழைகளின் நலன்களைப் புறங்கையால் ஒதுக்கித் தள்ளிவிட்டது என்பது மட்டுமல்ல, உள்நாட்டு தரகு முதலாளிகள், ஏகாதிபத்திய நிறுவனங்கள், புதுப் பணக்காரர்கள் ஆகியோரை மேலும் கொழுக்க வைப்பதற்காக மக்களின் தாலியை அறுத்திருக்கிறார், மோடி.

அடுத்த ஆண்டு பணவீக்கம் 5% சதவீதம் முதல் 6% சதவீதம் வரை இருக்கும் என வைத்துக்கொண்டால், சமூகப் பாதுகாப்புத் துறைகளில் அரசின் செலவுகள் 6% அதிகரித்திருக்க வேண்டும். ஆனால், மோடி அரசோ உணவு, உரம் மற்றும் எரிபொருட்களுக்கு வழங்கப்படும் மானியத்தில் 10% சதவீதம் வரை வெட்டியிருப்ப தோடு, சமூக நலத் திட்டங்களுக்கு ஒதுக்கும் நிதியிலும் கணிச மாகக் கைவைத்திருக்கிறது. பெண்கள் மற்றும் குழந்தை நலத் திட்டங்களுக்கு கடந்த ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதி 18,588 கோடி ரூபாய். அது இந்த பட்ஜெட்டில் 10,382 கோடி ரூபாயாகக் குறைக் கப்பட்டுள்ளது. பொது சுகாதாரத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி 1,963 கோடியிலிருந்து 1,767 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. மருத்துவத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி 39,238 கோடியிலிருந்து 33,150 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. அனைவருக்குக் கல்வி இயக்கத் திட்டத்திற்கு முந்தைய ஆண்டை ஒப்பிடும் பொழுது 22 சதவீத நிதி வெட்டப்பட்டு, 22,000 கோடி ரூபாய் மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது. வயது முதிர்ந்தோர், மாற்றுத் திறனாளிகள், விதவைகள் ஆகியோருக்கு மாதந்தோறும் இரு நூறு ரூபாய் வழங்கும் தேசிய சமூக உதவித் திட்டம் முற்றிலுமாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

உழைக்கும் மக்களின், நடுத்தர வர்க்கத்தின் சமூகப் பாது காப்பை உறுதி செய்வதில் அரசின் பொறுப்பைத் தட்டிக் கழித் திருக்கும் மோடி, அதனை காப்பீடு நிறுவனங்களின் கையில் ஒப் படைத்து, அவற்றின் வருவாயையும் இலாபத்தையும் உத்தரவா தப்படுத்தியிருக்கிறார். இன்னொருபுறமோ, அடிக்கட்டுமானத் திட்டங்களை காண்டிராக்டு எடுத்துச்செய்யும் முதலாளிகள் எதிர் கொள்ளும் இடர்ப்பாடுகளைக் களைவதை அரசின் பொறுப்பில் ஒப்படைத்திருக்கிறார். இந்த அரசு யாருக்காக வேலை செய் கிறது, யாருடைய நலனில் அக்கறை செலுத்துகிறது என்பதைப் புரிந்துகொள்ள இதைவிட வேறு எடுத்துக்காட்டு தேவை யில்லை.

கட்டண உயர்வு, மானிய வெட்டு மட்டுமல்ல, மக்களின் மீது வரி விதிப்பதிலும் மோடி அரசு வக்கிரமான எல்லையைத் தொட்டிருப்பதை சேவை வரி உயர்வு எடுத்துக் காட்டுகிறது. தூய்மை இந்தியா என்ற பெயரில் நடந்துவரும் கூத்தைத் தொடருவதற்கும் மக் கள் மீது சேவை வரியைத் திணித்துள்ள மோடி அரசு, கார்ப்பரேட் சாமியார்கள் நடத்தும் யோகா வகுப்புகளுக்கு வரியை ரத்து செய்திருக் கிறது. செல்வந்தர்கள் மீது விதிக்கப்பட்டு வந்த 1,000 கோடி ரூபாய் பெறுமானமுள்ள செல்வ வரி நிரந்தரமாக ரத்து செய்யப்பட்டுள்ளது. இந்த பட்ஜெட்டில் மக்கள் மீது சுமத்தப்படும் மறைமுக வரிகளான சேவை வரி, சுங்க வரி, கலால் வரி ஆகியவற்றை உயர்த்தியதன் மூலம் மக்களிடமிருந்து 23,383 கோடி ரூபாயைக் கூடுதலாகக் கறந்துள்ள மோடி அரசு, கார்ப்ப ரேட் முதலாளிகளுக்கும் புதுப் பணக்காரர் களுக்கும் 8,315 கோடி ரூபாய் அளவிற்கு வரிச் சலுகைகளை அளித்திருக்கிறது.

இந்த 8,315 கோடி ரூபாய் வரிச் சலுகை என்பது வெளியே தெரியும் முகடுதான். கட்டுக் கட்டான பட்ஜெட் கோப்புகளின் உள்ளே முதலாளி வர்க்கத்திற்கும் புதுப் பணக்காரர் களுக்கும் அளிக்கப்படும் பல இலட்சம் கோடி ரூபாய் பெறுமான வரிச் சலுகைகள் மறைந் துள்ளன என்பதே உண்மை. இக்கும்பல் வெளி நாடுகளிலிருந்து நாய்க்குட்டிகளை இறக்கு மதி செய்துகொள்வதற்குக்கூட 250 கோடி ரூபாய் அளவிற்கு வரிச் சலுகைகளை அனுப விக்கின்றனர்.

மகாத்மா காந்தி வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்குக் குறைவாக நிதி ஒதுக்கிவிட்டு (34,699 கோடி ரூபாய்), ''நாங்கள் மக்களைச் சோம்பேறிகளாக்கும் திட்டத்திற்கு அதிக நிதி ஒதுக்குவதில்லை'' என எகத்தாளமாகப் பதில் அளித்துள்ள மோடி அரசு, மாலை நேர விருந்து களில் அழகுப் பதுமைகளாகச் சுற்றி வரும் புதுப் பணக்கார சோம்பேறிக் கூட்டத்திற்கு, வெளிநாடுகளில் இருந்து தங்க, வைர நகை களை இறக்குமதி செய்து கொள்வதற்காக 75,000



**கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதி திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி 34,699 கோடி ரூபாய். ஆனால், புதுப் பணக்காரர்கள் தங்க, வைர நகைகளை இறக்குமதி செய்துகொள்ள அளிக்கப்பட்டுள்ள சுங்கவரிச் சலுகையோ 75,000 கோடி ரூபாய்.**

கோடி ரூபாய் சுங்க வரிச் சலுகை அளித்திருக்கிறது. இந்த 75,000 கோடி ரூபாய் வரிச் சலுகையை அனுபவிக்கும் தரகு முதலாளித்துவ நிறுவனங்கள், மோடிக்கு பத்து இலட்ச ரூபாய் கோட்டு-சூட்டைப் பரிசளித்த கார்ப் நிறுவனமும் அடங்கும்.




இந்தியத் தரகு முதலாளித்துவ நிறுவனங்கள், பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள், புதுப் பணக்காரர்கள் ஆகியோரின் நலனை முன்னிறுத்தி அளிக்கப்பட்டுள்ள சுங்க வரி, கலால் வரி மற்றும் கார்ப்பரேட் வரிச் சலுகைகளால் இந்த ஆண்டு மைய அரசிற்கு ஏற்படும் வருமான இழப்பு 5,48,451 கோடி ரூபாய். கடந்த பத்தாண்டுகளில் ஏற்பட்டுள்ள இழப்பு ஏறத்தாழ 42 இலட்சம் கோடி ரூபாய். அக்கும்பலுக்கு அளிக்கப்படும் இந்த அசாதாரணமான வரிச்சலுகைகள்தான் பற்றாக்குறையை ஏற்படுத்துகின்றன.

இந்த வரிச் சலுகைகளை ஒழித்துக் கட்டாமல் பற்றாக்குறையை ஈடு செய்ய முடியாது. ஆனால், மோடி அரசோ ஒவ்வொரு ஆண்டு பட்ஜெட்டிலும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வருமான வரிச் சலுகைகளைத் துண்டுதுண்டாக அளிப்பதற்குப் பதிலாக, அவற்றின் மீது விதிக்கப்படும் வரியை 30% சதவீதத்திலிருந்து 25% சதவீதமாகக் குறைக்கப் போவதாக அறிவித்து, வரிச் சலுகைகளை நிரந்தரமாக்கிவிட முடிவு செய்திருக்கிறது.

எட்டு சதவீதத்திற்கு மேலான பொருளாதார வளர்ச்சியைச் சாதிப்பது என்ற போர்வையில் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வரிச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன. அவர்களுக்குத் தேவையான மூலதனம் நிதியாகவும், வங்கிக் கடனாகவும் வாரி வழங்கப்படுகிறது. அவர்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில் இருந்து கடன்களைத் திரட்டிக் கொள்ள அரசே உத்தரவாதம் அளிக்கிறது. அவர்களின் இலாபத்தை உத்தரவாதப்படுத்துவதற்காகப் பழைய சட்டங்கள் கைவிடப்படுகின்றன அல்லது திருத்தப்படுகின்றன.

இதனால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் நெருக்கடிகளின் சுமையைத் தாங்கும் இடிதாங்கிகளாக மக்கள் நிறுத்தப்படுகின்றனர். பட்ஜெட் பற்றாக்குறையை ஈடு செய்ய உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கு வழங்கப்பட்டு வந்த மானியம் வெட்டப்படுகிறது. கல்வி, சுகாதாரம் ஆகிய அத்தியாவசிய சேவைகளுக்கு வழங்கப்பட்டு வந்த நிதி குறைக்கப்படுகிறது. மக்களின் வரிப் பணத்தால் உருவாக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகள் நிதி முதலாளிகளுக்கு விற்கப்படுகிறது. பொதுத்துறை வங்கிகள் வாராக் கடனைச் சுமக்குமாறு தள்ளப்படுகின்றன.

> **பட்ஜெட் பற்றாக்குறையை ஈடு செய்ய உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கு வழங்கப்படும் மானியம் வெட்டப்படுகிறது. கல்வி, சுகாதாரம் ஆகிய அத்தியாவசிய சேவைகளுக்கு வழங்கப்படும் நிதி குறைக்கப்படுகிறது. பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகள் நிதி முதலாளிகளுக்கு விற்கப்படுகின்றன. பொதுத்துறை வங்கிகள் வாராக் கடனைச் சுமக்குமாறு தள்ளப்படுகின்றன.**

இந்திய ஆளுங்கும்பல் தனியார்மயம்-தாராளமயத்தைத் தொடங்கி வைத்தபொழுது, ‘‘இனி தொழிற்துறையை தனியார் முதலாளிகள் கவனித்துக் கொள்வார்கள்; சமூக நலத் திட்டங்களை அரசு கவனித்துக் கொள்ளும்’’ என்ற மயக்கு வார்த்தைகளை அள்ளிவீசியது. ஆனால், நடைமுறையிலோ மக்கள் போராடிப் பெற்ற அனைத்துவிதமான சலுகைகளையும், உரிமைகளையும் பறித்து கார்ப்பரேட் முதலாளிகளுக்குப் படையல் போடும் பூசாரியாக அரசு மாறி நிற்பதைத்தான் பார்க்கிறோம். அதாவது, முதலாளி வர்க்கம் அரசின் அரவணைப்பிலும் சலுகையிலும் பாதுகாப்பிலும் காலந்தள்ளுவது முன்னைக் காட்டிலும் இப்பொழுது மிகவும் வெளிப்படையாக நடைபெற்று வருகிறது. இந்த வகையில் தனியார்மயம்-தாராளமயம் பெரும் தோல்வியைத் தழுவிவிட்டது என்பது மட்டுமல்ல, அந்த வளர்ச்சிப் பாதையை நிராகரிக்காமல், தூக்கியெறியாமல் மக்களுக்கு விடிவு காலம் இல்லை என்பதும் நிரூபணமாகிவிட்டது.

• ரஹீம்

# கார்ப்பரேட் ‘சமூக’ப் பாதுகாப்புத் திட்டங்கள்

**மோடி அரசு அறிவித்துள்ள மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் எனப்படுபவையும்கூட, கார்ப்பரேட் முதலாளிகளுக்கான பாதுகாப்புத் திட்டங்கள்தான்.**

பட்ஜெட் உரையில் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் என்று பெயர் சூட்டப்பட்ட திட்டங்களை விவரிப்பதற்கு நிதியமைச்சர் கணிசமான நேரம் எடுத்துக் கொண்டார். இதனுடன் ஒப்பிடும்போது, கார்ப்பரேட் வரியை 30% இலிருந்து 25% ஆக குறைப்பது பற்றிய அறிவிப்புக்கு அவர் ஒதுக்கியது சில நொடிகள் மட்டுமே. அதேபோல சுங்கவரிக் குறைப்பு குறித்த அறிவிப்புக்கும் சில நொடிகள் மட்டுமே. ஆனால், இவற்றால் அரசுக்கு ஏற்படப்போகும் இழப்போ, சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் என்று கூறப்படும் திட்டங்களுக்கு அவர் செலவிடவிருக்கும் தொகையைப் போலப் பன்மடங்கு அதிகம்.

இந்த பட்ஜெட் உரை முழுவதுமே கார்ப்பரேட் முதலாளித்துவத்தை வலுப்படுத்துவதைப் பற்றித்தான் பேசுகிறது. இதன் ஊடாக சமூகப் பாதுகாப்பு பற்றிய தனது முன்மொழிதல்களை நிதியமைச்சர் நெய்திருக்கிறார். அவர் அறிவித்திருக்கும் திட்டங்களை 3வகையாகப் பிரிக்கலாம்.

முதலாவதாக, அனைத்து மக்களுக்குமான ஆயுள் காப்பீடு. பிரதான் மந்திரி சுரக்ஷா பீமயோஜனா என்ற இந்த திட்டம், விபத்தினால் மரணம் அடைபவர்களுக்கான ஆயுள் காப்பீட்டுத் திட்டம். ஆண்டுக்கு 12ரூபாய் பிரிமியம் செலுத்தவேண்டும். காப்பீட்டுத் தொகை 2 இலட்சம். இந்த காப்பீட்டுத் திட்டத்தில் சேரும் மக்களது எண்ணிக்கை கோடிக்கணக்கில் இருக்கும் என்பதுதான் காப்பீட்டு நிறுவனங்களுக்கு இதில் உள்ள கவர்ச்சி. அப்படி நிச்சயமாக ஒரு ஆதாயம் இருப்பதனால்தான் இந்த காப்பீட்டுத் திட்டத்தை தனியார் காப்பீட்டு நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்தியிருக்கிறார் நிதியமைச்சர்.

அடுத்த திட்டம், இயற்கை மரணம் அல்லது விபத்தினால் மரணம் ஆகிய வற்றுக்கான காப்பீடு. இது 18 வயது முதல் 50 வயது வரை உள்ளோர்க்கு மட்டும்தான். இதன் முதிர்வுத்தொகை 2 லட்சம் ரூபாய். ஆண்டுக்கு கட்ட வேண்டிய பிரிமியம் 330 ரூபாய்.

இரண்டு காப்பீட்டுத் திட்டங்களிலுமே பிரிமியம் தொகையை மக்கள்தான் (சந்தாதாரர்கள்தான்) கட்டவேண்டும். இப்படி சமூகம் (அதாவது அரசு) ஐந்து காசு கூட வழங்காத இந்தத் திட்டங்களுக்குப் பெயர் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களாம்! இப்படியான காப்பீட்டுத் திட்டத்தை எந்த காப்பீட்டு நிறுவனமும் அறிவிக்க முடியும்.

இரண்டாவது சமூக நலத் திட்டத்தின் பெயர் அடல் பென்சன் யோஜனா என்ற புதிய ஓய்வூதியத் திட்டம். ஆண்டுக்கு எவ்வளவு பிரிமியம் செலுத்துவீர்கள், எத்தனை ஆண்டுகளுக்கு செலுத்துவீர்கள் என்பதன் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட ஒரு தொகையை ஓய்வூதியமாக வழங்கும் திட்டம் இது.

அரசைப் பொருத்தவரை, நீங்கள் கட்ட விரும்பும் ஒரு ஆண்டுக்கான பிரிமியம் தொகையில் பாதியை அல்லது அதிகபட்சம் ஆயிரம் ரூபாயைத் தனது பங்களிப்பாக முதல் 5 ஆண்டுகளுக்கு மட்டும் செலுத்தும். அதற்குப் பின் அவரவர் பாடு. டிசம்பர் 31, 2015- க்குள் இந்த திட்டத்தில் சேர்ந்து கொள்பவர்களுக்கு மட்டும்தான் அரசாங்கம் இந்தத் தொகையைச் செலுத்தும் என்பது இன்னொரு கூடுதல் நிபந்தனை.

இந்த திட்டத்தை அமல்படுத்தவிருக்கும் நிறுவனம் எது என்பது இதுவரை அறிவிக்கப்படவில்லை. இது அரசாங்கத் திட்டமாகவும் அரசாங்கத்தால் நிதியளிக்கப்படும் திட்டமாகவும் இருப்பதால், மியூச்சுவல் ஃபண்டு நிறுவனங்கள் இதில் முதலீடு செய்து முன்னேற்றம் காண்பார்கள். அவ்வளவே.

ஓய்வூதியம் என்பதே இல்லாத, முறைசாராத் தொழில்களில் ஈடுபட்டுள்ள ஏழைகள்தான் இந்தத் திட்டத்தின் இலக்கு. 2012-ஆம் ஆண்டு கணக்கின்படி இத்தகைய தொழிலாளர்களின் எண்ணிக்கை 33 கோடி. ஆனால், மத்திய அரசின் தேசிய சமூக உதவித்திட்டத்தின் கீழ் (National Social Assistance Programme) சமூக ஓய்வூதியம் பெறுகின்ற பரம ஏழைகள் என்று ஒரு பிரிவினர் இருக்கிறார்கள். 2006 ஆம் ஆண்டில் தீர்மானிக்கப்பட்ட அடிப்படையில் இவர்களில் சிலருக்கு மாதம் 200 ரூபாய் தரப்படுகிறது. இந்த பரம ஏழைகள் 80 வயதைத் தாண்டி வாழ முடிந்தால், அவர்கள் மாதம் 500 ரூபாய் பெறமுடியும்.

வறுமைக்கோடு என்பதற்கு அரசு நிர்ணயித்திருக்கும் அளவுகோலின்படியே இந்த பரம ஏழை மக்களுக்கு மாதம் ரூ.1000 தரப்பட வேண்டும் என்று ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகத்தின் பணிப் பிரிவைச் சேர்ந்த (Task Force) சிறுபான்மை உறுப்பினர்கள் கோரினார்கள். இதனை நிராகரித்த அமைச்சகம், வேண்டுமானால் பணவீக்கத்துக்காக நூறு ரூபாய் சேர்த்துப் போட்டு, 300 ஆக உயர்த்திக் கொடுக்கலாம் என சிபாரிசு செய்தது. பணமில்லை என்று கூறி இந்த 300 ரூபாயைக் கூடத் தர முடியாது என்று கைவிரித்து விட்டது அன்றைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு.

> **பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள இரண்டு காப்பீடு திட்டங்களுக்கும் பிரீமியம் தொகையை மக்கள்தான் (சந்தாதாரர்கள்) கட்ட வேண்டும். இப்படி சமூகம் (அதாவது அரசு) ஐந்து காசு கூட வழங்காத இந்தத் திட்டங்களுக்குப் பெயர் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களாம்! இப்படியான காப்பீட்டுத் திட்டத்தை எந்த காப்பீட்டு நிறுவனமும் அறிவிக்க முடியும்.**

மேற்கூறிய தேசிய சமூக உதவித் திட்டத்தின் கீழான தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டம், குடும்ப உதவித் திட்டம், பேறு கால உதவித் திட்டம் ஆகியவையெல்லாம், மக்களுடைய உரிமை என்று முறைசாராத் தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்புச்சட்டம் (2008) கூறுகிறது. மேற்கூறிய திட்டங்களுக்கான உதவித்தொகையைப் பணவீக்கத்துக்கு ஏற்ப உயர்த்திக் கொடுக்க வேண்டும். ஆனால், நிதியமைச்சரோ, இந்த சமூகப் பாதுகாப்புச் சட்டம் பற்றியே பட்ஜெட்டில் மூச்சு விடவில்லை.

அடுத்து வருவது, ஊழியர்கள் வருங்கால வைப்பு நிதி (Employee Provident Fund) மற்றும் ஊழியர்களுக்கான அரசு காப்பீட்டுக் கழகம் (Employee State Insurance Corporation) ஆகியவற்றை மெல்ல ஒழித்துக் கட்டுவதற்கான முயற்சி. இ.எஸ்.ஐ. மற்றும் இ.பி.எஃப். ஆகியவற்றுக்கு புதிய மாற்றுகளை வழங்குவது என்ற பெயரில், சட்டரீதியாகப் பாதுகாக்கப்பட்ட மேற்சொன்ன திட்டங்களால் பயன் பெறும் தொழிலாளர்களை அங்கிருந்து வெளியே இழுத்து, முதலீட்டுச் சந்தை மற்றும் தனியார் காப்பீட்டுச் சந்தையில் தள்ளி, அவற்றின் விரிவாக்கத்துக்கு வழி செய்கிறது நிதியமைச்சரின் சமூக நலத் திட்ட அறிவிப்பு.



சாந்தகுமார் கமிட்டியின் பரிந்துரைகளின்படி உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பயன்பெறக் கூடிய ஏழைக் குடும்பத்தினரின் எண்ணிக்கையை 67%-இலிருந்து கணிசமாகக் குறைப்பதே இந்த அரசின் திட்டம். எனவே, உணவுப் பாதுகாப்புக்காக ஒரு போராட்டம் நடத்த வேண்டியிருப்பது தவிர்க்க முடியாதது.

இ.எஸ்.ஐ. வேண்டாம் என்று நினைப்பவர்கள் அதற்குப் பதிலாக மருத்துவக் காப்பீட்டுக்கு (Health Insurance) மாறிக்கொள்ளலாம் என்ற அறிவிப்பின் நோக்கம், மருத்துவக் காப்பீட்டுக் கம்பெனிகளுடைய சந்தையை விரிவுபடுத்துவதும், மருத்துவத்தை முற்று முழுதாக விற்பனைப் பண்டமாக்குவதும் தான்.

ஊழியர் ஓய்வூதியத் திட்டத்திலேயே தொடர்வதா, அல்லது புதிய ஓய்வூதியத் திட்டத்துக்கு மாறிக்கொள்வதா என்று முடிவு செய்யும் வாய்ப்பை தொழிலாளர்களுக்கு வழங்குவது என்ற பெயரில், அவர்களை புதிய ஓய்வூதியத் திட்டத்துக்கு இழுத்து, அதன் மூலம் அந்தப் பணத்தை மூலதனச் சந்தைக்கு கொண்டு செல்வது என்பதுதான் இதன் நோக்கம். எனவேதான், புதிய ஓய்வூதியத் திட்டத்தில் சேருவோருக்கு வரிச்சலுகையும் வழங்குகிறார் நிதியமைச்சர்.

அதுமட்டுமல்ல, சமூகப் பாதுகாப்பு பற்றிப் பேசும் நிதியமைச்சர், வருங்கால வைப்பு நிதிக்காக பணப்பிடித்தம் செய்ய வேண்டுமா, வேண்டாமா என ஊழியர்கள் முடிவு செய்து கொள்ளலாம் என்று ஒரு அபாயகரமான யோசனையையும் முன்வைத்திருக்கிறார். இது தொழிலாளர்களுக்கு இருக்கின்ற கொஞ்ச நஞ்ச சமூகப் பாதுகாப்பையும் ஒழித்துக்கட்டவே பயன்படும். அரசாங்க உத்திரவாதமுள்ள ஓய்வூதியம் என்பதற்குப் பதிலாக, பங்குச் சந்தையில் அதனை முதலீடு செய்தால், கூடுதல் ஆதாயம் கிடைக்கும் என்று ஆசைகாட்டி, தொழிலாளிகளையும் நடுத்தர வர்க்கத்தினரையும் படுகுழியில் இழுத்து விடுவதுதான் இதன் நோக்கம்.

40 தொழிலாளர்களுக்குக் குறைவானவர்கள் பணிபுரியும் இடங்களைத் தொழிலாளர் துறை ஆய்வாளர்கள் சோதனை செய்யக்கூடாது என்பன போன்ற புதிய விதிகள் மூலம் தொழிலாளர் சட்டங்கள் தளர்த்தப்பட்டு வருகின்ற இன்றைய சூழலுடன் நிதியமைச்சரின் மேற்கூறிய அறிவிப்புகளை இணைத்துப் பார்க்க

வேண்டும். ''மேக் இன் இந்தியா'' திட்டம் வெற்றி பெற வேண்டுமானால், தொழில் துறையில் எவ்வித அரசாங்கத் தலையீடும் கூடாது, வேலையில்லாதவர்களுக்கு அரசாங்கம் சமூகப் பாதுகாப்பு வழங்கக் கூடாது என்று அரசு எண்ணுவது தெளிவாகத் தெரிகிறது.




மூன்றாவதாக, நிதியமைச்சர் அறிவித்திருப்பவை, வருமானவரி செலுத்தும் இந்தியர்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள். இதிலும் பட்டியல் நீண்டதாக இருக்கிறதே தவிர, சரக்கு ஏதும் இல்லை. 80 வயதுக்கு மேற்பட்ட வெகு மூத்த குடிமக்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கும் சலுகையை எடுத்துக் கொள்வோம். அவர்களுடைய வருமான வரி விலக்கு பெறத்தக்க மருத்துவச் செலவின் அளவு ரூ.60,000த்திலிருந்து 80,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் பயனடையப் போகிறவர்கள் எத்தனை பேர்? இந்தியாவில் வருமான வரி செலுத்துவோர் 3.6 கோடிப் பேர். இவர்களில் 80 வயதுக்கு மேற்பட்டோர் வெறும் 4.9 இலட்சம் பேர்தான். இவர்களிலும் மேற்கூறிய சலுகைகளைப் பெறும் அளவுக்கு வருமானம் அதிகமுள்ளவர்கள் வெகு குறைவு. ஆகவே, இது பணக்காரச் சிறுபான்மைக்கு வழங்கப்பட்டிருக்கும் சமூகப் பாதுகாப்புத் திட்டம் என்பதே உண்மை.

இது மட்டுமல்ல, வருங்கால வைப்பு நிதியில் (இ.பி.எஃப்., ஜி.பி.எஃப்.,) யாராலும் பாத்தியதை கோரப்படாமல் கிடக்கும் தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களுக்குச் சொந்தமான 9000 கோடி ரூபாயை எடுத்து, மூத்த குடிமக்கள் நல நிதி ஒன்றை ஏற்படுத்தப் போவதாகவும் நிதியமைச்சர் கூறியிருக்கிறார். இது பற்றிய உள் விவரங்களை அவர் வெளியிடாத காரணத்தினால், இது எந்த சமூகத்துக்கு பாதுகாப்பு அளிக்கப் போகிறது என்பதை இப்போது சொல்ல முடியவில்லை.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு கொண்டு வந்த தேசிய மருத்துவக்காப்பீட்டுத்திட்டம், 2008-இல் இயற்றப்பட்ட அமைப்பு சாரா தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்டதாகையால், அதனைக் கோருவதற்கு சட்ட ரீதியான உரிமை மக்களுக்கு இருந்தது. தற்போது நிதியமைச்சர் அறிவித்திருக்கும் திட்டங்களுக்கு அத்தகைய சட்டரீதியான உத்திரவாதம் ஏதும் கிடையாது என்பதால், அரசு நினைத்தால் மறுகணமே இத்திட்டங்களைக் கைவிட்டு விட முடியும்.

சாந்தகுமார் கமிட்டியின் பரிந்துரைகளின்படி (இந்திய உணவுக் கழகத்தை மூடுவது, அரசுக் கொள்முதலைக் குறைத்து தனியார் கொள்முதலை ஊக்குவிப்பது, நியாயவிலைக் கடைகளை மூடுவது) உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பயன் பெறக்கூடிய ஏழைக் குடும்பத்தினரின் எண்ணிக்கையை 67% இலிருந்து கணிசமாகக் குறைப்பதே இந்த அரசின் திட்டம். ஆனால், பட்ஜெட் உரையில் நிதியமைச்சர் அது பற்றி வாய் திறக்கவில்லை. டெல்லி சட்டமன்றத் தேர்தலில் மக்கள் தங்களது கருத்தை உரக்கச் சொல்லியிருப்பதே நிதியமைச்சரின் தற்போதைய மவுனத்துக்குக் காரணமாக இருக்கக் கூடும். ஆனால், உணவுப் பாதுகாப்புக்காக ஒரு போராட்டம் நடத்துவதைத் தவிர்க்க முடியாது என்றுதான் தோன்றுகிறது.

> "மேக் இன் இந்தியா" திட்டம் வெற்றி பெற வேண்டுமானால், தொழில் துறையில் எவ்வித அரசாங்கத் தலையீடும் கூடாது, வேலையில்லாதவர்களுக்கு அரசாங்கம் சமூகப் பாதுகாப்பு வழங்கக்கூடாது என்று அரசு எண்ணுவது தெளிவாகத் தெரிகிறது.

அடிப்படையான சமூகப் பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீடுகளைப் பொருத்தமட்டில், ஏற்கெனவே வழங்கப்பட்டிருப்பவற்றை எல்லாம் ரத்து செய்யும் திசையில் செல்வது என்பதுதான் மத்திய அரசு கூறும் செய்தி. சமூகப் பாதுகாப்பு என்ற பெயரில் ஒப்புக்கு ஏதேனும் கொடுத்தாலும், அது நிச்சயம் சந்தை அடிப்படையிலான தீர்வுகளுடன் இணைக்கப்பட்டிருக்கும்.

அத்தகைய சமூக நலத் திட்டங்கள் எனப்படுபவை அனைத்தும், கார்ப்பரேட் நிறுவனங்களால் தலைமை தாங்கப்பட்டு, அரசால் பாதுகாப்பு வழங்கப்படும் ஆட்கொல்லி முதலாளித்துவத்துக்கு மேலும் ஊக்கம் கொடுப்பவையாகவே அமையும்.

(எகனாமிக் அண்டு பொலிடிகல் வீக்லி மார்ச்-21 இதழில் பேரா. கே.பி.கண்ணன் எழுதிய கட்டுரையின் சுருக்கப்பட்ட மொழியாக்கம்.)

### தனியார்மயம், கார்ப்பரேட்மயம் 2

# மருத்துவத் துறையைச் சீரழித்து வரும் நோய்கள்!

**நோயினால் சாவு என்ற நிலை மாறி, நோய்க்குச் செய்த செலவால் சாவு என்ற நிலையைத்தான் மருத்துவத் துறையில் புகுத்தப்பட்டுள்ள தனியார்மயம் ஏற்படுத்தியிருக்கிறது.**

ஏழைகளுக்கு மருத்துவ சிகிச்சை கிடைப்பதை உத்தரவாதப்படுத்துவதைக் கைவிடும் அரசு, மருத்துவ சுற்றுலாவை - வெளிநாட்டு நோயாளிகளுக்கு உலகத் தரத்தில் மருத்துவ சிகிச்சை அளிப்பதை - புதிய தேசிய நலக் கொள்கையாக அறிவிக்கிறது. மருத்துவ சுற்றுலாவை அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் வாய்ப்பாகக் கருதும் அரசு, அதனை ஏற்றுமதித் தொழிலுக்குச் சமமாகக் கருதி, அச்சிகிச்சையை மேற்கொள்ளும் கார்ப்பரேட் மருத்துவமனைகளுக்கு மேலும்மேலும் சலுகைகளை வாரி வழங்கி வருகிறது. இந்த சலுகைகளின் பொருள், இந்திய மக்களின் வரிப்பணத்திலிருந்து வெளிநாட்டுப் பயணிகளின் சிகிச்சைக்கு மானியம் வழங்குவதாகும்.

அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கு நமது ஆட்சியாளர்கள் எதனையும் செய்யத் தயங்கமாட்டார்கள். இந்தியர்களுக்கு எதற்கு இரண்டு சிறுநீரகங்கள், ஒன்றை விற்று நாட்டை வளமாக்கலாமே என்றுகூட விரைவில் அறிவிப்பு வெளிவரலாம். இந்திய அளவில் சிறுநீரக வியாபாரம் மருத்துவ சுற்றுலாவுடன் இணைந்திருப்பதைப் பொதுமக்கள் கவனத்தில் கொண்டால், நாம் மிகைப்படுத்திச் சொல்லவில்லை என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

சில பத்தாண்டுகளுக்கு முன் இதய நோய் அல்லது சிறுநீரகச் செயலிழப்பு போன்ற நிலைவந்தால், ஏழை எளிய மக்கள் விதி முடிந்துவிட்டது என்பதாக, மரணத்தை எதிர்கொள்வதாக இருந்த நிலை இன்று மாறியிருக்கிறது. ஆனால், இது எப்படிப்பட்ட மாற்றம்? காசு இருந்து செலவு செய்தால் இந்நோய்களைக் குணப்படுத்த இயலும் அல்லது மரணத்தை ஒத்திப்போட முடியும். மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றங்கள், அரசு ஆதரவு, காப்பீடு பாதுகாப்பு இல்லாத நிலையில், அடித்தட்டு மக்களை மட்டுமல்ல, நடுத்தர வர்க்கத்தைக்கூடப் பெரும் கடனாளியாக மாற்றிவிடுகிறது. மகாராஷ்டிரம், பஞ்சாப், ஆந்திரம் முதலான மாநிலங்களில் விவசாயிகளின் தற்கொலைகள் குறித்து விரிவாக ஆய்ந்து தொடர்ந்து எழுதிவரும் பத்திரிகையாளர் பி.சாய்நாத், இத்தற்கொலைக்கான காரணங்களில் ஒன்று மருத்துவச் செலவு என்று நிறுவியிருக்கிறார். அதாவது, நோயினால் சாவு என்ற நிலை மாறி, நோய்க்குச் செய்த செலவால் சாவு என்ற நிலையைத்தான் மருத்துவத் துறையில் புகுத்தப்பட்டுள்ள தனியார்மயம் ஏற்படுத்தியிருக்கிறது.

**அரசு மருத்துவமனைகளின் அவலநிலை**

தனியார் கார்ப்பரேட் மருத்துவமனைகளின் சேவையும் தரமும் அரசு மருத்துவமனைகளின் அவல நிலையைக் காட்டி நியாயப்படுத்தப்படுகிறது. அரசு மருத்துவமனைகளின் இந்தச் சீரழிவு நாளுக்குநாள் அதிகரித்து, அதனை நம்பியிருக்கும் ஏழை மக்களின் துன்பத்தை அதிகரிக்கிறது.

- பெரும்பாலான மருத்துவமனைகளில் புதிய நோய்களுக்கு வழிகோலும் வகையில் ஆபத்தான மருத்துவக் கழிவுகள் குவித்து வைக்கப்பட்டிருக்கின்றன. உயிருக்கே ஊறுவிளைவிக்கும் மருத்துவக் கழிவுகளும் இதில் அடங்கும்.

இந்தியாவின் வர்த்தகத் தலைநகரான மும்பையில் உள்ள மன்னர் எட்வர்ட் நினைவு மருத்துவமனையில் போதிய படுக்கை வசதியின்றித் தரையில் படுக்க வைக்கப்பட்டுள்ள நோயாளிகள். (கோப்புப் படம்)



● மருத்துவமனைகள் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பராமரிக்கப்படுவதில்லை. கழிப்பறைகளின் நிலைமையைச் சொல்லவே தேவையில்லை.

● பெரும்பாலும் அனைத்து மருத்துவமனைகளிலும் போதுமான குடிநீர் வசதி செய்து தரப்படவில்லை. இதனைப் பயன்படுத்திக் கொண்டு குடிநீர் வியாபாரம் பெருத்துப் போயிருக்கிறது.

● பெரும்பாலான அரசு மருத்துவமனைகளின் வாசல் பகுதிகளில் உணவு பண்டங்கள், குளிர் பானங்கள், பழரசங்கள் திறந்த நிலையில் விற்பனை செய்யப்படுகின்றன. ஈ மொய்க்கும் அந்த உணவை நோயாளிகளும் அவர்களைப் பார்க்க வருபவர்களும் வாங்கி உண்பதால் புதுப்புது நோய்கள் உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளது.




தரகு முதலாளிகளின் சங்கமான சி.ஐ.ஐ., மருத்துவ சுற்றுலா குறித்து சென்னையில் நடத்திய கருத்தரங்கம். (கோப்புப் படம்)

● சவக்கிடங்குகளில் சடலங்களைப் பாதுகாக்க போதிய குளிர்சாதன பெட்டிகள் இல்லை. இதனால் அதிக சடலங்கள் வரும் நேரங்களில் அவற்றை மூட்டையாகக் கட்டி ஓரமாகப் போட்டு விடுகின்றனர். மேலும், பிணவறைகளில் இருந்து வெளியேறும் கழிவுகள் தேங்கி நின்று, துர்நாற்றத்துடன் சுகாதார சீர்கேட்டைப் பரப்பி வருகிறது.

**நோயாளிகளின் பராமரிப்பு**

● நோயாளிகளுக்கான வழிகாட்டு மையமின்றி, அவர்கள் அலைய வைக்கப்படுகின்றனர். நோயாளிகளுக்கு நோயின் தன்மையும் விளக்கப்படுவதில்லை.

● வீல்சேர் மற்றும் ஸ்ட்ரெச்சர்கள் ஆகியவை போதிய அளவில் இல்லை. மின்தூக்கிகள் பெரும்பாலும் செயல்படுவதில்லை. இதனால் வயதானவர்கள், நடக்கமுடியாத நோயாளிகளை, அவர்களது உறவினர்கள் தோளில் சுமந்தோ, தூக்கியோ செல்ல வேண்டியிருக்கிறது.

● எக்ஸ்ரே, எம்.ஆர்.ஐ. ஸ்கேன் இயந்திரங்கள் அடிக்கடி பழுது ஏற்பட்டு, பெரும்பாலான நேரங்களில் மூடியே வைக்கப்படுகின்றன.

● சோதனை முடிவுகள் உடனடியாக வழங்கப்படுவதில்லை. இதனால் சிகிச்சை துவங்க தாமதமாகி, நோய் பாதிப்பு கடுமையாகிறது.

● போதிய அளவில் படுக்கை வசதி இல்லாததால், பல்வேறு சமயங்களில் நோயாளிகள் துண்டை விரித்துத் தரையில் படுக்க வேண்டியிருக்கிறது.

● நாய், எலி, பாம்பு, கொசு மற்றும் பல்வேறு வகையான பூச்சிகளின் புகலிடமாக மருத்துவமனைகள் விளங்குகின்றன.

● ஸ்ட்ரெச்சர், வீல்சேர் தள்ளுபவர் துவங்கி, மருத்துவமனையின் அத்துணை பிரிவு ஊழியர்களிடமும் ரூ.50 முதல் ரூ.500 வரை இலஞ்சமாக நோயாளிகளின் உறவினர்கள் அழ வேண்டியிருக்கிறது. அறுவை சிகிச்சைக்கு சில ஆயிரம் ரூபாய்கள் வரை பறிக்கப்படுகிறது.

● புறநோயாளிகளுக்கு சிகிச்சை வழங்க காலை 8 மணிக்கு வர வேண்டிய மருத்துவர்களுள் பலர் 11 மணிக்கு வந்து 12 மணிக்குக் கிளம்பி, தங்களது கிளினிக்குக்குப் போய்விடுகின்றனர்.

● மருந்து வழங்கும் பிரிவில் சாதாரண நோய்களுக்கு வழங்கும் மருந்துகள் மட்டுமே தாராளமாகக் கிடைக்கிறது. ஆனால், இதய நோய், தோல் நோய் உள்ளிட்ட சிறப்பு சிகிச்சைக்கான மாத்திரைகள் கிடைப்பதில் கடும் தட்டுப்பாடு நிலவுகிறது.

● முக்கிய மருந்துகள் மட்டுமல்லாது, கையுறை வரை வாங்கிவர வெளி மருந்துக் கடைகளுக்கு டாக்டர்கள் சீட்டு எழுதித் தந்து அனுப்புகின்றனர். வார்டுகளுக்கு வந்து டாக்டர்கள், நோயாளிகளைச் சந்தித்து மருந்துகள் ஆர்டர் எடுத்துச் செல்லும் புரோக்கர்கள் அதிகரித்துள்ளனர்.

● மருத்துவமனைக்குள் போலீசு நிலையம் இருந்தும் குழந்தைகள் கடத்தப்படுவதும், வார்டுகளில் பொருட்களும் பணமும் திருடப்படுவதும் நடந்து வருகின்றன.

**தாய்மையை வர்த்தகமயமாக்கிய தனியார்மயம்**

''பெண் என்ன பிள்ளை பெறும் இயந்திரமா?'' எனக் கேட்டார் பெரியார். ''ஆம்'' என்கிறார்கள் நவீன மருத்துவர்கள்.

குழந்தையின்மை ஒரு தனிநபரின் பிரச்சினையல்ல. இன்னும் சரியாகச் சொன்னால் அது பிரச்சினையே அல்ல. அதை ஒரு பிரச்சினையாகப் பார்ப்பது பெண்களுக்கு எதிரான சமூக அமைப்பே.

சமூகத்தின் இந்தச் சாபக்கேட்டை தமக்கான வர்த்தகமாக மாற்றிக் கொண்டார்கள் மருத்துவர்கள். குழந்தையின்மை என்

பதை பெரிய அவமானகரமான பிரச்சினையாக இன்னும் பெரிது படுத்தியதில் மலட்டுத் தன்மையைப் போக்கும் மகப்பேறு மருத்துவத்திற்கு மிக முக்கிய இடமுண்டு.

குழந்தை 'பாக்கியம்' இல்லாதவர்களுக்கு குழந்தை பெற்றுத் தருவதற்காக, இந்தியாவில் வாடகைத் தாய்மார்கள் உருவாகி வருகிறார்கள். அவர்கள் பத்து மாதம் சுமந்து பெற்றுத் தந்தால் கணிசமான பணம் தரப்படுகிறது.

ஆம், தாய்மை ஒரு தொழிலாக மாற்றப்பட்டிருக்கிறது. வாடகைத் தாய்மார்களுக்கு சொற்பமான பணத்தைத் தூக்கிப் போட்டுவிட்டு, பெரும் பணத்தை இடைத்தரகர்களாகச் செயல்படும் மருத்துவர்கள் சுருட்டிக் கொள்கிறார்கள்.

அதேசமயம், மிக வறுமையான குடும்பத்தில் ஒரு பெண்ணுக்கு குழந்தையில்லை என்றால், அதற்குத் தீர்வு காண்பதற்கு மகப்பேறு மருத்துவத்தில் தீர்வு இல்லை. காரணம், அந்த ஏழை பெண்ணிடம் பணம் இல்லை என்பதுதான்.

**''கிட்னி, லிவர், ஹார்ட். . '' – ரெண்டு வாங்குனா ஒண்ணு ஃப்ரீ**

வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கு நம்மூர் எளிய மக்களின் சிறுநீரகங்களையும் இதர உடல் உறுப்புகளையும் அறுத்து விற்பதற்கு இங்கு சில மருத்துவர்களும் தனியார் மருத்துவமனைகளும் தயங்குவதில்லை. இந்திய அளவில் கிட்னி வியாபாரம் மருத்துவ சுற்றுலாவுடன் இணைந்திருப்பதை நாம் கவனிக்க வேண்டும். பல விவசாயிகளின், நெசவாளர்களின் கிட்னி காணாமல் போனது இப்படித்தான்.

> **இந்தியாவின் மருத்துவத் தலைநகராக சென்னை கருதப்படுகிறது. இந்தப் 'பெருமை'யை சென்னை பெற்றதற்கான முக்கிய காரணம், உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைதான். சென்னை வில்லிவாக்கத்துக்கு மருத்துவத்துறை சூட்டியிருக்கும் பெயர் "கிட்னிவாக்கம்". அந்தளவிற்கு அங்கு கிட்னி வியாபாரம் அரசிற்கு தெரிந்தே நடந்தது.**

இந்தியாவின் மருத்துவத் தலைநகராக சென்னை கருதப்படுகிறது. இந்தப் 'பெருமை'யை சென்னை பெற்றதற்கான முக்கிய காரணம், உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைதான். சென்னை வில்லிவாக்கத்துக்கு மருத்துவத் துறை சூட்டியிருக்கும் பெயர் ''கிட்னி வாக்கம்''. அந்தளவிற்கு அங்கு கிட்னி வியாபாரம் அரசிற்குத் தெரிந்தே நடந்தது. 2004-ஆம் ஆண்டு சுனாமி சென்னை மீனவர்களின் வாழ்க்கையைக் குலைத்துப் போட, வறுமையைச் சமாளிக்க மீனவப் பெண்கள் பலர் தங்கள் கிட்னிகளை விற்றார்கள். அப்போதைய கமிஷனர், ''29 மீனவப் பெண்களிடம் கிட்னி திருட்டு நடந்துள்ளது. சென்னையில் ஐந்து மருத்துவமனைகளும், மதுரையில் மூன்று மருத்துவமனைகளும் இதில் ஈடுபட்டுள்ளன என்று எங்கள் விசாரணையில் தெரியவந்துள்ளது'' என்றார். இத்திருட்டையொட்டி 13 மருத்துவமனைகளின் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டாலும், அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி அனைவரும் தப்பித்துக் கொண்டனர். இப்போது கிட்னி திருடர்கள் சென்னை கடற்கரையில் இருந்து தங்களின் முகாமை நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரிக்கு மாற்றியிருக்கிறார்கள்.

**மருத்துவர்கள் – மருந்து கம்பெனிகளின் சட்டவிரோதக் கூட்டு**

மருத்துவர்கள் நோயாளிகளுக்கு மருந்துகளைப் பரிந்துரைக்கும்போது மருந்துகளின் பொதுப்பெயரில் அல்லாமல், வியாபாரப் பெயரில் பரிந்துரை செய்கின்றனர். நோயாளிகளுக்கு எந்த மருந்தை எதற்காகச் சாப்பிடச் சொல்கிறார்கள் என்றோ, எந்த மருந்தில் என்னென்ன கூட்டுப் பொருட்கள் கலக்கப்பட்டுள்ளன என்றோ, அது அவசியமா என்றுகூடத் தெரியாது. இந்த நிலையில் தன்னுடைய நோய்க்கு விலை குறைவான மருந்தே போதுமானது என்றாலும்கூட, மருத்துவர் பரிந்துரை செய்த விலையுயர்ந்த மருந்துதான் தன்னுடைய உடலுக்கு ஏற்றது, மற்றதை வாங்கிச் சாப்பிட்டால் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டுவிடும் என்றும் நோயாளி அஞ்சுகிறார்.

போபால் விஷவாயு படுகொலை சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நோயாளிகள், புதிய மருந்துகளைப் பரிசோதிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டதைக் கண்டித்து போபால் நகரில் நடந்த ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)



உதாரணமாக ரத்த அழுத்தத்தைக் கட்டுப் படுத்தும் மாத்திரைகள், ஒரு நிறுவனத்தால் 10 மாத்திரைகள் கொண்ட அட்டை வெறும் 25 ரூபாய்க்கும் இன்னொரு நிறுவனத்தால் ரூ.385-க்கும் விற்கப்படுகின்றன. நீரழிவைக் கட்டுப்படுத்த 10 மாத்திரைகள் ரூ.133 என்ற விலையில் முன்னணி மருந்து நிறுவனத்தால் விற்கப்படுகிறது. அதே மாத்திரை மற்றொரு நிறுவனத்தால் வெறும் 40 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. நோயாளிகளுள் பெரும்பாலோர் ஏழைகள்தான். மருத்துவத்துக்கே தங்களுடைய வருவாயில் அல்லது சேமிப்பில் அதிகபட்சம் செலவிடுகிறார்கள். மக்களுடைய நல்வாழ்வில் அக்கறை செலுத்த வேண்டிய எந்த அரசும் இந்த விலை வித்தியாசத்தைக் கண்டும் காணாமல் இருக்க முடியாது. ஆனால், மருந்து உற்பத்தி நிறுவனங்களோ போதுமான இலாபம் என்பதில் திருப்தி கொள்ளாமல், கொள்ளை லாபம் என்ற இலக்கில் ஏழை நோயாளிகளைச் சுரண்டுகின்றன. தனியார் நிறுவனங்களுக்குக் கட்டற்ற சந்தையை அமைத்துக் கொடுத்ததன் விளைவுதான் இது.



குஜராத்-அகமதாபாத் நகரைச் சேர்ந்த வாடகைத் தாய்மார்கள்.
(கோப்புப் படம்)

மருந்துகளின் விலை உயர்வுக்கு அப்பால், போலி மருந்துகளும், தடை செய்யப்பட்ட மருந்துகளும் இந்தியாவில் தாராளமான புழக்கத்தில் உள்ளன. பன்னாட்டு மருந்து கம்பெனிகளின் இலாபத்தை முன்னிட்டு போலி மருந்துகளின் புழக்கத்தைக் கட்டுப்படுத்த மேம்போக்கான நடவடிக்கைகளை எடுக்கத் துணியும் அரசும் அதிகார வர்க்கமும், அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் தடை செய்யப்பட்ட மருந்துகளை இந்தியாவில் விற்பனை செய்வதற்குச் சட்டபூர்வ அனுமதி அளிக்கின்றன.

மருத்துவத் துறையின் இன்னொரு அருவெறுக்கத்தக்க கோர முகம், அதில் புரையோடிப் போயிருக்கும் ஊழல். உலகெங்கும் ஆண்டுக்கு 7.2 இலட்சம் கோடி டாலர்கள் சுகாதாரத் துறைக்காகச் செலவிடப்படுவதாகக் கூறுகிறது, உலக சுகாதார நிறுவனம். இதில் 10 முதல் 25 சதவீதம் வரை ஊழலில் கரைந்துவிடுகிறது என்பது வெறும் பொருளாதாரம் சார்ந்த பிரச்சினையல்ல. ஒரு சாமானியக் குடும்பம் தன் சகல சந்தோஷங்களையும் இழக்க இன்றைக்கெல்லாம் அந்த வீட்டுக்கு ஒரு நோயாளி போதும். அதுவும் புற்று நோயாளிகள், சிறுநீரக நோயாளிகள் என்றால், உடலும் மனமும் துடிதுடிக்க அந்தக் குடும்பமே துயரத்தைச் சுமக்க வேண்டும். தமது பல நாள் உழைப்பின் மொத்த பலன்களையும் மருத்துவமனையின் மேஜையில் கொண்டுவந்து கொடுத்து, பரிதவித்து நிற்கும் இப்படிபட்ட துயரர்களிடம் நடத்தப்படும் ஊழல், கட்டணக் கொள்ளையைவிடக் கொடூரமானது.

## இலவச மருத்துவ சேவை: சலுகை அல்ல, உரிமை

சீனா அடிப்படையான மருத்துவ நலத்தில் பாராட்டத்தக்க தன்னிறைவைப் பெறக் காரணமாக இருந்தது அந்நாட்டு அரசின் விருப்புறுதி மட்டுமே அல்ல. அவர்கள் மேற்கொண்ட வழிமுறையும் முக்கிய காரணமாகும். அந்நாட்டில் மருத்துவம் தொடர்பாக ''ரூல் 57'' என்றொரு சட்டவழிமுறை ஏற்படுத்தப் பட்டது. இதன்படி, 1. ஆங்கில மருத்துவம் பயின்ற ஒவ்வொருவரும் கட்டாயமாக உள்நாட்டு மருத்துவமான அக்குபஞ்சர் உள்ளிட்ட ஆறு அங்கங்களை உள்ளடக்கிய பாரம்பரிய சீன மருத்துவத்தைப் பயின்றால் மட்டுமே மருத்துவப் பதிவு வழங்கப்படும். 2.வெளிநாட்டிலிருந்து ஆங்கில மருந்துகளை இறக்குமதி செய்ய வேண்டியுள்ளபோது, அது உள்நாட்டு மருந்துகளைவிட சிகிச்சையளவில் உயர்வான தென நிரூபித்தால் மட்டுமே உரிமம் கிடைக்கும். 3.கிராமப்புறங்களிலும் தொழிலமைப்புகளிலும் சுமார் ஒன்றரை இலட்சம் பேர் அடையாளம் காணப்பட்டு வெறுங்கால் மருத்துவர்கள் என அங்கீகரிக்கப்பட்டு, பகுதி நேரமாக மருத்துவப் பணியாற்றப் பணிக்கப் பட்டனர். வெறுங்கால் மருத்துவர்கள் தொடர் புத்தாக்கப் பயிற்சிகளின் ஊடாக தங்களை ஊரக மருத்துவ நலப் பயிற்சியாளர்களாக வளர்த்துக் கொள்ள வாய்ப்பளிக்கப் பட்டனர். இப்படி படிப்படியாகத் தன்னை வளர்த்துக் கொண்ட வெறுங்கால் மருத்துவர்களில் ஒருவர்தான் தற்போதைய சீனாவின் மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சூ சென். மருத்துவத்தை சமூகமயமாக்கும் நோக்கத்தோடு 1978-இல் நடந்த சர்வதேச நாடுகளின் கூட்டமொன்றில் உருவாக்கப்பட்ட அல்மா ஆடா தீர்மானத்திற்கு அடிப்படையாக இருந்தது சீனாவின் வெறுங்கால் மருத்துவ முறைதான்.

இந்தியாவில் தற்பொழுது நடைமுறையிலுள்ள கார்ப்பரேட் மருந்து கம்பெனிகள், தனியார் மருத்துவமனைகள் நலன் சார்ந்த சுகாதாரக் கொள்கைக்குப் பதிலாக மக்கள் நலனை முன்னிறுத்தும் வெறுங்கால் மருத்துவர்கள் போன்ற கொள்கை வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்பொழுதுதான் அனைவருக்குமான அடிப்படை மருத்துவ மற்றும் சுகாதார நலனை உறுதிப்படுத்த முடியும்.

(முற்றும்)

● கே.எஸ்.

# வளர்ச்சியா, பேரழிவா?

முதலாளிகளுக்கு ஆதரவாக தொழிலாளர் நலச் சட்டங்களைத் திருத்துவது; கேள்வி கேட்பாரின்றி விவசாய விளைநிலங்களைப் பறித்தெடுக்க நிலம் கையகப்படுத்தும் சட்டத்தில் திருத்தம் செய்து அவசர சட்டம்; நிலக்கரி மற்றும் பாக்சைட் போன்ற கனிம வளங்களைச் சூறையாடுகின்ற ஏல முறைக்கான அவசர சட்டம்; இன்சூரன்சு, பாதுகாப்புத் துறைகளில் அந்நிய நேரடி முதலீட்டினை அதிகரிக்கும் அவசரச் சட்டங்கள்; உலகின் மிகப்பெரிய இரயில்வே துறையை அந்நிய கம்பெனிகளுக்கு பலி கொடுக்கின்ற திட்டம்; ரேசன் கடைகளுக்கும் இந்திய உணவு கழகத்துக்கும் சமாதி கட்டுகின்ற சாந்தகுமார் கமிட்டி அறிக்கை; மருத்துவ சேவைகள் அனைத்தையும் கார்ப்பரேட்டுகளின் வியாபாரத்துக்கு காவு கொடுக்கின்ற தேசிய சுகாதாரக் கொள்கை — என அடுத்தடுத்த நாசகரத் தாக்குதல்களைத் தொடுத்து வருகிறது மோடி அரசு. கார்ப்பரேட் முதலாளிகளுக்கு அடிமைச் சேவகம் செய்வதில் முந்தைய மன்மோகன் சிங்கை காட்டிலும் வெறித்தனமாகச் செயல்படுகிறது, மோடி அரசு.

நாட்டின் இயற்கை வளங்களைச் சூறையாடுவதோடு, மக்களை மரணக்குழியில் தள்ளும் இத்தகைய மறுகாலனியத் தாக்குதலை எதிர்த்து முறியடிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, மார்ச்-23 ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளி பகத்சிங் நினைவு நாளில் ''மோடியின் ஆட்சி; 'தேசிய'ப் பேரழிவு'' என்ற முழக்கத்தின் கீழ் தமிழகம் மற்றும் புதுச்சேரி பு.ஜ.தொ.மு.வினர் இணைந்து தமிழகத்தின் திருச்சி, சென்னை ஆகிய இரு மையங்களில் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.




- பு.ஜ.செய்தியாளர்

### பகத் சிங், ராஜகுரு, சுகதேவ்:

# ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளிகளைப் பூஜைப் பொருளாக்க அனுமதியோம்!

வெறுமனே விடுதலைப் போராட்டம் என்று காந்தியும் காங்கிரசு கயவாளிக் கூட்டமும் வெற்றுச் சவடால் அடித்துக் கொண்டிருந்த வேளையில், ஏகாதிபத்திய எதிர்ப்பை நிகழ்ச்சி நிரலில் முன்னிறுத்தியவர் பகத்சிங். வெள்ளையனை விரட்டுவதோடு நமது கடமை முடிந்துவிடுவதில்லை, அதற்குப் பின்னர் அமையும் அரசு இறையாண்மையோடும், பாட்டாளி வர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாக அமைய வேண்டும் என்பதிலும் முனைப்பு காட்டியவர் அவர்.



பகத் சிங் எதை சாதிக்க விரும்பினாரோ, அதற்கு நேர்மாறாக, மறுகாலனியாக்கக் கொள்கைகளைத் திணித்து நாட்டின் இறையான்மையை அழித்து பன்னாட்டு கம்பெனிகளின் வேட்டைக்காடாக நாட்டை மாற்றிவரும் மோடி, வெட்கங்கெட்ட முறையில் பகத்சிங் நினைவுநாள் நிகழ்ச்சியில் பங்கேற்றிருப்பதும் பகத்சிங் பற்றி பேசுவதும் அருவருப்பானது மட்டுமல்ல; அயோக்கியத்தனமும் கூட.

இதனை அம்பலப்படுத்தியும், நாட்டின் மீதும் மக்களின் மீதும் ஏவப்படும் மறுகாலனியத் தாக்குதலைத் தகர்த்தெறிய பகத்சிங்கின் பாதையில் நாம் அணி திரள வேண்டுமென்று அறைகூவல் விடுத்தும், மார்ச் 23 அன்று ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளிகளான பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோரின் நினைவுநாளை மறுகாலனியாக்க எதிர்ப்பு தினமாக கடைபிடித்தன, ம.க.இ.க., பு.மா.இ.மு., வி.வி.மு., பெ.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள். இதற்கு முன்னதாக, விரிவான பிரச்சார இயக்கத்தை மேற்கொண்ட இவ்வமைப்பினர், சென்னை, வேலூர், கோவை, விழுப்புரம் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஆர்ப்பாட்டங்களையும், தெருமுனைக்கூட்டங்களையும் நடத்தினர்.

- பு.ஜ.செய்தியாளர்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...



"வகுப்பறையைக் கட்டு! வாத்தியாரைப் போடு!"
ஆகஸ்டு 15 அன்று கல்வி உரிமைக்கான போராட்டம்!
(கோப்புப் படம்)

**அரசுப் பேருந்துகளை ஓட்டை உடைசலாக ஓடவைத்து அதன் மூலம் தனியார், ஆம்னி பேருந்து முதலாளிகளின் கொள்ளைக்கு உதவுவதைப் போலவே, தனியார் கல்வி கொள்ளைக்காக அரசுப் பள்ளிகள் ஒழித்துக்கட்டப்படுகின்றன.**

● தமிழகம் முழுவதுமுள்ள 25,200 அரசு மற்றும் அரசு உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகளில் 10,000 பள்ளிகளில் இரண்டு ஆசிரியர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையில் இரு பதுக்கும் மேற்பட்ட பாடங்களை இந்த இரண்டு ஆசிரியர்கள் மட்டுமே எடுக்க வேண்டிய நிலையில், ஒருவர் விடுப்பு எடுத்தாலோ அல்லது மாற்றுப் பணிகளுக்குச் சென்று விட்டாலோ அன்று பள்ளிக்கு ஏறத்தாழ விடுமுறைதான்.

● ஓராசிரியர் பள்ளிகளே இருக்கக் கூடாது எனத் தமிழக அரசு கூறி வந்தாலும், வத்திராயிருப்பு அருகேயுள்ள ரெங்க பாளையம் தொடக்கப்பள்ளி, பரமக்குடி சிவானந்தபுரம் நகராட்சி தொடக்கப்பள்ளி ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களும், பெற்றோர்களும் தமது பள்ளிகள் ஓராசிரியர் பள்ளிகளாக இயங்கி வருவதைக் கண்டித்துப் போராட்டங்களை நடத்தியுள்ளனர்.

● தமிழகத்திலுள்ள 2,600 அரசு மேநிலைப் பள்ளிகளுள் 1,400 பள்ளிகளில் கணினி அறிவியல் பாடப் பிரிவுக்கு ஆசிரியர்கள் அறவே நியமிக்கப்படாததால் கணினி ஆய்வகங்கள் மூடிக் கிடக்கின்றன. ஜனவரி 2014-க்குள் கணினி ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என சென்னை உயர்நீதி மன்றம் உத்தரவிட்டும் தமிழக அரசு ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

● தமிழகமெங்குமுள்ள 300 அரசுப் பள்ளிகள் தலைமை யாசிரியர்களே இல்லாமல் இயங்கி வருகின்றன. இந்தக் கல்வியாண்டுக்கான அரையாண்டுத் தேர்வுகள் முடிந்த பிறகும் இப்பள்ளிகளில் தலைமையாசிரியர்கள் நியமிக்கப்பட வில்லை. பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதும் மாணவர்களின் நிலையைக் கருதியாவது உடனடியாகத் தலைமை யாசிரியர்களை நியமிக்க வேண்டுமென ஆசிரியர் சங்கங்கள் கோரியுள்ளன.

— இவை அங்கொன்றும் இங்கொன்றுமான புள்ளி விவரங்கள் அல்ல. தமிழகத்திலுள்ள அரசுப் பள்ளிகளின் அவல நிலையை எடுத்துக்காட்டும் குறுக்குவெட்டுத் தோற்றமிது. கட்டிட வசதி இல்லாமல் மரத்தடியில் நடக்கும் பள்ளிக்கூடங்கள், ஆய்வுக்கூடங்கள், விளையாட்டு மைதானங்கள், குடிநீர், கழிப்பறை வசதிகள் இல்லாத பள்ளிக் கூடங்கள் என ஓராயிரம் பிரச்சினைகளை அரசு பள்ளி மாணவர்கள் எதிர்கொள்கின்றனர்.

அரசுப் பேருந்துகளை ஓட்டை உடைசலாக ஓடவைத்து அதன் மூலம் தனியார், ஆம்னி பேருந்து முதலாளிகளின் கொள்ளைக்கு உதவுவதைப் போலவே, தனியார் கல்விக் கொள்ளைக்காக அரசுப்பள்ளிகள் ஒழித்துக் கட்டப்படு கின்றன. தனியார்மயத்தை மேலும் மேலும் தீவிரப்படுத்து வதற்காகவே ஒவ்வொரு பட்ஜெட்டிலும் கல்வித் துறைக்கு ஒதுக்கப்படும் நிதியைப் படிப்படியாகக் குறைப்பது மட்டு மின்றி, மைய அரசால் ஒதுக்கப்பட்ட 4,400 கோடி ரூபாயையும் திருப்பியனுப்பியிருப்பதன் மூலம், நான் கல்வி வியாபாரிகளின் கையாள்தான் என்று ஐயந்திரிபற நிரூபித்திருக்கிறது ஜெ அரசு.

முதல்வர் பதவியில் அமர்ந்தவுடனேயே பொதுப் பாடத் திட்ட முறையைப் (சமச்சீர் கல்வி) புதைகுழிக்கு அனுப்ப முயன்று தோற்றுப் போன ஜெயா கும்பல், அரசுப் பள்ளிகளை முடிந்த மட்டும் ஒழித்துக் கட்டுவதையே தனது கொள்கையாகக் கொண்டு செயல்படுகிறது.

சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான ஏழு பள்ளிகளில் காணப்படும் குறைவான மாணவர் சேர்க்கையைக் காட்டி, அவற்றின் நிர்வாகத்தைத் தனியார்வசம் ஒப்படைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. போதிய மாணவர்கள் சேர வில்லை என்ற காரணத்தைக் காட்டி, தமிழகமெங்கும் ஏறத்தாழ 1,000 பள்ளிகள் மூடப்பட்டு விட்டன. தோசையைத் திருப்பிப் போடுவது போல, மாணவர்கள் சேர்க்கை குறைந்து விட்டதைக் காட்டி 1,000 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப் படாமல் திரும்பப் பெறப்பட்டுள்ளன.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கும் தனியார் பள்ளி மாண வர்களுக்கும் இடையே கற்கும் திறனில் பெருத்த வேறுபாடு இல்லை என்பதைப் பல ஆய்வுகள் மெய்ப்பித்த பிறகும், தனியார் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை விகிதம் அரசுப் பள்ளிகளைவிட அதிகரித்துக் கொண்டே போவதற்கு பெற்றோர்களின் ஆங்கில மோகம் மட்டுமின்றி, அரசு பள்ளி களில் காணப்படும் இந்தச் சீரழிவிற்கும் முக்கிய இடமுண்டு. இச்சீரழிவை மென்மேலும் தீவிரப்படுத்துவதன் வழியாகத் தமிழக மாணவர்களை வேகவேகமாகக் கல்விக் கொள்ளையர் களிடம் தள்ளிவிடுகிறது, மக்கள் முதல்வரின் ஆட்சி.

● குப்பன்

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/15-17. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/15-17.

# காக்கி விசப்பூச்சிகள்!

இரக்கமற்ற கொடூரர்கள், போலீஸ் சீருடை அணிந்த மிருகங்கள், வழக்கிலிருந்து தப்பிக்கும் வழி தெரிந்தவர்கள் - இவை புதுச்சேரி போலீசார் ஆறு பேரின் முன்ஜாமீன் மனுவை நிராகரித்து உயர்நீதிமன்ற நீதிபதி தேவதாஸ் கூறியுள்ள கருத்துக்கள்.

14 வயது பள்ளிச் சிறுமிகளை வன்புணர்ச்சிக்குள்ளாக்கி, அவர்களை விபச்சாரத்திலும் தள்ளிய இன்ஸ்பெக்டர்கள், சப் இன்ஸ்பெக்டர்கள், ஏட்டுகள், கான்ஸ்டபிள்கள்தான் அந்தக் குற்றவாளிகள். இவர்கள் செப்டம்பர் மாதமே சஸ்பெண்ட் செய்யப்பட்டு விட்டனர். ஆனால் கடந்த 6 மாதங்களாக இவர்களைப் பிடிக்க முடியவில்லையென்று கதையளந்து வந்தது புதுவை போலீசு. தற்போது நீதிமன்றம் இவர்களுக்கு முன்ஜாமீன் மறுக்கவே, வேறு வழியின்றி இவர்களைத் தலைமறைவுக் குற்றவாளிகள் என்று அறிவித்து, பிடித்துக் கொடுக்கும் பொதுமக்களுக்கு பரிசு என்றும் அறிவித்திருக்கிறது, இந்த வழக்கை விசாரித்து வரும் சி.பி.சி.ஐ.டி.

கடந்த ஏப்ரல் 1 - ஆம் தேதியன்று, புதுச்சேரியில் 14 வயதான இரண்டு மாணவிகள், தங்களை ஒரு கும்பல் கட்டாயப்படுத்தி விபச்சாரத்தில் தள்ளியிருப்பதாகக் கூறி, குழந்தைகள் ஹெல்ப்லைன் என்ற அமைப்பிடம் தஞ்சம் புகுந்தனர். போலீசு அதிகாரிகளும் விபச்சாரத் தரகர்களும் அடங்கிய ஒரு கும்பல், தங்களுக்கு மயக்க மருந்து கொடுத்து, வல்லுறவு கொண்டு அதனை வீடியோ எடுத்து, இணையத்தில் பரப்புவோமென மிரட்டி விபச்சாரத்தில் ஈடுபடுத்தியதுடன், சக மாணவிகளையும் அழைத்து வரவைத்து, அவர்களையும் விபச்சாரத்தில் தள்ளியிருப்பதாகப் புகார் செய்தனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட ஒரு சிறுமிக்கு குழந்தையும் பிறந்து அது காப்பகத்தில் இருக்கிறது.

இப்புகார் மீது போலீசு நடவடிக்கை எடுக்காததால், மகளிர் நலத்துறையிடம் அச்சிறுமிகள் புகார் செய்தனர். பின்னர் பல வேறு அமைப்புகள் போராடின. வேறுவழியின்றி சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. யோக்கிய சிகாமணிகளாக சித்தரிக்கப்படும் சி.பி.சி.ஐ.டி. போலீசோ, பணியிடை நீக்கம் செய்யப்பட்ட 15 போலீசாரின் குற்றங்களை மறைத்து, அவர்கள் விபச்சாரக் கும்பலுடன் தொடர்பு வைத்திருந்தனர் என்று மட்டும் வழக்கு பதிவு செய்தது. 15 போலீசாரின் புகைப்படங்களைச் சிறுமிகளிடம் காட்டியதாகவும், தங்களை வல்லுறவு செய்த போலீசார் என்று அவர்களில் யாரையும் அச்சிறுமிகள் அடையாளம் காட்டவில்லையென்றும் சொல்லி, குற்றவாளிகளைத் தப்பவைக்க முயன்றது. இதனை நிராகரித்த உயர்நீதிமன்றம், அடையாள அணிவகுப்பு நடத்துமாறு உத்தரவிட்டது. பிறகு, 8 போலீசாரை அச்சிறுமிகள் அடையாளம் காட்டினர். இவர்களில் 6 பேர்தான் இப்போது தலைமறைவாம்!

14-வயது பள்ளிச் சிறுமிகளை வன்புணர்ச்சிக்குள்ளாக்கி, அவர்களை விபச்சாரத்திலும் தள்ளிய கொடூர மிருகங்கள்.


யுவராஜ்
(இன்ஸ்பெக்டர்)


சுந்தர்
(இன்ஸ்பெக்டர்)


அனுசுபாஷா
(இன்ஸ்பெக்டர்)


ராஜாராம்
(சப்-இன்ஸ்பெக்டர்)


பண்டரிநாதன்
(ஏட்டு)


குமாரவேல்
(ஏட்டு)

ஆறு பேரில் ஒருவனான ஓய்வு பெற்ற எஸ்.ஐ. ராஜாராமன், அந்தியூர் விஜயா வல்லுறவு வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று, பின்னர் மேல் முறையீட்டில் உயர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டு மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டவன். போலீசின் குற்றத்தை போலீசே விசாரிக்கும் இந்த நாடகத்தில் நாளை இவர்களும் விடுவிக்கப்படலாம்.

கோவையில் ஒரு மார்வாடி சிறுமியை வல்லுறவு செய்து கொன்ற ஓட்டுனருக்கு என்கவுன்டர் என்றால், இந்தக் காவல் நாய்களை என்ன செய்வது? நினைக்கவே நெஞ்சு நடுங்கும் குற்றத்தைக் கூசாமல் செய்திருக்கும் அருவருக்கத்தக்க இந்த விசப்பூச்சிகளை என்றைக்கு நசுக்குவது? கிரிமினல்களின் பிறப்பிடமான போலீசு நிலையத்தைக் காவல் நிலையம் என்றும், காக்கி உடைக் கிரிமினல்களைச் சட்டம் - ஒழுங்கின் காவலர்களென்றும், இன்னமும் சித்தரித்துக் கொண்டிருக்கிறார்களே, அத்தகைய குற்றக் கூட்டாளிகளை என்ன செய்வது?

●